REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 மே 29 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
92
வரு. 92 இல. 127
Wednesday 29, May, 2024
20 பக்கங்கள்
50/-

## ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் உரிய காலத்தில் நடத்தப்படும்

### பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா

அரசியலமைப்பின் படி ஜனாதிபதித் தேர்தல் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நடத்தப்படும் எனவும், அதனை ஒத்திவைக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

நிமல் லான்சா ஊடகங்களுக்கு விசேட அறிவித்தல் ஒன்றை

08

### அரச சேவை சம்பள முரண்பாட்டு தீர்வுக்கு

# விசேட நிபுணத்துவக் குழுவை நியமிக்க அரசாங்கம் தீர்மானம்

### திறைசேரி செயலாளர் தலைமையில் நியமிக்க ஜனாதிபதி பணிப்பு

### கல்விசாரா ஊழியர்களை கடமைக்கு திரும்புமாறும் அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நிபுணத்துவ குழுவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இதற்கான அங்கீகாரமும் வழங்கப்பட்டது.

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொண்டே, இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

**2025 வரவு செலவு திட்டத்தில் முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும் ஏற்பாடு**

சம்பள முரண்பாடுகள் பற்றிய விடயங்களை ஆராய்ந்து 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கேற்ற வகையில், அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே நிபுணத்துவக் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் அடங்கிய இக்குழுவை, விரைவில் நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

08

## சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பணிப்பு

### உயிரிழந்தவர் குடும்பத்துக்கு ரூ. 2,50,000 இழப்பீடு



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறும், அனர்த்தம் தணியும் வரை நிவாரண சேவைகளை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலையால், நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் (27) வரையில் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ சேவை மத்திய நிலையம் அறிவித்துள்ளது. பலத்த காற்று வீசியதால் ஏற்பட்ட விபத்துகளில் 07 பேரும் படகு கவிழ்ந்ததில் ஒருவரும் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களுக்கு உடனடி இழப்பீடு வழங்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுத்தார்.

இதற்கமைய உயிரிழந்தவர்களுக்காக அனர்த்த நிவாரண முகாமைத்துவ நிலையத்தினால் 2,50,000 ரூபா நட்டஈடு வழங்கப்படவுள்ளதுடன், 25,000 ரூபா முன்பணமாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் (27) வரை 11,326 குடும்பங்களைச் சேர்ந்த 42,640 பேர், பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதோடு, மக்களின் சுகாதார மற்றும்

08

## காஸா சிறுவர் நிதியம்: இதுவரை ரூபா 127 மில்லியன் நன்கொடை

### பங்களிப்பு காலம் மே 31 வரை நீடிப்பு



காஸா சிறுவர் நிதியத்துக்கு இதுவரை 127 மில்லியன் ரூபா நன்கொடையாக கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் எண்ணக்கருவின்படி 2024,03,04 இல், இச்சிறுவர் நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. காஸா யுத்த சூழ்நிலையில் சிக்கியுள்ள சுமார் ஒரு மில்லியன் சிறுவர்களின் அவல நிலைக்கு உதவும் நோக்குடன் இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.

குறிப்பாக தண்ணீர், உணவு மற்றும் மருத்துவ வசதிகளின்றி அவதியுறும் சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

கடந்த இப்தார் கொண்டாட்டத்திற்காக ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவை, கடந்த வருடம் இப்தாருக்காக ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா நிதி, முதற்கட்டமாக ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண மற்றும் பணி முகவர் நிறுவனத்தின் (United

08

## G.C.E உயர்தர பெறுபேறுகள் வார இறுதியில் வெளியீடு

2023 கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை இவ்வார இறுதியில் வெளியிட எதிர்பார்ப்பதாக, இலங்கை பரீட்சைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி

08

## வடக்கு ரயில் பாதை அபிவிருத்தி ஆகஸ்ட் மாதத்தில் நிறைவடையும்

### பொசன் போயாவுக்கு விசேட பஸ் சேவை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வடக்குக்கான ரயில் பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் பொசன் போயாவுக்கு முன்னர் நிறைவடையாது என்றும், ஆகஸ்ட் மாதமளவிலேயே இந்தப் பணிகள் நிறைவடையுமென்றும் அமைச்சரவைப்

08

## மறு அறிவித்தல் வரை கடலுக்கு செல்லவேண்டாம்



தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து, நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பும் வங்காள விரிகுடா மற்றும் அரபிக்கடல் ஆகிய பகுதிகள் கொந்தளிப்பாக உள்ளன. இதனால், அவ்வப்போது மணிக்கு 60 முதல் 70 கிலோ

08

## IMF நிறைவேற்று சபையின் அனுமதியை ஜூனில் பெறலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தனியார் கடன் வழங்குநர்களின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தை விரைவில் நிறைவடையும் என, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் ஜூன் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு கூட்டம் நிறைவடைவதற்கு முன்னர், நாட்டின் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்காக பரிஸ் கிளப் மற்றும் சீன.

08

## துரோகிப் பட்டத்துக்குப் பயந்து உண்மையை மறைக்க மாட்டேன்

### 2005 ஜனாதிபதி தேர்தலில் வடக்கில் நடந்தது சகலருக்கும் தெரியும்



வடமாகாணத்தில் 2005 இல், என்ன நடந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான். என்னை, துரோகியென்று கூறிவிடுவாரெனப் பயந்து உண்மையை வெளிப்படையாகச் சொல்லத் தயங்கப்போவதில்லை என, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 2005 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்துக்கு வடக்கு

08



### 55 வயது நிறைவடைந்த

## அனைத்து தொழிலாளருக்கும் சமூக பாதுகாப்பு நிவாரணம்

பலதரப்பட்ட தொழில் துறைகளிலும் பணியாற்றும் 55 வயது நிறைவடைந்த அனைத்து தொழிலாளர்களுக்கும், சமூக பாதுகாப்பு நிவாரணம் வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"கருசரு" வேலைத்திட்டத்துக்கு இணையாக செயற்படுத்தப்படவிருக்கும் இத்

08

## ஸ்ரீ.சு.க தலைவராக செயற்பட அமைச்சர் விஜேயதாசவுக்கு தடை

### நீதிமன்றத்தில் மேலும் ஒரு தடையுத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் உறுப்பினராகவும் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ செயற்படுவதைத் தடுக்கும் வகையில், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நேற்று மேலும் ஒரு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டு மனுவுக்கமைய, நீதிமன்றம் மேற்படி தடை யுத்தரவு

08

### கிராம சேவகர்களின் பிரச்சினைகள்

## ஏனைய அரச சேவைகளுடன் முரண்படாத வகையில் தீர்வு



அரச சேவையின் ஏனைய சேவைகளுடன் முரண்படாத வகையில், கிராம சேவகர் சேவையில் உள்ள பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகளை முன்வைக்குமாறு, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதுள்ள பிரச்சினைகளை பேசித் தீர்த்து பொதுவான உடன்பாட்டை எட்டுமாறும் அதிகாரிகளிடம் வலியுறுத்தினார். கிராம சேவகர் சேவையில்

08

## கொவிட் 19 ஐ, விட பேரழிவு தரும் புதிய ‘Disease X’ வைரஸ் தொற்று

### தாக்குப்பிடிக்க உலகம் தயாரில்லை - வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

கொவிட்19 தொற்றை விட பேரழிவு தரும் புதிய நோயை தாக்குபிடிக்க உலகம் தயாராக இல்லையென, வைத்திய நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

புதிய தொற்றுக்கு டிஸீஸ் எக்ஸ் (X) என, சமூக வலைத்தளத்தில் பெயரிட்டுள்ளனர். உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ், இந்த ‘Disease X’ க்கு உலகம் தயாராக இல்லை

08

03

### இரண்டு தேர்தல்களையும் இரு வருடங்களுக்கு ஒத்திப்போடவும்

ஐ.தே.க. கோரிக்கை விடுக்கிறது



03

### பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு புதிதாக கடன் வசதிகள் திட்டம்

வர்த்தக வாய்ப்புகளுக்கும் ஏற்பாடு

## மத்திய வங்கி நிலையான கடன், வைப்பு வீதங்களில் மாற்றமில்லை



மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை அவற்றின் தற்போதைய நிலைகளில் பராமரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கூட்டத்தில் (27) இத்தீர்மானம் மேற்கொள்ளப் பட்டதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதங்கள் முறையே 8.50 சதவீதம் மற்றும் 9.50 சதவீதமாக பராமரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ISIS: கொழும்பில் கைதானவரின் இரு சகாக்கள் சிலாபத்தில் கைது



ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தாரென்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பில், கைது செய்யப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததாகக் கூறப்படும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் சிலாபத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவே, இவர்களை கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட சகோதரர்களில் ஒருவர் மாகாணம் ஒன்றில் மீன்பிடி துறைமுகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், மற்றைய சகோதரர் கொழும்பிலுள்ள

08

## ‘மலையக பத்தாண்டு’ திட்டத்துக்கு 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

### 97 GS பிரிவுகளில் 13,612 திட்டங்கள்; இதுவரை ரூ. 9,410 மில். விடுவிப்பு



‘மலையக பத்தாண்டு’ விசேட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டத்துக்காக இவ்வருடம் 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், 9,410 மில்லியன் ரூபா அபிவிருத்தி திட்டங்களுக்காக மாவட்ட செயலாளர்களிடம் விடுவிக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதன் கீழ், 13,612 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வேலைத்திட்டங்களை ஜூலை 31க்கு முன்னர் நிறைவு செய்யுமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். இதன்படி, திட்டப்பணிகள் விரைவில் நிறைவு செய்யப்படுமென

08

92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# இசைத்தட்டு வெளியீடும் ஊடகவியலாளர் சந்திப்பும்















இலங்கையின் முதல் தமிழ் பெண் இசையமைப்பாளர் Queen Cobra பிரபாலினி பிரபாகரன் வழங்கும் இன்னிசை மழை இசை நிகழ்ச்சியும், ஈழத்து மெல்லிசை மன்னர் எம். பி பரமேஸின் 'உனக்கு தெரியுமா' பாடலுடன் 50 பாடல்கள் அடங்கிய 50 வருட இசைத்தென்றல் தொடரின் இசைத்தட்டு வெளியீடு மற்றும் ஊடகவியலாளர் சந்திப்பு நிகழ்வு என்பன திங்கட் கிழமை (27) மாலை கொழும்பு வெள்ளவத்தை சபையர் ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர்களான தமுகூ தலைவர் மனோ கணேசன், மமமு தலைவர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட இந்நிகழ்விற்கு மும்மொழிகளின் எழுத்தாளரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவருமான முனைவர் சதீஷ்சிவலிங்கம் தலைமை தாங்கினார். புரவலர் புத்தகப்பூங்கா நிறுவனர் புரவலர் ஹாசிம் உமர் இசைத்தட்டுக்களின் முதற் பிரதிகளை பெற்றுக் கொண்டார்.

# அநுராதபுரம் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு வீடு

**திறப்பனை தினகரன் நிருபர்**



அநுராதபுரம் மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி பற்றிய கூட்டம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் அண்மையில் நடைபெற்றது. "உனக்கொரு வீடு நாளை ஒரு நாடு", என்ற வீட்டு உதவித் திட்டத்தின் கீழ் கடந்த 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டத்தின் கீழ், தற்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடுகளின் எண்ணிக்கை 595 ஆகும்.

அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அமுல் படுத்தப்படும் இந்தத் திட்டம், தற்போது 694 கிராம உத்தியோகத்தர் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 763 பயனாளிகளைக் கொண்டுள்ளது. இதற்காக 383.40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

2024 ஆம் இவ் வருடத்தின் "சேவாபிமானி என்ற அனைவருக்கும் வீடு என்ற கடன் திட்டத்தின் கீழ் அநுராதபுர மாவட்டத்தின் 22 பிரதேச செயலக பிரிவுகளிலும் கடன் வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 67 ஆகும். இதற்காக 49.32 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் 29.85 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு இதுவரை 19 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 48 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஜே.ஏ.ஏ. பிரசன்னா குறிப்பிட்டார்.

# ஆரம்ப பாடசாலைக்கு அருகில் துப்பாக்கிச்சூடு

## வெலிகம பகுதியில் சம்பவம்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம படவல பாதேகம பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் துப்பாக்கிச் சூடு சம்பவமொன்று (27) இடம்பெற்றுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இனம் தெரியாத இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து இந்த துப்பாக்கிச் சூட்டை நடாத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். மிதிகம பகுதியைச் சேர்ந்த சுதேச் மது சங்க எனும் 30 வயது மதிக்கத்தக்க ஒருவர் தனது இரண்டு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அழைத்துச் சென்ற சமயமே, இவரை நோக்கியே இத்துப்பாக்கிச் சூட்டுப் பிரயோகம் நடாத்தப்பட்டுள்ளது. எனினும் இலக்கு தவறியதன் காரணமாக அவர் எவ்வித காயமுமின்றி மயிரிழையில் உயிர் தப்பிக் கொண்டார். இவர் மீதான துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

துப்பாக்கிச் சூட்டை நடாத்தியவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லையெனவும், அவர்களை தேடிக் கைது செய்ய நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நெல்லியகம கிராம வீதிகள் காபட் வீதியாக புனரமைப்பு

## இஷாக் ரஹ்மான் எம்.பிக்கு மக்கள் பாராட்டு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பலாகல பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட நெல்லியகம கிராமத்தின் உள்ளக பிரதான வீதிகளை புனரமைத்துத் தருமாறு கோரி பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானிடம் விடுத்த வேண்டுகோளின் பயனாக அவ் வீதிகள் கார்பட் வீதியாக மாற்றப்பட்டு முழுமையான புனரமைப்பு வேலைகளும் கடந்த வாரம் நிறைவடைந்ததையிட்டு மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

பல வருடங்களுக்கு மேலாக மக்கள் திருப்தியாக பயணம் செய்ய முடியாத அளவுக்கு குண்டும் குழியுமாக காட்சியளித்து வந்த இவ்வீதிகள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

பல வருடங்களாக எவரும் கவனிப்பாரற்று தினமும் பயணிகளுக்கு பல்வேறு சிரமங்களாக இருந்த குறித்த வீதிகளை புனரமைப்புச் செய்துதருமாறு கிராம மக்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் விடுத்த வேண்டுகோளின் பயனாக இவ்வீதிகள் குறுகிய ஒரு மாத காலத்திற்குள் கார்பட் வீதியாக மாற்றம் பெற்றுள்ளதால் ஜனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

# 2015 இல 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதி மன்றத்தின் கட்டளைப் பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

கோராலலாகே தொன் குமுது நிஷாந்த மற்றும் கோராலலாகே தோன தர்ஷனி சந்தமாலி ஆகிய நாம் 159/1/1D கொஸ்கஹஹேன சந்தி, எரவ்வல, பன்னிப்பிட்டிய என்ற இடத்தில் அமைந்துள்ள சஹன பார்மசி என்ற மருந்தகத்தின் முறையே முகாமையாளர் மற்றும் மருந்தாளர் ஆவோம். மேற்படி மருந்தகத்தில் Pregabalin எனும் மருந்தை மருந்து சிட்டையை சமர்ப்பிக்காத நபருக்கு விற்பனை செய்த குற்றத்திற்கு நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் 2024.02.27ம் திகதி தொடுக்கப்பட்டிருந்த இல. 28567/24 என்ற வழக்கில் நாம் குற்றவாளியாக்கப்பட்டேன் எனவும் அதற்காக எமக்கு கௌரவ நீதவானினால் வேறுவேறாக ரூ. 50,000/- வீதம் முழுத் தொகை ரூ.100,000/- தண்டத் தொகையை செலுத்துமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டதாகவும் இலங்கை மக்களிடம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறான குற்றம் எம்மால் மீண்டும் இழைக்கப்படமாட்டாது என தெரிவிப்பதுடன் மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

**கோராலலாகே தொன் குமுது நிஷாந்த**
**கோராலலாகே தோன தர்ஷி சந்தமாலி**

# சாய் சரணாலயத்தில் திருவாசகம் முற்றோதல்





இறைவன் திருவருளால் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசக பாடல்கள் முற்றோதுதல் நிகழ்வு எதிர்வரும் ஜூன் 02ஆம் திகதி கொட்டாஞ்சேனை சாய் சரணாலயத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

ஜெயந்தி நகர ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அறங்காவலர் தெ.பரமநாயகத்தின் வழிநடத்தலில் சிவனடியார்களான எஸ்.செல்வ விநாயகம் (செல்வம்), எச்.எச்.விக்கிரமசிங்க இருவருமே இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் தமிழகத்திலிருந்து வருகை தரும் திருமுறை தேனமுத கலாநிதி கோவை சிவத்திரு ஆ.சுப்பிரமணியம் ஓதுவார், திருமுறை இசைச் செல்வர் பழனி சிவத்திரு வெ.விக்னேஷ் ஆறுமுகம் ஓதுவார் ஆகிய நிகழ்வை கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணி சுவாமி ஆலய பஜனை குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# ரயில் மோதி இளைஞன் பரிதாபகரமாக உயிரிழப்பு

**(பேருவளை விசேட நிருபர்)**



களுத்துறை தெற்கு வெட்டுமகட பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ரயில் வண்டி மோதி மரணமான பரிதாப சம்பவமொன்று 27ஆம் திகதி (2752024) இடம்பெற்றுள்ளது.

களுத்துறை தெற்கு குரே வீதியைச் சேர்ந்த முஹம்மத் இர்பான் முஹம்மத் இமாத் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவராவார்.

கையடக்க தொலைபேசி ஹேண்பிரியை காதில் வைத்தபடி ரயில் பாதையில் சென்றுள்ள நிலையில் இவர் ரயிலுக்கு மோதி உள்ளார் என தெரிய வருகிறது.

களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 29 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்



தொழுகை நேரம்
சுபஹ் - 04.32
ளுஹர் - 12.09
அஸர் - 03.35
மஃரிப் - 06.23
இஷா - 07.39

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 16
ராகுகாலம் : காலை : 11.52 - 01.22வரை
சுபநேரம் : மாலை : 04.22 - 05.52வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## புதிதாக ஐந்து இலட்சம் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதிகள்

### வர்த்தக வாய்ப்புகள் வழங்கவும் ஏற்பாடு

கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் சிறிய அளவிலான கோழிப்பண்ணை உரிமையாளர்களை மேம்படுத்தும் நோக்கில், முட்டை அடை காக்கும் இயந்திரங்கள் விநியோக நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றுமொரு கட்டம் நேற்று (28) சீதாவக்கை பிரதேச சபையில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இடம் பெற்றது.



சீன அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் வழங்கப்படும் இவ்வியந்திரம் ஒன்றின் மூலம் ஐந்து குடும்பங்களுக்கு நேரடி வருமான வழிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களைச் சார்ந்த கிராமங்களில் உள்ள பல குடும்பங்கள் இதன் மூலம் மறைமுகப் பயன்களைப் பெறுவார்கள். இத்திட்டத்தின் நோக்கம் வருமானம் ஈட்டும் வழிகளை மேம்படுத்துதல், குடும்ப போஷாக்கினை மேம்படுத்துதல், நாட்டில் பொதுவாக முட்டை உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் வீட்டு மட்டத்தில் தன்னிறைவான வீட்டுத் தோட்டங்களை உருவாக்குதல் ஆகும்.

08



இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விஜேராம மாவத்தையிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று (28) சந்தித்தார். மரியாதை நிமித்தம் இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது.

## பாலியல் இலஞ்சம் : பாராளுமன்ற அதிகாரிக்கு எதிராக விசாரணை

### பாராளுமன்ற உதவி செயலாளர் தலைமையில் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெண்களிடம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் முறையற்ற விதத்தில் செயற்பட்டுள்ளாரென தெரிவிக்கப்படும் பாராளுமன்றத்தின் முக்கிய பிரிவொன்றின் பொறுப்பாளர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் சட்டத்தரணி குசானி ரோஹணதீரவின் பணிப்புரையின் கீழ், உதவி செயலாளர் நாயகத்தின் தலைமையில் மேற்படி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தின் முக்கிய பிரிவொன்றின் செயற்பாட்டாளராக இருக்கும் மேற்படி அதிகாரி, பெண் ஊழியர்களுக்கான பதவி உயர்வு வழங்கும்போதும் இப்பிரிவுக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யும்போதும் பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோரியுள்ளதாகவும் இதற்காக பலரிடம் இவர், வற்புறுத்தல் செய்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அதேபோன்று அவரது திணைக்களத்திலுள்ள பெண் ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கும் போதும், அவர் பல்வேறு அழுத்தங்களை இவ்வாறு பிரயோகித்துள்ளார். இது தொடர்பிலும் சில பெண் ஊழியர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கடிதம் மூலம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுறது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் உதவி செலயாளர் நாயகத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

### ஜனாதிபதியின் இல்ல தீ வைப்பு சம்பவம்;

## சந்தேக நபரான ஆசிரியர் சி.ஐ.டியினரால் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தபோது அவரது கொள்ளுப்பிட்டியிலுள்ள இல்லத்திற்குள் அத்துமீறி பிரவேசித்து, அங்குள்ள வளங்களை சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேக நபரை கைதுசெய்துள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நவுன்துட்டுவ கிரந்திரிய பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது ஆசிரியரொருவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காலிமுகத்திடல் போராட்டத்தின் போது கடந்தவருடம் மே (09) இரவு போராட்டக்காரர்களில் சிலர் அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவின் கொள்ளுப்பிட்டி இல்லத்திற்குள் அத்துமீறி பிரவேசித்து அங்குள்ள வளங்களுக்கு தீ, வைத்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 25 பேர் கைதுசெய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுமுள்ளனர். அந்தவகையில் 36 வயதான மேற்படி ஆசிரியரும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுவார் என்றும் அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

## மிகப் பிரபலமான பயண இடங்கள் இலங்கைக்கு இரண்டாவது இடம்

ஆசியாவின் மிகப் பிரபலமான பயண இடங்களின் பட்டியலில், இலங்கை 02ஆம் இடத்துக்கு தரப்படுத்தப்பட்டுள்ளது. "த டைம்ஸ் ஒப் இந்தியா", இந்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கலாசார பாரம்பரியம், பசுமையான தேயிலைத் தோட்டங்கள், கடற்கரைகள் மற்றும் வனவிலங்குகளுக்கு புகழ்பெற்ற இடமாக இலங்கை திகழ்வதாக த டைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது.

பட்டியலில், இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்நாம், இந்தியா, நேபாளம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் தரப்படுத்தப்பட்டுள்ளன.

## இரண்டு தேர்தல்களையும் இரு வருடங்களுக்கு ஒத்திப்போடவும்

### ஐ.தே.க. கோரிக்கை விடுக்கிறது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இந்த வருடத்தில் இடம்பெறவுள்ள இரண்டு தேர்தல்களையும் மேலும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென, அரசாங்கத்தை ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது.

ஐ.தே. கட்சியின் பொதுச்செயலாளர் ரங்கே பண்டார நேற்றைய தினம் கட்சியின் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

08

### இரண்டு உரக் கம்பனிகளும் கூட்டிணைப்பு

## கட்டாய ஓய்வு இழப்பீட்டு முறை ரூ.844 மில். செலவிட அங்கீகாரம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி மற்றும் வரையறுக்கப் பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகியவற்றை கூட்டிணைப்பதற்கு, கட்டாய ஓய்வு இழப்பீட்டு முறைமையை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க இரண்டு உரக் கம்பனிகளின் நிதியிலிருந்து 844 மில்லியன் ரூபாவை செலவிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதேவேளை, மேற்படி இரண்டு உரக்கம்பனிகளையும் கூட்டிணைப்பதற்கு வசதியாக, கட்டாய ஓய்வு

08

## ஈஸ்டர் தாக்குதல்: நிலந்தவுக்கு எதிரான மனு ஜூலையில் பரிசீலனை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை, எதிர்வரும் ஜூலை 25இல், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இம்மனு மீதான விசாரணை நேற்று நீதிபதிகளான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இவ்வாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளை தாக்கல் செய்வதற்கு திகதி வழங்குமாறு, பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி நிலந்த ஜயவர்தன நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதற்கிணங்க உரிய ஆட்சேபனைகளை ஜூன் 25 அல்லது அதற்கு முன்பதாக தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சமூக மற்றும் சமாதான நிலையத்தின் பணிப்பாளர் ஜூட் ரொஹான் சில்வாவினால், இந்த மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

DFCC கருசரு
தனிப்பட்ட கடன்

ஓய்வு பெறுவதற்கு முன் பெற்று பின்னர் சிறிது சிறிதாக மீளச் செலுத்துங்கள்



நீங்களும் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்பே DFCC கருசரு தனிப்பட்ட கடனொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஓய்வு பெற்ற பின் அதனை சிறிது சிறிதாகச் செலுத்துங்கள்.

- ஆகக்கூடியதாக 5 மில்லியன் ரூபாய் வரையான கடன் தொகை
- ஆகக்கூடியதாக 20 ஆண்டுகள் வரையான மீளளிப்புக் காலம்
- கவர்ச்சிகரமான வட்டி வீதம்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்குச் செல்லுங்கள் அல்லது 0112 350000 க்கு அழையுங்கள்

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 350000 www.dfcc.lk

ஃபிச் ரேட்டிங் A- (lka) தரப்படுத்தலைப் பெற்ற, CBSL உரிமம் பெற்ற வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## கடும் காற்றுடன் கூடிய மழை

# ராக்சாவ தோட்ட குடியிருப்பில் கூரை தகடுகள் அள்ளுண்டு சென்றமையால் மக்கள் அவதி

குறுந்துவத்த ராக்சாவ தோட்ட குடியிருப்பில் கூரை தகடுகள் காற்றுக்கு அள்ளுண்டு சென்றமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

குறுந்துவத்த ராக்சாவ தோட்டத்தில் வசித்து வரும் 24 குடும்பங்கள் தற்போது பரணகலை தமிழ் வித்தியாலய பாடசாலை மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வசித்து வந்த குடியிருப்பு பகுதியில் கூரை தகடுகள் அள்ளுண்டு சென்றமையால் வீட்டிலுள்ள பொருட்கள் அனைத்தும் மழை தண்ணீரில் நனைந்து சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் 25 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ஆணொருவரின் சடலம் மீட்பு

வெயாங்கொடை-வதுரவ ரயில் நிலையங்களுக்கு இடையில் ஆணொருவரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

ரயில் தண்டவாளத்தில் பலத்த காயங்களுடன் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. இதனையடுத்து இச்சம்பவத்தினால் பிரதான ரயில் போக்குவரத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெயாங்கொட மொட்டுன்ன பிரதேசத்தில் வசித்து வந்த 40 வயதுடைய ரொஷான் மஹாநாம என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர், மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

தண்டவாளத்தில் நடந்துச் சென்ற நபரொருவர், சடலம் ஒன்று கிடப்பதைக் கண்டு, வெயாங்கொடை ரயில் நிலையத்திற்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இறந்தவரின் கால்களில் ஒன்று சடலம் இருந்த இடத்திலிருந்து சுமார் 10 மீற்றர் தொலைவில் விழுந்து கிடந்துள்ளது. மேலும் இறந்தவருடையது என சந்தேகிக்கப்படும் ஒரு ஜோடி காலணிகள் மற்றும் கோடாரி ஆகியவையும் அருகில் கிடந்துள்ளது.

கொழும்பு நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த ரயிலில் மோதுண்டே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படுவதாக வெயாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

# கொதித்தாறிய நீரை அருந்துமாறு அறிவுரை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி பகுதிகளிலுள்ள நீர் நிலைகளில் மழைநீர் சேர்ந்துள்ளதுடன் வெள்ள நீரும் தேங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் பிரதேசத்தில் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டு வருவதாக சுகாதாரதுறை அதிகாரிகள் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

இதனால் கொதித்தாறிய நீரை அருந்துமாறு பிரதேச மக்களுக்கு சுகாதார தரப்புக்களால் அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. அதற்கிணங்க குடிநீரைச் சூடாக்கி ஆறிய பின் அருந்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகளை குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலான நோய்களுக்கு நீர் பிரதான காரணமாக இருப்பதால் சுகாதாரத் தரப்பின் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் வீண் சிரமங்களைத் தவிர்க்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



வெசாக்கை முன்னிட்டு நாவலப்பிட்டி ஸ்ரீ முத்து மாரியம்பாள் தேவஸ்தானத்தின் அனுசரணையில் மாபெரும் இட்லி தானம் வழங்கும் வைபவம் நாவலப்பிட்டி தமிழ் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே கலந்து கொண்டு தான சாலை ஆரம்பித்து இட்லி வழங்குவதை படங்களில் காணலாம். *(படங்கள்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)*

# UNION BANK

## 2024 மார்ச் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

### நிதி நிலைமைக்கூற்று ரூ.('000)

| நிதியியல் உள்ளபடி | வங்கி 31.03.2024 | வங்கி 31.12.2023 (கணக்காய்வு செய்யப்பட்டது) | மாற்றம் % | குழு 31.03.2024 | குழு 31.12.2023 (கணக்காய்வு செய்யப்பட்டது) | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 3,302,669 | 3,181,546 | 4 | 3,483,722 | 3,329,804 | 5 |
| இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | 540,150 | 484,876 | 11 | 540,150 | 484,876 | 11 |
| வங்கிகளிலுள்ள வைப்புக்கள் | 1,450,697 | 3,618,819 | (60) | 1,451,305 | 3,618,819 | (60) |
| நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 2,172,640 | 2,989,653 | (27) | 2,273,430 | 2,989,653 | (24) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 11,714 | 28,856 | (59) | 11,714 | 28,856 | (59) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியில் நிதி சொத்துக்கள் | 5,839,016 | 6,495,860 | (10) | 5,899,550 | 6,606,034 | (11) |
| மதிப்பீடு செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் - வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 66,742,830 | 62,207,758 | 7 | 74,513,698 | 69,558,902 | 7 |
| மதிப்பீடு செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் | 24,508,816 | 30,845,784 | (21) | 26,538,856 | 33,297,389 | (20) |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடாக நியாயபெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள் | 14,858,434 | 20,236,964 | (27) | 14,880,792 | 20,258,822 | (27) |
| காணி ஆதனத்தில் முதலீடு | - | - | - | 60,056 | 64,478 | (7) |
| உப நிறுவனங்களிலான முதலீடுகள் | 2,809,205 | 2,814,347 | - | - | - | - |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 1,180,821 | 1,210,845 | (2) | 1,510,355 | 1,541,836 | (2) |
| ஆதனம் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 1,503,870 | 1,584,821 | (5) | 1,891,689 | 1,900,736 | - |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 877,300 | 827,216 | 6 | 1,024,988 | 975,965 | 5 |
| ஏனைய சொத்துக்கள் | 2,736,363 | 2,560,374 | 7 | 2,974,722 | 2,675,619 | 11 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **128,534,527** | **139,087,719** | **(8)** | **137,054,527** | **147,331,789** | **(7)** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 6,753,977 | 3,375,823 | 100 | 6,775,864 | 3,442,119 | 97 |
| பெறுதி நிதியியல் பத்திரங்கள் | 151,367 | 56,769 | 167 | 151,367 | 56,769 | 167 |
| மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | - | - | - | - | - | - |
| வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 7,311,724 | 25,431,273 | (71) | 7,311,724 | 25,431,273 | (71) |
| ஏனைய கடன்பெறு நிதிகள் | 91,489,266 | 87,984,721 | 4 | 98,910,689 | 95,391,334 | 4 |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 359,922 | 363,738 | (1) | 361,666 | 365,484 | (1) |
| ஏனைய பொறுப்புக்கள் | 3,110,130 | 2,611,369 | 19 | 3,842,328 | 3,038,367 | 26 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **109,176,386** | **119,823,693** | **9** | **117,353,639** | **127,725,346** | **(8)** |
| **பங்கு மூலதனம்** | | | | | | |
| அறிக்கையிடப்பட்ட மூலதனம் | 16,334,782 | 16,334,782 | - | 16,334,782 | 16,334,782 | - |
| பங்கு உத்தரவாதங்கள் | 65,484 | 65,484 | - | 65,484 | 65,484 | - |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | 279,574 | 277,142 | 1 | 307,180 | 304,748 | 1 |
| மொத்த ஒதுக்கம் | 128,918 | 83,899 | 54 | 141,154 | 96,135 | 47 |
| ஏனைய ஒதுக்கம் | 2,507,848 | 2,461,628 | 2 | 2,222,889 | 2,203,461 | 1 |
| ஊழியர் பங்குரிமை ஒதுக்கம் | 41,534 | 41,091 | 1 | 41,534 | 41,091 | 1 |
| ஒழுங்குவிதிமுறை ஒதுக்கம் | - | - | | 256,388 | 228,647 | 12 |
| **வங்கியின் பங்குதாரர்களுக்குச் சாட்டத்தக்க மொத்தப் பங்குரிமை** | **19,358,140** | **19,264,026** | - | **19,369,411** | **19,274,348** | - |
| கட்டுப்படுத்தாத உரிமைகள் | - | - | - | 331,477 | 312,095 | - |
| **மொத்தப் பங்கு மூலதனம்** | **19,358,140** | **19,264,026** | - | **19,700,888** | **19,606,443** | - |
| **மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **128,534,527** | **139,087,719** | **(8)** | **137,054,527** | **147,331,789** | **(7)** |
| **எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்** | **35,245,685** | **33,638,176** | 5 | **35,215,117** | **33,631,199** | 5 |
| **சாதாரண பங்கொன்றின் நிகர சொத்துப் பெறுமதி (ரூபா)** | **17.87** | **17.78** | | **17.88** | **17.79** | |
| **குறிப்பு தகவல்கள்** | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1,155 | 1,221 | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 63 | 63 | | | | |

### தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள் (ஒழுங்கு முறை அறிக்கையின் படி)

| கூறு | வங்கி 31.03.2024 | வங்கி 31.12.2023 | குழு 31.03.2024 | குழு 31.12.2023 |
|---|---|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல் மூலதன போதுமை** | | | | |
| பொது பங்கு பிரிவு I (பாசெல் III) | 14,496,565 | 14,543,446 | 16,558,040 | 16,573,032 |
| அடுக்கு I மூலதனம் (பாசெல் III) | 14,496,565 | 14,543,446 | 16,558,040 | 16,573,032 |
| மொத்த மூலதனம் (பாசெல் III) | 15,387,385 | 15,374,696 | 17,510,637 | 17,462,244 |
| **ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)** | | | | |
| பொது பங்கு பிரிவு I மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 7%) | 15.88% | 17.23% | 17.28% | 18.29% |
| பிரிவு I மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 8.5%) | 15.88% | 17.23% | 17.28% | 18.29% |
| மொத்த மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 12.5%) | 16.85% | 18.22% | 18.27% | 19.28% |
| கடன் மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 3%) | 9.88% | 8.39% | 10.51% | 9.01% |
| **ஒழுங்குபடுத்தல் திரவத்தன்மை** | | | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் மொத்த வங்கி செயல்பாடுகள், ரூ. '000 | 41,017,923 | 35,395,026 | | |
| சட்டப்படியான திரவச்சொத்துக்கள் விகிதம் % (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 20%) மொத்த வங்கி செயல்பாடுகள் | 42.77% | 37.93% | | |
| பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், ரூபாய்க்கு (%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%) | 1028.70% | 795.41% | | |
| பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், சகல நாணயங்களுக்கு (%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%) | 727.85% | 787.67% | | |
| நிகர நிலையான நிதி விகிதம் (%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 100%) | 145.17% | 110.66% | | |
| **சொத்துக்கள் தரம் (கடன்கள் மற்றும் வருமதிகளின் தரம்)** | | | | |
| குறைபாட்டுக்குட்பட்ட கடன்களின் (நிலை 3) விகிதம் (%) | 11.35% | 12.51% | | |
| குறைபாட்டுக்கான ஏற்பாட்டின் (நிலை 3) மீதான நிலை 3 கடன்களின் விகிதம் (%) | 36.68% | 35.26% | | |
| **இலாபத்தன்மை** | | | | |
| வட்டி இலாபம் % | 4.07% | 4.68% | | |
| சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்கு முன்) % | 0.40% | 0.58% | | |
| சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்குப் பின்) % | 0.15% | 0.28% | | |
| உரிமைப் பங்கிலிருந்து வருமானம் (வரிக்குப் பின்) % | 1.01% | 1.99% | | |

### உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

**வங்கி** (கணக்காய்வு செய்யப்படாதது)

| | அறிக்கையிடப்பட்ட மூலதனம் | பங்கு உத்தரவாதங்கள் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | பணியாளர் பங்குரிமை திட்ட ஒதுக்கம் | விற்பனைக்குள்ள /FVOCI ஒதுக்கம் | நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்கள் | மொத்தப் பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2023 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **258,182** | **14,099** | **2,102,979** | **37,305** | **18,812,831** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | 145,437 | - | 145,437 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | (8,518) | - | - | (8,518) |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | (8,518) | 145,437 | - | 136,919 |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | |
| பணியாளர் பங்குரிமை திட்டத்தின் நியாய பெறுமதி | - | - | | - | - | 946 | 946 |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | | | 7,272 | | (7,272) | - | - |
| **2023 மார்ச் 31இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **265,454** | **5,581** | **2,241,144** | **38,251** | **18,950,696** |
| **2024 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **277,142** | **83,899** | **2,461,628** | **41,091** | **19,264,026** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | 48,652 | - | 48,652 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | 45,019 | - | - | 45,019 |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | 45,019 | 48,652 | - | 93,671 |
| | | | | | | - | - |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | |
| பணியாளர் பங்குரிமை திட்டத்தின் நியாய பெறுமதி | - | - | - | - | - | 443 | 443 |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | - | - | 2,433 | - | (2,433) | - | - |
| **2024 மார்ச் 31இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **279,574** | **128,918** | **2,507,848** | **41,534** | **19,358,140** |

### உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

**குழு** (கணக்காய்வு செய்யப்படாதது)

| | அறிக்கையிடப்பட்ட மூலதனம் | பங்கு உத்தரவாதங்கள் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | பணியாளர் பங்குரிமை திட்ட ஒதுக்கம் | விற்பனைக்குள்ள ஒதுக்கம் | நிறுத்தி வைக்கப்பட்ட வருமானங்கள் | ஒழுங்குவிதிமுறை ஒதுக்கம் | பங்குதாரர்களின் மொத்தப்பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமைகள் | மொத்தப் பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2023 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **282,802** | **26,335** | **1,998,295** | **37,305** | - | **18,745,003** | **270,746** | **19,015,749** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | 171,924 | - | - | 171,924 | 2,502 | 174,426 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | (8,518) | - | - | - | (8,518) | - | (8,518) |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | (8,518) | 171,924 | - | - | 163,406 | 2,502 | 165,909 |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | | | | |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | - | - | - | - | - | 946 | - | 946 | - | 946 |
| நிதிச் சாதனங்களில் மாற்றம் | - | - | 7,272 | - | (7,272) | - | - | - | - | - |
| **2023 மார்ச் 31இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **290,074** | **17,817** | **2,162,947** | **38,251** | - | **18,909,355** | **273,248** | **19,182,604** |
| **2024 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **304,748** | **96,135** | **2,203,461** | **41,091** | **228,647** | **19,274,348** | **332,095** | **19,606,443** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | 49,601 | - | - | 49,601 | (618) | 48,983 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | 45,019 | - | - | - | 45,019 | - | 45,019 |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | 45,019 | 49,601 | - | - | 94,620 | (618) | 94,002 |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | | | | |
| பணியாளர் பங்குரிமை திட்டத்தின் நியாய பெறுமதி | - | - | - | - | - | 443 | - | 443 | - | 443 |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | - | - | 2,433 | - | (2,433) | - | - | - | - | - |
| குறைக்கப்பட்ட செலவுக்கு மாற்றப்பட்ட முதலீட்டு கருவிகள் | - | - | - | - | (27,741) | - | 27,741 | - | - | - |
| **2024 மார்ச் 31இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **307,180** | **141,154** | **2,222,889** | **41,534** | **256,388** | **19,369,411** | **331,477** | **19,700,888** |

### அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் கூற்று

| முடிவடைந்த காலப்பகுதிக்கானது | வங்கி 31.03.2024 | வங்கி 31.03.2023 | மாற்றம் % | குழு 31.03.2024 | குழு 31.03.2023 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| காலப்பகுதிக்கான இலாபம் | **48,652** | **145,437** | **(67)** | **48,983** | **174,426** | **(72)** |
| **அடுத்துவரும் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | |
| **ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப் பெறுமதியில் கடன் சாதனங்கள்** | | | | | | |
| காலப்பகுதிக்கான நியாயப் பெறுமதியில் தேறிய மாற்றம் | 100,195 | 30,785 | 225 | 100,195 | 30,785 | 225 |
| எதிர்பார்த்த கடன் இழப்புக்கான ஏற்பாடுகளில் மாற்றம் | (35,882) | (42,954) | 16 | (35,882) | (42,954) | 16 |
| கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு | (19,294) | 3,651 | (628) | (19,294) | 3,651 | (628) |
| பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக | - | - | | - | - | |
| **இலாப நட்டக்கணக்கிற்கு மீள் வகைப்படுத்தப்படாத மொத்த உருப்படிகள்** | **45,019** | **(8,518)** | **629** | **45,019** | **(8,518)** | **629** |
| **அடுத்துவரும் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | |
| வரையறுக்கப்பட்ட பயன் ஓய்வூதிய திட்டத்தின் உண்மையான இலாபம் / (நட்டம்) | - | - | | - | - | |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப்பெறுமதியில் மூலதன உபகரணங்களிலான மீள் மதிப்பீடு இலாபம் / (நட்டம்) | - | - | | - | - | |
| கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு | - | - | | - | - | |
| பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக | - | - | | - | - | |
| **இலாப நட்டக்கணக்கிற்கு மீள் வகைப்படுத்தப்படாத மொத்த உருப்படிகள்** | - | - | | - | - | |
| **வரிகள் நீங்கலாக காலப்பகுதியின் ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | **45,019** | **(8,518)** | **629** | **45,019** | **(8,518)** | **629** |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | **93,671** | **136,919** | **(32)** | **94,002** | **165,908** | **(43)** |
| **பகிர்ந்தளிக்கத்தக்கது:** | | | | | | |
| தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 93,671 | 136,919 | (32) | 94,620 | 163,406 | (42) |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | | (618) | 2,502 | (125) |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம், வரி நீங்கலாக** | **93,671** | **136,919** | **(32)** | **94,002** | **165,908** | **(43)** |

### வருமானக்கூற்று ரூ.('000)

| முடிவடைந்த காலப்பகுதிக்கான | வங்கி 31.03.2024 | வங்கி 31.03.2023 | மாற்றம் % | குழு 31.03.2024 | குழு 31.03.2023 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | **4,568,516** | **6,008,279** | **(24)** | **5,132,552** | **6,630,717** | **(23)** |
| வட்டி வருமானங்கள் | 3,965,744 | 5,467,129 | (27) | 4,477,846 | 6,047,298 | (26) |
| கழி : வட்டிச் செலவினங்கள் | 2,603,354 | 3,845,029 | (32) | 2,938,130 | 4,169,797 | (30) |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,362,390** | **1,622,100** | **(16)** | **1,539,716** | **1,877,501** | **(18)** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 371,341 | 419,761 | (12) | 404,251 | 442,645 | (9) |
| கழி : கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | 95,747 | 98,845 | (3) | 103,287 | 99,215 | 4 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **275,594** | **320,916** | **(14)** | **300,964** | **343,430** | **(12)** |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு | 173,846 | 16,277 | 379 | 178,322 | 40,205 | 344 |
| நிதியியல் முதலீடுகள் மூலமான இலாபம் / நட்டம் | 121,392 | 75,908 | 60 | 121,477 | 75,908 | 60 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு | - | - | - | - | - | - |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | (63,807) | 9,204 | (793) | (49,344) | 24,661 | (300) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **1,869,415** | **2,064,405** | **(9)** | **2,091,135** | **2,361,705** | **(11)** |
| கழிக்குக: கடன்கள் மற்றும் ஏனைய கடன்படுகைகளுக்கான இழப்பு | 295,283 | 449,813 | (34) | 278,328 | 482,484 | (42) |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **1,574,132** | **1,614,592** | **(3)** | **1,812,807** | **1,879,221** | **(4)** |
| கழி : ஊழியர்கள் செலவினங்கள் | 563,454 | 515,070 | 5 | 658,123 | 644,786 | 2 |
| தேய்மானம் மற்றும் கடன்தீர்ப்பு | 194,987 | 194,037 | 0 | 213,795 | 215,195 | (1) |
| ஏனைய செலவினங்கள் | 535,169 | 484,243 | 11 | 627,366 | 522,963 | 20 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்** | **1,293,610** | **1,213,350** | **7** | **1,499,284** | **1,382,944** | **8** |
| **தேறிய தொழிற்பாட்டு இலாபம்** | **280,522** | **401,242** | **(30)** | **313,523** | **496,277** | **(37)** |
| பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாபம் பங்கு, வரி நீங்கலாக | (4,050) | 20,727 | (120) | - | - | |
| **நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி கூட்டு வரிக்கு (பெ. கூ. வ) முன் இலாபம்** | **276,472** | **421,970** | **(34)** | **313,523** | **496,277** | **(37)** |
| கழி : நிதியியல் சேவைகள் மீதான பெ.கூ.வ | 141,256 | 160,120 | (12) | 161,221 | 184,155 | (12) |
| **வரிக்கு முன் இலாபம்** | **135,216** | **261,850** | **(48)** | **152,302** | **312,122** | **(51)** |
| கழி : வரிச் செலவினங்கள் | 86,564 | 116,413 | (26) | 103,319 | 137,696 | (25) |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | **48,652** | **145,437** | **(67)** | **48,983** | **174,426** | **(72)** |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | | | |
| தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 48,652 | 145,437 | (67) | 49,601 | 171,924 | (71) |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | | (618) | 2,502 | (125) |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **48,652** | **145,437** | **(67)** | **48,983** | **174,426** | **(72)** |
| **இலாபத்தில் பங்கொன்றின் சம்பாத்தியம்** | | | | | | |
| பங்கொன்றின் அடிப்படை சம்பாத்தியம் | 0.04 | 0.13 | (67) | 0.05 | 0.16 | (71) |
| பங்கொன்றின் ஐதாக்கப்பட்ட சம்பாத்தியம் | 0.04 | 0.13 | (67) | 0.05 | 0.16 | (71) |

### காசுப்பாய்ச்சல்கள் கூற்று ரூ. ('000)

| | வங்கி 31.03.2024 | வங்கி 31.03.2023 | குழு 31.03.2024 | குழு 31.03.2023 |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வட்டி வருமதிகள் | 3,616,307 | 5,016,040 | 4,105,608 | 5,503,407 |
| பெறப்பட்ட கட்டணங்கள் மற்றும் தரகுப்பணம் | 275,594 | 320,916 | 300,964 | 343,431 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (3,380,907) | (3,156,589) | (4,571,838) | (3,462,819) |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கையிலான பெறுவனவுகள் | 442,562 | 107,564 | 461,586 | 154,424 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் | (1,254,249) | (1,157,310) | (1,442,493) | (1,328,130) |
| **தொழிற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு முன் தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **(300,693)** | **1,130,621** | **(1,146,173)** | **1,210,313** |
| **தொழிற்பாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பு / (குறைவு)** | | | | |
| இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதி | (55,274) | 789,600 | (55,274) | 789,600 |
| கடன்களும், முற்பணங்களும் | (4,669,389) | 4,632,461 | (5,059,650) | 5,257,198 |
| ஏனையவை | (175,987) | (27,261) | (299,095) | (76,163) |
| | **(4,900,651)** | **5,394,800** | **(5,414,020)** | **5,970,635** |
| **தொழிற்பாட்டுப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / (குறைவு)** | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 4,259,335 | (3,057,961) | 5,138,998 | (3,336,377) |
| வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | (18,039,738) | (10,172,546) | (18,039,738) | (10,172,514) |
| மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 471,684 | 834,149 | 690,303 | 1,016,395 |
| ஏனையவை | **(13,307,719)** | **(12,396,357)** | **(12,210,437)** | **(12,492,497)** |
| வருமான வரிக்கு முன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (அவற்றில் பயன்படுத்திய) தேறிய காசு | (18,509,062) | (5,870,936) | (18,770,629) | (5,311,549) |
| செலுத்தப்பட்ட ஓய்வுகால அனுகூலக் கொடுப்பனவுகள் | (11,508) | (9,877) | (11,508) | (10,649) |
| செலுத்திய வருமான வரி | (140,380) | (141,540) | (140,380) | (144,680) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (அவற்றில் பயன்படுத்திய) தேறிய காசு** | **(18,660,950)** | **(6,022,354)** | **(18,922,517)** | **(5,466,877)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| நிகர இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துகள் | 723,594 | 477,462 | 773,236 | 166,099 |
| நிகர மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் | 6,403,674 | 3,242,563 | 6,897,981 | 3,242,563 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் தேறிய நிதிசார் முதலீடுகள் | 5,511,818 | 2,257,086 | 5,511,818 | 2,257,086 |
| நிகர இலாபம் அல்லது நட்டம் | - | - | (4,421) | 735 |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (31,380) | (54,293) | (65,761) | (154,509) |
| அருவச் சொத்து கொள்வனவு | (37,261) | (5,398) | (37,261) | (9,510) |
| சொத்து மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான தேறிய காசு | - | 146 | - | 146 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்திய) நிகர காசு** | **12,570,445** | **5,917,567** | **13,075,592** | **5,502,611** |
| **நிதியியல் நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| கடன்படுகைக்கு அதிகரிப்பு | 2,237,628 | 701,080 | 2,171,330 | 475,900 |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்திய) நிகர காசு** | **2,237,628** | **701,080** | **2,171,330** | **475,900** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | (3,852,877) | 596,294 | (3,675,595) | 511,633 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 9,766,679 | 7,807,156 | 9,849,960 | 7,992,297 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **5,913,802** | **8,403,450** | **6,174,365** | **8,503,930** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் இணக்கம்** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 3,302,669 | 5,562,543 | 3,483,722 | 5,679,901 |
| வங்கிகளிலுள்ள வைப்புக்கள் | 2,172,640 | 3,054,000 | 2,273,430 | 3,054,000 |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 1,449,377 | 18,107 | 1,449,985 | 16,633 |
| நேர்மாற்று மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் | (1,010,884) | (231,200) | (1,032,772) | (246,603) |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **5,913,802** | **8,403,450** | **6,174,365** | **8,503,930** |

*மா.அ - மாற்றம் அர்த்தமற்றது

**உறுதியுரை:**
கீழ் கையொப்பமிட்டுள்ள, யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பி.எல்.சி.யின் தலைவர், இணைந்த/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி ஆகிய நாம், பின்வருவனவற்றைக் கூட்டாக உறுதிப்படுத்துகிறோம்:

(அ) மேலுள்ள கூற்றுக்கள், இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைவிலக்கணங்களுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில், கூட்டிணைந்த வங்கி மற்றும் குழுவினுடைய தகவல்கள் கணக்காய்வு செய்யப்படாதவை.

(இ) மேற்கண்ட அறிக்கைகள் 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டம் எண். 7 இன் தேவைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன.

(கையொப்பம்) [illegible] பிரதம நிதி அதிகாரி

(கையொப்பம்) இந்திரஜித் விக்ரமசிங்க இணைந்த/பிரதம நிறைவேற்று அதிகாரி

(கையொப்பம்) [illegible] தலைவர்

திகதி: 30 ஏப்ரல் 2024

Fitch BBB- (lka) யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பி.எல்.சி. இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் வர்த்தக வங்கியாகும்.

யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பி.எல்.சி. | தலைமை அலுவலகம்: 64, காலி வீதி, கொழும்பு 03. | தொ: 011 2 374 100 | www.unionb.com | கம்பனி பதிவு இலக்கம் PB676PQ

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 16ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 20

### குறள் தரும் சிந்தனை



வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

விருந்தினர்க்கு முதலில் உணவளித்து மிஞ்சியதை உண்டு வாழும் பண்பாளன், தன் நிலத்திற்குரிய விதையைக்கூட விருந்தோம்பலுக்குப் பயன்படுத்தாமல் இருப்பானா?

## மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் மரங்களை அகற்றும் நடவடிக்கை

நாட்டில் சீரற்ற காலநிலை காரணமாக கடும் காற்றுடன் மழைவீழ்ச்சியும் ஏற்பட்டது. வங்களா விரிகுடாவில் ஏற்பட்டிருந்த தாழமுக்கம் இந்த கடும் காற்றுக்கு காரணமாக அமைந்தது.

காற்றுடன் கூடிய இச்சீரற்ற காலநிலையின் விளைவாக கடந்த சில தினங்களுக்குள் மரங்கள் வீழ்ந்தும் மரக்கிளைகள் முறிந்தும் 07 பேர் மரணமடைந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. புத்தளம், இரத்தினபுரி, காலி, நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் மூன்று மரணங்கள் புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சீரற்ற காலநிலையினால் மரங்கள் சரிந்து வீழ்ந்தும் மரக்கிளைகள் திடீரென முறிந்து வீழ்வதாலும் மரணங்களும் சொத்து சேதங்களும் ஏற்படக்கூடிய நிலைமை அண்மைக் காலமாக உருவாகியுள்ளது. கொழும்பு உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் இந்நிலைமையை அவதானிக்க முடிகிறது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் டுப்ளிகேஷன் வீதிக்கு அருகில் காணப்பட்ட பாரிய மரமொன்று கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி பஸ்ஸொன்றின் மீது திடீரென சரிந்து வீழ்ந்ததில் ஐவர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து சீரற்ற காலநிலை நிலவும் காலப்பகுதியில் மரங்கள் சரிந்து வீழ்வதும், மரக்கிளைகள் முறிந்து வீழ்வதும் அடிக்கடி பதிவாகக்கூடிய விடயமாக விளங்குகின்றன.

குறிப்பாக சீரற்ற மழை மற்றும் கடும் காற்றுடனான காலநிலை காரணமாக மரங்கள் முறிந்து விழும் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. இது பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

அந்த வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாகாண அதிகார சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் வீதிகளில் மரங்களும் மரக்கிளைகளும் திடீரென முறிந்து வீழ்வதைக் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த 7 நாட்கள் நிலவிய சீரற்ற காலநிலை வேளையில் நாட்டின் பல பிரதேசங்களிலும் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. அதிலும் கொழும்பு மாநகர சபைப் பிரதேசத்திற்குள் மாத்திரம் மரங்களும் மரக்கிளைகளும் முறிந்து வீழ்ந்த 59 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையில் கொழும்பு மாநகரப் பகுதியில் காணப்படும் ஆயிரம் மரங்கள் குறித்து விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றில் 500 மரங்கள் பெரும் பிரச்சினைக்குரிய நிலைமையைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்ட கொழும்பு மாநாகர சபையின் ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன சுமார் 200 மரங்கள் மிகவும் பழைமை மிக்கவை எனவும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் கொழும்பு மாநகரப் பிரதேசத்தில் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் பாதிப்புக்களையும் சேதங்களையும் ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தலுடன் சுமார் 200 மரங்கள் காணப்படுவதாக ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. அதனால் மிகவும் பழைமை வாய்ந்த சுமார் 90 மரங்கள் ஏற்கனவே பாதுகாப்பாக வெட்டி அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. கடும் அச்சுறுத்தல் நிலையில் காணப்படும் மேலும் 110 மரங்களை வெட்டி அப்புறப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதாவது நன்கு உயர்ந்து வளர்ந்துள்ள மரங்களும் பழைய மரங்களும் இவ்வாறு வெட்டி அப்புறப்படுத்தப்பட இருக்கின்றன.

இதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராணுவத்துக்கும் அரச மரக்கூட்டுத்தாபனத்துக்கும் வழங்கியுள்ளார். அந்த அடிப்படையில் 110 மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மரக்கூட்டுத்தாபனம் முன்வந்திருப்பதாக மாநகர சபையின் ஆணையாளர் பத்ராணி குறிப்பிட்டிருகின்றார்.

இவ்வாறு நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் பாதிப்புக்களையும் சேதங்களையும்' ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தலைக் கொண்டுள்ள மரங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்நடவடிக்கையின் ஊடாக மரங்கள் முறிந்து விழுவதால் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படக்கூடிய சேதங்களையும் பாதிப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளவே எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான சூழலில் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் பாதிப்புக்களும் சேதங்களும் ஏற்படாத வகையில் மரவளர்ப்பை முன்னெடுக்க வேண்டிய தேவையும் பரவலாக உணரப்பட்டுள்ளது. அதனால் மரவளர்ப்பை திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுப்பது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கிய ஒரேயொரு தலைவர் ஜனாதிபதி ரணில் ஆவார்

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக் கூறி ஜனாதிபதிகள் பலரும் பதவிக்கு வந்தாலும் எவரும் அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தவில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் தெரிவித்தார்.



இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் பொறுப்பை ஏற்க அஞ்சிய நபர்கள் தற்போது ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்குப் பயந்து பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாகவும் குலசிங்கம் திலீபன் சுட்டிக்காட்டினார்.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மக்களுக்கு 'உறுமய' காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

"இன்றைய தினம் வன்னிப் பிரதேச மக்களுக்கு மிக முக்கியமான தினமாகும். இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு அநாதரவான நிலையில் இருந்தது. நாட்டைப் பொறுப்பேற்க முன்வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கப்பட்ட போதும், எவரும் முன்வரவில்லை. நாட்டை பொறுப்பேற்று மக்களை சுபீட்சமான வாழ்க்கைக்குக் கொண்டு செல்ல யாரும் தயாராக இருக்கவில்லை. அன்றைய தினம் தனியொருவராக நாட்டைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை சிறந்த முறையில் வழிநடத்திச் செல்கிறார் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை.

அதேபோல இன்று நாட்டைப் பொறுப்பேற்கத் தவறியவர்கள் போஸ்டர் ஒட்டுகிறார்கள். கூட்டம் நடத்துகிறார்கள். சிவப்பு நிறத்தில் எல்லா இடத்திலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அன்று போஸ்டர் ஒட்டாமலும் கூட்டம் நடத்தாமலும் நாட்டைப் பொறுப்பேற்றிருந்தால் அவர்கள் எவ்வளவோ விடயங்களைச் சாதித்திருக்கலாம். ஆனால் அவர்களால் எதனையும் சாதிக்க முடியாது. அதற்கான ஆளுமை ரணில் விக்கிரமசிங்கவிடம் மாத்திரமே இருக்கிறது.

20 இலட்சம் பேருக்கு காணி உறுதி வழங்குவது இலகுவான விடயமல்ல. வன்னி மண் யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டது. ஜனாதிபதியின் 'உறுமய' திட்டத்தினால் எமது மக்கள்தான் அதிகம் பயனடைய இருக்கிறார்கள். குறிப்பாக வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் அதிகம் பயனடையும்.

எத்தனையோ ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி செய்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாகக் கூறிக் கொண்டு அரியாசனம் ஏறிய அவர்கள் அதற்கான எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

எத்தனையோ சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி ரணில் நடத்தியிருக்கிறார். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட அது தெரியும். அதில் முன்னேற்றமும் காணப்பட்டுள்ளது. கடந்த பொங்கல் தினத்திற்கு முந்தைய தினத்தில் வவுனியா மாவட்டத்திற்கு ஜனாதிபதி வருகை தந்திருந்தார். வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கங்கள் வனவளத் திணைக்களத்தினால் காணிகள் கையகப்படுத்தப்படுவது குறித்து எடுத்துரைத்தோம். எமது மூதாதையர் காலத்தில் விவசாயம் செய்த காணிகளுக்குக் கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு எந்த ஜனாதிபதி தீர்வு பெற்றுக் கொடுத்தார்? ஒருவரும் இல்லை. நான், இராஜாங்க அமைச்சர் மஸ்தான் மற்றும் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய 1985 ஆம் ஆண்டிற்குப் பிறகு கையகப்படுத்தப்பட்ட காணிகள் அனைத்தையும் விடுவிப்பதாக தெரிவித்தது யார்? காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தது யார்? ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் வனவளத் திணைக்களத்துடன் கலந்துரையாடி காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுத்தார்.



### வவுனியா, மன்னார் மாவட்ட மக்களுக்கு 'உறுமய' காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன்

வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள ஆயிரக்கணக்கான காணிகள் இப்பொழுது கூட விடுவிக்கப்படுவதற்குத் தயாராக இருக்கின்றன. இருந்தாலும் மன்னார் மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எரிவாயு பெற வரிசை, அத்தியாவசியப் பொருட்களுக்கு வரிசை என பல கஷ்டங்களை எமது மக்கள் அனுபவித்தார்கள். வெளிப்படையாகச் சொன்னால் பாணுக்குக் கூட வரிசையில் நின்றோம். அந்த நேரம் ஒரு இறாத்தல் பாண் கிடைக்காதா என்று ஏங்கினோம். கட்டடப் புனரமைப்பிற்கு அடிக்கல் நாட்டி விட்டு வீட்டுக்குள் பதுங்கிக் கிடக்கும் சூழ்நிலை எமக்கு ஏற்பட்டது. ஆனால் இன்று வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. காணிகள் விடுவிக்கப்படுகின்றன. குளங்கள் புனரமைக்கப்படுகின்றன. இவையெல்லாம் நடக்கும் என்று நாம் எண்ணிப் பார்த்தோமா? இல்லை. ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் சாதித்துக் காட்டியவை இவை.

எமது மாவட்டத்தில் உள்ள குளங்கள் மற்றும் காணிகளை நவீனமயமாக்கப்பட்ட விவசாயத்துக்கு உள்வாங்கி மக்கள் அனைவரையில் விவசாயத்தில் முன்னேற்றக் கூடிய ஒரு வேலைத்திட்டத்தை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார்.

### 'நாட்டைப் பொறுப்பேற்க அன்று முன்வராதவர்கள் இன்று சுவரொட்டி ஒட்டுகிறார்கள்'

சாம்பல் மேடுகளும் மூடப்பட்ட கடைகளும் புனரமைக்கப்படாத வீதிகளும் ஒரு டொலர் காசு கூட இல்லாத நிலைமையில் இருக்கையில்தான் ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றார். திறைசேரி காலியாக இருந்தது. அன்று புறம் பேசியவர்கள் இன்று ஜனாதிபதியின் வளர்ச்சியைக் கண்டு அஞ்சக் கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

இரண்டு வருடங்கள் கூட நிறைவடையாத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். குறுகிய காலத்தில் இந்த மாற்றங்கயை ஏற்பத்தித் தந்த ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்தினால் எமது நாடு நிச்சயம் குறுகிய காலத்தில் சுபீட்சமான நாடாக மாறும்.

மத்தியதர வகுப்பினர் வாழும் காணிகளுக்கு இது வரை காணி ஆவணம் வழங்கப்படவில்லை.

வனவளத் திணைக்களப் பிரச்சினை குறித்து ஜனாதிபதியுடன் பேசும் போது மத்தியதர வகுப்பினரின் காணிகளில் வாழ்பவர்களுக்கு உரிய ஆவணம் வழங்க வேண்டும் என்று நாம் கோரினோம். அந்தக் கோரிக்கை இன்று நனவாகியுள்ளது.

மத்தியதர வகுப்பினரின் காணிகளுக்கு ஆவணம் வழங்குவது தொடர்பான வேலைத்திட்டம் 75 வீதம் நிறைவடைந்துள்ளது. பட்டதாரிகளுக்க ஆசிரியர் நியமனம், 2 ஆயிரம் கிராம சேவகர் நியமனம் என்பன வெறும் வாய்ப்பேச்சாக அன்றி நனவாகியுள்ளன.

ஜனாதிபதியும் மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றிணைவதால் மாத்திரம் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. மக்கள் ஒரு சுபீட்சமாக வாழ்க்கையை வாழ வேண்டுமானால் அரச திணைக்களங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். உறுமய திட்டத்திற்காக அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். இதே அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் எதிர்வரும் புதிய வருடம் எமது புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான வருடமாகத்தான் இருக்கும்.

எத்தனையோ ஜனாதிபதிகள் வந்து சென்றார்கள். இராணுவத்தின் வசமிருந்த காணிகள் விடுவிக்கப்பட்டதா? ஒரு ஏக்கரல்ல, ஒரு துண்டுக் காணி கூட விடுவிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும் இராணுவத்தின் வசமிருந்த காணிகள், கோயில் என்பன இன்று விடுவிக்கப்பட்டுள்ளன. இதனைப் பற்றி சற்று சிந்திக்க வேண்டும். இந்தக் குறுகிய காலத்தில் ஜனாதிபதியால் இவற்றையெல்லாம் சாதிக்க முடியும் என்றால் அவரது கரத்தை நாம் பலப்படுத்தினால், நாம் மட்டுமன்றி எமது சந்ததியும் அதன் பயனை அடையும்.

சிலரது போஸ்டருக்கும் சிலரது முறுக்கேறிய பேச்சுக்களுக்கும் நாம் ஏமாறாக் கூடாது. வடக்கு கிழக்கை இணைக்கக் கூடாது என்று சொன்னவர்கள் இன்று தமிழ் மக்களின் உரிமையைப் பற்றிப் பேசுகின்றனர். அனைவரும் ஒன்றுதிரண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரத்தைப் பலப்படுத்த வேண்டும்".

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நற்பிட்டிமுனையில் பிரதேசத்திலுள்ள கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு

நற்பிட்டிமுனை ஸ்ரீ கணேசராலயம் சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய நிருவாக சபை வருடந்தோறும் நடத்தும் மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு ஆலயத் தலைவர் த.ரவிராஜ் தலைமையில் நற்பிட்டிமுனை சுமங்கலி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு அதிதிகளாக கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்சின் பக்கீர், நீலாவணை விசேட அதிரடிப்படை தலைமை அதிகாரி R. A. D. C.S. ரத்நாயக்க மற்றும் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி, நற்பிட்டிமுனை ஆலயங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பொதுஅமைப்புக்கள் விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





மேலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர் தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான நினைவுச் சின்னம், பணப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டன. அறநெறிப் பாடசாலை மாவர்களுக்கு சீருடைக்கான நிதிப்பங்களிப்பினை A. யோகராஜ், K.தேவகுமார் ஆகியோர் வழங்கிருந்தனர். மேலும் வருகை தந்த அதிதிகளினால் மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் மற்றும் பணப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

**துஜியந்தன்...**
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

# மக்கள் உள்ளத்தில் என்றும் வாழும் அதிபர் மர்ஹூம் உபைதுல்லாஹ்

அட்டாளைச்சேனை, அல் ஜென்னா வித்தியாலய முன்னாள் அதிபர் எம்.ஏ.சி.முகம்மது உபைதுல்லாஹ் அண்மையில் காலமானார். 1969.05.15 ஆம் திகதி பிறந்த அன்னார், 2024.05.23 இல் காலமானார்.

அதிபர் மர்ஹூம் உபைதுல்லாஹ் மக்கள் மனங்களில் இடம்பிடித்தவராவார். 1998.01.27 அன்று ஆசிரியராக நியமனம்பெற்ற அவர், 2016.05.09 இல் இலங்கை அதிபர் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டார். ஆசிரியராகவும், அதிபராகவும் பதவிவகித்த காலங்களில் தனது கடமையை திறமையாக நிறைவேற்றிய ஒருவராக அவர் காணப்பட்டார். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகவும், பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் அவர் அர்ப்பணிப்புடன் பாடுபட்டார்.



அட்டாளைச்சேனை, ஆலம்குளம் றகுமானியா வித்தியாலய அதிபராக பதவியேற்ற அவர், தனது கடமையை திறமையாக முன்னெடுத்தார். கஷ்டப் பிரதேச பாடசாலை மாணவர்களின் முன்னேற்றத்துக்காக அவர் பாடுபட்டார்.

பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தியிலும், மாணவர் கல்வி விருத்தியிலும் அவர் அதிக அக்கறை செலுத்தினார். கடந்த 2019ஆம் ஆண்டு றகுமானியா வித்தியாலயத்தின் 50 வருட நிறைவு பொன்விழாவை கோலாகலமாக நடாத்தினார்.

நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடியின் போது, மணல் ஏற்றும் டிப்பர் வாகனத்தில் பயணித்து பாடசாலையை சென்றடைந்தார்.

இடமாற்றம் பெற்று, அட்டாளைச்சேனை அல்ஜென்னா வித்தியாலய அதிபராக கடமையாற்றி வந்த நிலையிலயே அவர் காலமானார். அவரது மரணம் அபிமானிகளை துயரம் கொள்ளச் செய்தது. அவரது ஜனாஸா இறுதி நிகழ்வுகளில் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# பாராளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே பொதுவேட்பாளர் விடயம் முன்வைப்பு!

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் கண்டனம்

பாராளுமன்ற தேர்தலை கருத்திற்கொண்டே உதிரிகளாகவுள்ள குழுக்களை ஒன்றிணைப்பதற்காக பொது வேட்பாளர் விடயத்தை பயன்படுத்த விக்னேஸ்வரன் போன்றவர்கள் முற்படுவதாக ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் தமிழ் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படையில் செயற்படுகின்றோம். அதனடிப்படையில் ஒற்றுமையை கொண்டுவர என்ன செய்யலாம் என்று நாங்கள் யோசித்தபோது இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை சிந்தித்தோம் என விக்னேஸ்வரன் தெரிவித்ததன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமை



அவர்களின் பொருளாதார வளர்ச்சி தொடர்பாக இவர்கள் சிறிதளவும் சிந்திக்கவில்லை.

மாறாக தமது சுயநலன்களிலிருந்தே இன்னும் பயணிக்க முற்படுகின்றனர். இதன்மூலமாக இவர்கள் தமிழ் மக்களுக்கு சொல்கின்ற செய்தி எவ்வாறானது என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

நாட்டின் நலன், மக்களின் நலன் மற்றும் பொருளாதார நலன் என்பவற்றிலிருந்து விலகி தமது கொள்கையற்ற கோட்பாடற்ற அரசியல் இலக்கற்ற உதிரிகளை தமிழ் பொது வேட்பாளர் என்ற போர்வையில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை இலக்குவைத்தே இவர்களுடைய கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

ஒவ்வொரு கட்சிகளும் மக்கள் நலன்களை புறந்தள்ளி தமது சுயநலன்களை முன்னிறுத்தியே செயற்படுகின்றன. அவர்களிடம் நிலையான கொள்கை இல்லை. ஒரு நிலையான அரசியல் இலக்கு இல்லை.

மக்களுக்கான வழிகாட்டல் இல்லை என்பது விக்னேஸ்வரன் கூற்றிலிருந்து தெளிவாகப் புலப்படுகின்றது.

ஆகவேதான் இந்த நாட்டின் விகிதாசார நிலையை கருத்தில் எடுப்போமாயின் பெரும்பான்மை இனமாகவுள்ள தென்னிலங்கையை சேர்ந்தவர்கள் ஜனாதிபதியாக வர வாய்ப்புள்ளது.

ஆகவே பொது வேட்பாளர் என்ற கருத்தானது பிரிந்திருக்கும் உதிரிகளை ஒன்றிணைத்து அரசியல் இலாபம் தேடும் ஒரு செயற்பாடாகவே ஈ.பி.டி.பி கருதுவதாக அவர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## கனரக வாகனம் – முச்சக்கரவண்டி மோதி விபத்து; நால்வர் படுகாயம்

(யாழ். விசேட நிருபர்)



யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் கனரக வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மதியம் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

கனரக வாகனம் வீதியின் ஓரமாக நின்று, வீதிக்கு வருவதற்கு முற்பட்ட வேளை, பின்புறமாக வந்த முச்சக்கரவண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து கனரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி மற்றும் அதில் பயணித்த மூவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# முள்ளியவளையில் இளம் பெண் கொலை, கணவர் உள்ளிட்ட மூவர் கைது!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பூதன் வயல் கிராமத்தில் 23 வயதுடைய இளம் குடும்ப பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் அவருடைய கணவர் மற்றும் இரு பெண்கள் முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா ஆச்சிகுளம் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளம் குடும்பப்பெண் ஒருவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் பூதன் வயல் கிராமத்தை சேர்ந்த இளைஞனை திருமணம் செய்து 7 மாதங்களாக அவருடன் வாழ்ந்துவந்துள்ளார்.

வீட்டின் கிணற்றில் விழுந்த இளம் பெண்ணை அயலவர்கள் கிணற்றிலிருந்து மீட்டு உழவு இயந்திரத்தில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள்ளனர். எனினும் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சட்டவைத்திய அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் பெண் கொலைசெய்யப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்தது.

இந்நிலையில் முள்ளியவளை பொலிஸாரால் பெண்ணின் கணவர் மற்றும் அவர்களுடன் தங்கியிருந்த நெடுங்கேணியைச் சேர்ந்த இரு பெண்கள் உள்ளிட்ட மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த முள்ளியவளை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கல்வி மறுசீரமைப்பு ஊடாக முன்பள்ளி ஆசிரியர்களின் நீண்டகாலப் பிரச்சினை தீர்க்கப்படும்

(சாவகச்சேரி விசேட நிருபர்)



கல்வி மறுசீரமைப்பு ஊடாக இலங்கை முன்பள்ளி ஆசிரியர்களின் நீண்டகாலப்பிரச்சினை தீர்க்கப்படும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஸ்ரீ பழனி மண்டபத்தில் தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பள்ளி ஆசிரியர்கள் பலவருடங்களாக குறைந்த வருமானத்தோடுஅடுத்ததலைமுறைக்குசேவையாற்றி வருகின்றனர்.

இது வடக்கு மாகாணத்தில் மாத்திரமல்ல இலங்கை முழுவதும் உள்ள நிலைமை. நாம் வடக்கு மாகாணசபையிலிருந்த காலத்தில் தான் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு முதன்முறையாக ஆறாயிரம் ரூபாவாக உயர்த்தப்பட்டது.

முன்பள்ளிக் கல்வியை கல்விக் கட்டமைப்புக்குள் உள்வாங்க வேண்டும் என நாம் மூன்று வருடங்களுக்கு மேலாக வலியுறுத்தி வருகிறோம். முன்பள்ளிக் கல்வியை கல்விக் கட்டமைப்பிற்குள் கொண்டு வர வேண்டியது மிக அவசியம். அதற்கான வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முன்பள்ளிக் கல்விக்கான பாடத்திட்டம் கூட உருவாக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளுடைய அடிப்படை முன்பள்ளிக் கல்வி தான். எனவே முன்பள்ளியில் சரியான பாடத்திட்டங்களை உள்ளெடுக்காவிட்டால் அதனை பின்னர் சரி செய்வது கடினமாகிவிடும். இதனைக் கருத்திற்கொண்டே கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை ஊடாகவே முன்பள்ளி ஆசிரியர்களுடைய நீண்டகால பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மாத்திரமான பிரச்சினை என்றால் இதனை எப்போதோ தீர்த்திருக்க முடியும். இது தேசிய பிரச்சினை. எனவே தான் சில வருடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதில் எனது ஒத்துழைப்பும் அழுத்தமும் எப்போதும் இருக்கும்.

அத்தோடு யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவப்படுத்தும் செயற்றிட்டமொன்றையும் மிக விரைவாக முன்னெடுக்கவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

# பிரபல போதைப்பொருள் வர்த்தகர் நெல்லியடியில் கைது

(நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

பிரபல போதைப்பொருள் வர்த்தகரொருவர் நெல்லியடிப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (27) மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெரு பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் என தெரியவருகின்றது.

நெல்லியடியிலுள்ள அரச புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய நெல்லியடி நகர் பகுதியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் போதை வியாபாரத்திலிருந்து பெறப்பட்ட 80 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான பணமும் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மதுபான விற்பனை நிலையத்தை அகற்ற கோரி மக்கள் போராட்டம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை சுருவில் பகுதியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையத்தை அகற்ற கோரி அப்பகுதி மக்கள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்பவற்றுக்கு அருகில் மது விற்பனை நிலையம் காணப்படுவதால், பல சமூக பிரச்சினைகள் ஊர்காவற்துறை பிரதேசத்தில் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே தீவக மக்களின் நலன்கருதி மதுவிற்பனை நிலையத்தை அகற்ற கோரி இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் முடிவில் ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் சதீசன் மஞ்சுளாதேவியிடம் மகஜரையும் கையளித்தனர்.

அதேவேளை மதுவிற்பனை நிலையத்தில், இரவு வேளைகளில் நேரம் தாழ்த்தியும் விற்பனைகள் இடம்பெறுவதாகவும், பௌர்ணமி தினங்கள் உள்ளிட்ட, மதுவரி திணைக்களத்தால் மதுபானசாலைகளை மூட உத்தரவிடப்படும் நாட்களிலும் மதுவிற்பனை இடம்பெறுவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

# யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல்

(சாவகச்சேரி நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொண்டவர்பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாள்வெட்டு சம்பவத்தில் காயமடைந்த நபரை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்தவர், வைத்தியசாலை வளாகத்தினுள் அத்துமீறி மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்று, தான் ஏற்றி வந்த நபரை சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார்.

இதன்போது, பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர், மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவரை, வைத்தியசாலை வளாகத்தினுள் 'ஏன் அத்துமீறி நுழைந்தீர்கள்' என கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது இருவருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்ட போது, பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதனையடுத்து அவ்விடத்தில் ஒன்று கூடிய சக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்குதலாளியை மடக்கி பிடித்து, யாழ்ப்பாண பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகநபரை பொலிஸார் கைது செய்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


**உபயோகித்த கணினி வன்பொருள் மற்றும் வெளி இணைப்புக்கள், அலுவலக தளபாடங்கள், பொருத்துக்கள், குளிஷரூட்டிகள், அம்பிளிஃபயர் மற்றும் மின் சாதனங்கள்**

உபயோகித்த கணினி வன்பொருள் மற்றும் வெளி இணைப்புக்கள், மேசைகள், கதிரைகள் மற்றும் அலுமாரிகள், கருமபீட தளபாடங்கள், மூங்கில் மறைப்புக்கள், டெம்பேர்ட் கண்ணாடிகள், அலுமினிய கதவுகள், துருப்பிடிக்காத இரும்புப் பொருட்கள், இரும்பிலான இழு பெட்டிகள் (ட்ரேயர்), உபயோகித்த குளிஷரூட்டிகள், டயர்கள், மின் வெளிச்ச பொருட்கள் மற்றும் சாதனங்கள் பார்வையிடக்கூடிய இடம்: இல. 696, காலி வீதி, கொழும்பு 03

கணினிவன்பொருட்களைப் பார்வையிடும் நேரம் : 2024/06/03 - 04 மு.ப 9.00 - பி.ப 5.00

ஏலத்தில் விடப்படுகின்ற ஏனைய பொருட்களைப் பார்வையிடும் நேரம் : 2024/06/10 - 11 மு.ப 9.00 - பி.ப 5.00

தொலைபேசி
0772936184
uditha.w@cargillsbank.com

CargillsBank
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி


# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா





யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த திருவிழா நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 25 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது.

# வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய மணவாளக்கோல உற்சவம்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

வதிரி பூ வற்கரை பிள்ளையார் ஆலய ம ணவாளக்கோல உற்சவ 1008 சங்காபிசேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. காலை 6 மணிக்கு எம்பெருமான் வீதியுலா வரு கை தந்து பூர்வாங்க கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து வி நாயக வழிபாடு புண்ணியவாசனம், விசேட திரவிய கோமம், தீபாரதனை, வேததோத்திர திருமுறை பாராணயம், ஆசிர்வாதம், கும்பபிரதட்சணம் என்பன நடைபெறும். மணவாளக்கோல உற்சவத்தை ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ குகோகுலன் குருக்கள் பிரதம குருவாகவிருந்து நடத்தி வைப்பார்.

# யாழ். மாவட்ட பதிவாளர் நாயக திணைக்கள ஒரு நாள் சேவைகள் நிறுத்தம்

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்ட பதிவாளர் திணைக்களத்தில் பிரதியாக்க இயந்திரங்கள் (போட்டோ கொப்பி) பழுதடைந்துள்ளமையால் சேவை பெற செல்லும் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இயந்திரங்கள் பழுந்தடைந்துள்ள காரணத்தால், திணைக்களத்தில் காணிகளுக்கான தோம்பு மற்றும் உறுதி பிரதிகளை வழங்கும் ஒருநாள் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதேவேளை யாழ். மாவட்ட பதிவாளர் திணைக்களத்தில் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளமையால், திணைக்கள உத்தியோகத்தர்கள் கடும் வேலை சுமைகளுடன் கடமையாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி மழை காலங்களில் கீழ் தளத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் திணைக்கள சேவைகள் இடைநிறுத்தப்பட்ட சம்பவங்களும் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கவனம் செலுத்தி குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கள் 2024.05.27
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5486 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,530,996.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 4 5 4 6 5 5

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 061 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 4 6 5 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3728 — சீட்டிழுப்பு திகதி 2024.05.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,958,041.60
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 07 18 21 32 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 93101

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1834 — 2024.05.27 — 90703 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 433,928,226.00
ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 09 — வெற்றி இலக்கங்கள் 24 55 64 77
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.05.27 — சீட்டிழுப்பு இலக்கம் 312
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 9 0 6 4 2 7 — L7 எழுத்து F
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 30,440,463.20

ராசி சுப பலன் — திகதி 2024.05.27 — சீட்டிழுப்பு இலக்கம் 795 — செவ்வாய் அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,219,357.80
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 11 16 39 48 — தனயோக இலக்கம் 84493 — நாளுக்கான விதி எண் 22

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1516 — 2024.05.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,088,740.96
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 12 28 33 40 — விசேட எழுத்து V — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 67948

## ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம்...

விடுத்து இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். அரசியலமைப்பின் பிரகாரம் ஜனநாயகத்தை பாதுகாக்க ஜனாதிபதி தேர்தல் குறித்த கால எல்லைக்குள் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார், அதுவே அரசாங்கத்தின் நிலைப்பாடாகவும் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது பாராளுமன்றத் தேர்தலையோ இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைப்பதற்கான யோசனைகளை பல்வேறு தரப்பினர் சமர்ப்பிக்கலாம். அல்லது அது தொடர்பான எந்தவொரு கருத்தையும் சமர்ப்பிக்கலாம். இது அவர்களின் தனிப்பட்ட கருத்தே அன்றி அரசாங்கத்தின் நிலைப்பாடல்ல. அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும் எனவும் நிமல் லான்சா அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு ரயில் பாதை அபிவிருத்தி...

பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலே ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், பொசன் போயாவுக்கு முன்பதாக வடக்கு ரயில் பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடையுமென ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.இருந்த போதும் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவிலேயே நிறைவடையும். எனினும் பொசன் போயா விசேட நிகழ்வுகளை கவனத்திற்கொண்டு விசேட பஸ் சேவைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த பஸ் சேவைகள் பொசன் போயா தினத்திற்கு முன்னைய தினத்திலும் அதற்குப் பின்னர் வரும் தினங்களிலும் சேவையிலீடுபடுத்தப்படும். இதுதொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் துறையினரும் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக வும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு ரயில் பாதையில் தம்புத்தேகம மற்றும் சில இடங்களில் ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான இடங்களிலுள்ள அனுமதியற்ற கட்டடங்களை எவ்வித பிரச்சினையுமின்றி அகற்றக்கூடியதாக இருக்குமென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (28) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

ரயில்வே திணைக்களம் தொடர்பான கட்டளை சட்டத்திற்கு அமைவாக ரயில்வே திணைக்களத்திற்கு உட்பட்ட பாதுகாக்கப்பட்ட எத்தகைய வளங்களையும் ரயில்வே பிரிவின் அபிவிருத்திற்காக பயன்படுத்த முடியும். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதை நூறு வருடங்களுக்குப் பின்னர் புனரமைக்கப்படுகிறது. பொசன் தினத்திற்குப் பின்னர் இரண்டு மாதங்களுக்குள் புனரமைப்பு பணிகளை பூர்த்திச் செய்ய முடியும் என புனரமைப்பு பணிக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். புனரமைப்பின் பின்னர் மணித்தியாலத்திற்கு நூறு கிலோமீற்றர் வேகத்தில் ரயில் செல்லக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்த அமைச்சர், ஐந்து மணித்தியாலங்கள் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் கொழும்பிலிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு ரயில் பாதை புனரமைப்பு பணிகள் காரணமாக இவ்வருடம் பொசன் பண்டிகைக்காக அனுராதபுரத்திற்கு செல்லும் பக்தர்களுக்கு வசதியாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் இணைந்து விசேட பஸ் சேவைகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது குறித்த நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## IMF நிறைவேற்று சபையின்...

எக்ஸிம் வங்கியுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமென நிதி இராஜங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை மூலம் இலங்கைக்கான கடன் ஒத்துழைப்பு தொடர்பில் விரைவில் மீளாய்வு செய்யப்படவுள்ளது. இந்த மீளாய்வுக்கு முன்னர் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை மூலம் அனுமதி வழங்கப்பட்ட மேற்படி மீளாய்வு மூலம், இலங்கைக்கு 330 மில்லியன் டொலரை சர்வதேச நாணய நிதியம் வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## துரோகிப் பட்டத்துக்குப் பயந்து...

மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதை வட பகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கின்றேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறு கூறியிருப்பது தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடமாகாணம் வாக்களிக்கவில்லை. ஆனாலும், கிழக்கு மாகாணம் வாக்களித்தது.

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கிழக்கு மாகாண மக்களுக்கு அறிவிக்கப்பட்டும் அம்மக்கள் வாக்களித்தனர். ஏனெனில், அதை அமுல்படுத்துகின்ற அதிகாரம் அந்தப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இருக்கவில்லை. ஆனால், புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் மக்கள் வாக்களிக்கவில்லை.

எனினும், ஒருசிலர் வாக்களித்தனர் என நினைக்கின்றேன். வாக்களித்த ஒரு சிலரும் நூறுவீதம் ரணில் விக்ரமசிங்கவுக்குத்தான் வாக்களித்தனர்.

வடக்கில் மக்களுக்கு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் யாருக்கு அந்த வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கும் என்பதில் எவருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இதுவரையில் இருந்ததில்லை.

ஆனால், இன்றைக்கு ஊடகவியலாளர்களான நீங்கள்தான், இப்படியான சந்தேகத்தை எழுப்புகின்றீர்கள். எல்லோருக்கும் தெரிந்த ஒரு விடயத்தை பேசுதற்கு பலரும் பயந்துள்ளனர்.துரோகி என்ற பட்டத்தை சூட்டி விடுவார்கள் எனப்பயந்தே இதைப் பேச சிலர் விரும்பவில்லை.

ஊடகவியலாளர்களும் இதே பயத்திலேதான் இருந்துள்ளார்கள் என்பது, இங்கு கேட்கப்படும் கேள்விகளிலிருந்து புலப்படுகிறது.

எனினும், என்னைத் துரோகி என்று சொல்லிவிடுவார் எனப் பயந்து உண்மையைச் சொல்வதற்கு நான், பயப்பட்டதில்லை. இவ்வாறு சுமந்திரன் எம்,பி,கூறியுள்ளார்.

## அனைத்து தொழிலாளருக்கும்...

திட்டத்துக்கான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்,

மக்களுக்கு பண்டிகைகளைக் கொண்டாட மன நிம்மதி இல்லை என்றும் சிலர் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வெசாக், பொசன் பண்டிகைகளை மாத்திரமன்றி நத்தார் பண்டிகையையும் கொண்டாடுவதற்குத் தேவையான சூழலை உருவாக்கியுள்ளது. அதனால் குற்றச்சாட்டுக்களை முன்வைப்போர் கடந்த வருடத்துடன் தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள் என்றே சொல்வேன். மக்கள் இழந்திருந்த மன நிம்மதி மீட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை சாடும் எவரிடத்திலும் சரியான பொருளாதாரத் திட்டமொன்று இல்லை. அப்படியொரு வேலைத்திட்டம் இருந்தால் முன்வையுங்கள், நாங்கள் சொன்னதை செய்துக்காட்டிக் கொண்டிருக்கிறோம். அஸ்வசும, உறுமய உள்ளிட்ட திட்டங்கள் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் இருந்தாலும், இதற்கு முன்னர் அவர் ஜனாதிபதியாக இருந்ததில்லை. அவர் முதல் முறையாக பதவியேற்றதிலிருந்து பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார். 25வீதமாகக் காணப்பட்ட வங்கி வட்டி இன்று 12%வீதம் 8% ஆகக் குறைந்துள்ளது.

ஊழல் தடுப்புச் சட்டம், தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம், சொத்துப் பொறுப்புச் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. பொருளாதார மாற்றம் தொடர்பான சட்டமூலம் மற்றும் பொது அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் என்பன பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பி ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## !சு.க தலைவராக செயற்பட...

பிறப்பித்துள்ளது. அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் விஜேயதாச ராஜபக்சவும் அந்த கட்சியின் பொதுச் செயலாளராக கீர்த்தி உடவத்தவும் செயற்படுவதை தடுக்கும் வகையில், ஏற்கனவே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடையுத்தரவொன்றை பிறப்பித்திருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்க நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முறைப்பாட்டு மனுவை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட சந்தர்ப்பத்திலேயே, கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான மேற்படி உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே நேற்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்னவின் முறைப்பாட்டு மனுவை கவனத்திற் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேலும் ஒரு தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேற்படி நியமனம் தொடர்பில் கடுவெல மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாதென அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா நீதிமன்றத்தில் ஆட்சேபனை வெளியிட்டிருந்தார்ர்.

இந்த சந்தர்ப்பத்தில் மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சந்தன ஜயசுந்தர, நீதிமன்றத்துக்கு விடயங்களை முன்வைக்கையில் கடுவலை மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவு இந்த நீதிமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தாது என்றும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏனைய அரச சேவைகளுடன்...

ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில், கிராம சேவகர்களின் தொழிற்சங்க சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (28) நடைபெற்ற கலந்துரையாடலில் சாகல ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இதன்போது கிராம சேவகர் சேவை யாப்பு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சம்பள பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இங்கு கிராம சேவகர்களின் பதவி உயர்வு தொடர்பில் பல பிரச்சினைகள் எழுந்துள்ளதால், அவற்றைத் தீர்க்கும் வகையில் குறித்த சேவைக்கான சட்டமூலம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென கிராம சேவகர்களின் சம்மேளனம் வலியுறுத்தியது.

இதன்படி, அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சேவை சட்டமூலத்தில், சாதகமான முன்மொழிவுகளை உள்வாங்குமாறு சாகல ரத்நாயக்க அறிவுறுத்தினார்.

அறுபத்தொரு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் பழமையான கிராம சேவை என்ற வகையில், அதற்குரிய சேவை சட்டமூலத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலும் கிராம சேவகர்கள் ஆற்றிவரும் பங்களிப்பையும் சாகல ரத்நாயக்க பாராட்டினார்.

இக்கலந்துரையாடலில் பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள், கிராம சேவகர் சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## ISIS: கொழும்பில் கைதானவரின்...

கொள்கலன் பிரிவில் தொழில் செய்பவரெனவும் தெரியவந்துள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தவர்களென்ற சந்தேகத்தின் பேரில், இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவர் சமீபத்தில் கொழும்பில் கைது செய்யப்பட்டார். இவர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்த தகவலின் அடிப்படையில், சந்தேகத்தின் பேரில் இவ்விரு சகோதரர்களும் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 'மலையக பத்தாண்டு' திட்டத்துக்கு...

எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ம் இந்தத் திட்டங்களின் முன்னேற்றத்தைப் பின்தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா, களுத்துறை, காலி, மாத்தறை, பதுளை, குருநாகல், இரத்தினபுரி. கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் 97 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி போன்ற பத்து பகுதிகளின் கீழ், இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாழ்வாதாரம், உணவுப் பாதுகாப்பு, சந்தை அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக 1,032 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. கல்விக்காக 1,152 திட்டங்களும், குடிநீர் வசதிக்காக 676 திட்டங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளன. மொத்த திட்டங்களில், 8,140 திட்டங்கள் சாலை வசதிகளை மேம்படுத்த செயல்படுத்தப்படுகின்றன. விவசாயம் மற்றும் சிறு நீர்ப்பாசன அபிவிருத்திக்காக 780 திட்டங்களும் மின்சாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அபிவிருத்திக்காக 271 திட்டங்களும், தொலைபேசி மற்றும் இணைய வசதிகளை மேம்படுத்துவதற்கான 13 திட்டங்களும் செயற்பட்டு வருகின்றன. சுகாதாரம் மற்றும் சுகாதார ஆரோக்கிய வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை 516 ஆகவுள்ளது . சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் முகாமைத்துவத்துக்காக 88 திட்டங்களும், வீட்டு வசதிகளை மேம்படுத்த 944 திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

## விசேட நிபுணத்துவக் குழுவை...

இதேவேளை, அமைச்சரவையில் (27) மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைவாக 2018 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் குறித்தும் ஆராய்ந்து, அடுத்த வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னர் அமைச்சரவைக்கு அறிக்கையிடுவதற்கு திறைசேரி செயலாளர் தலைமையில் குழுவை நியமித்து பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, தொழில்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கங்கள் தற்போதைய தொழில் நடவடிக்கைக்குப் புறம்பாக பணியாற்றுமாறு கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

கடமைக்கு சமுகமளித்த பின்னர், சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதென அறிவிக்கப்படுவதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## புதிதாக ஐந்து இலட்சம் பெண்... (3ஆம் பக்கத் தொடர்)

இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் சீதாவக்கை பிரதேசத்தை சேர்ந்த 5000 பேர் பயனடைவர்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரதமர், நாட்டின் குறைந்த வருமானம் பெறுவோர்களுக்கு மட்டுமின்றி, பெண்களுக்கும், கிராமம் கிராமமாக வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கவும், அப்பகுதியை பிரபலப்படுத்தவும், போஷாக்கான உணவை பிள்ளைகளுக்கு வழங்கவும் சீன மக்கள் குடியரசு இந்த இயந்திரங்களை வழங்கியுள்ளது. சீதாவக்கை மற்றும் பாதுக்கை பிரதேசத்திற்கு இந்த விசேட வாய்ப்பை வழங்கி அதனை வெற்றியடையச் செய்ய முன்வந்திருக்கும் அனைவரும் ஒன்றிணைந்து, இத்திட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும். சுய தொழில் திட்டம் தொடர்பான மேலதிக திட்டமாக இதை பிரபலப்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். இது ஏற்கனவே, பல மாகாணங்களில் பிரபலமான வருமான மூலமாக உள்ளது.

ஹங்வெல்லயில்தான் இந்தத் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. பிலிப் குணவர்தன விவசாயம் மற்றும் உணவு அமைச்சராக அன்று இலங்கையில் இந்த வியாபாரத்தை அப்போது ஆரம்பித்தார்.இதன்போது, உலகில் இவ்வளவு பெரிய இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எமது மாகாணத்தில் 1957முதன் முதலாக இந்தச் சந்தியில் உள்ள ஹங்வெல்ல கிராம சபை அலுவலகத்தில் ஒரு இயந்திரம் நிறுவப்பட்டது. நமது பாரம்பரியத்தையும் பெருமையையும் நாட்டுக்கு எடுத்துரைக்கும் திறனைப் பாதுகாத்து, கிராமத்தில் உள்ள மக்களின் ஆதரவுடன் இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாம் எதிர்கொள்ளும் இந்த இக்கட்டான காலத்தில், குறைந்த வருமானம் பெறுபவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வாழ்க்கையை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும்.

பிரதேச செயலக மட்டத்தில் ஐயாயிரம் வரையிலான புதிய தொழில் முயற்சியாளர்களாக பெண்கள் தரப்புக்கும் கைகொடுக்கும் புதிய சந்தர்ப்பத்தை ஜனாதிபதி அதற்போது அறிவித்துள்ளார். பழைய கடன்களையெல்லாம் நீக்கிவிட்டு புதிய தொழிலை தொடங்க முன்வரும் பெண் தொழில் முயற்சியாளர்கள், வர்த்தகம், உற்பத்தி என எதுவாக இருந்தாலும், புதிய தொழில் முயற்சியாளர்களாக முன்வருவதற்கு இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு இந்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அச்சமின்றி முன்வாருங்கள். இந்த பொருளாதாரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றவற்றை விற்பனை செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, அந்த நடவடிக்கைகளில் வெற்றி பெற முன்வாருங்கள். பிரதேச சபைகளுக்கும் பல்வேறு பயிற்சிகளை அளிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அரசாங்கம் என்ற வகையில், பாடசாலையை விட்டு வெளியேறும் இளைஞர் யுவதிகளுக்கும், புதிய தொழில் வாய்ப்புகளைத் தேடும் அனைவருக்கும் பயிற்சி அளிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

## சீரற்ற காலநிலையால்...

சுகாதார வசதிகள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறும் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

## இன்றைய பலன்கள்

### (29.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் சக நண்பர் வேலையும் சேர்த்து செய்யும் நிலை வரலாம். அலுவலகத்தில் எதிர்பார்க்கும் கடன் தொகை சிலருக்கு கிடைக்கக்கூடும்.

**ரிஷபம் :**
அலுவலகத்தில் நீண்ட காலமாக எதிர்பார்த்த கடன் தொகை கைக்கு கிடைக்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பை பெறுவீர்கள்.

**மிதுனம்:**
உத்தியோகத்தில் பதிவேடுகளை இடம் மாற்றி வைத்துவிட்டு உயர் அதிகாரிகள் கேட்கும்போது கிடைக்காமல் தொல்லை பட நேரலாம்.

**கடகம்:**
சம்பள உயர்வு பதவி உயர்வு தேடி வரலாம். பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் உயரதிகாரிகளின் கோபப்பார்வைக்க இலக்காக நேரிடும்.

**சிம்மம்:**
சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு அதிக ஆதாயத்துடன் கூடிய புதிய வேலை வந்து சேரலாம். ஓய்வில்லாமல் பணிகளில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி:**
சொந்தத் தொழிலில் முன்னேற்றமான போக்கு காணப்படும். புதிய வாடிக்கையாளர்கள் மூலம் தொழில் முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைப்பீர்கள் .

**துலாம்:**
உத்தியோகத்தில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வீர்கள். சக பணியாளர்களுடன் பேசும்போது வீண் வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

**விருச்சிகம்:**
உத்தியோகத்தர்களில் சிலருக்கு அலுவலகத்திலேயே பொறுப்புக்கள் வந்து சேரும். ஒரு சிலர் செல்வாக்கான இடத்தை பிடிப்பீர்கள் .

**தனுசு:**
உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரலாம்.

**மகரம்:**
உத்தியோகத்தில் கவனக் குறைவால் சில தொல்லைகளை சந்திப்பீர்கள். சகபணியாளர்களின் குடும்ப விவாகரங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது.

**கும்பம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் வேலை பளுவினால் தொல்லைப்படை நேரலாம். அவசியமான வேலை ஒன்றை அவசரமாக செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

**மீனம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமையை பாராட்டி முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படலாம். பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் அதிகாரிகளின் கோபப்பார்வைக்கு இலக்காக நேரிடும்.

## இரண்டு தேர்தல்களையும்... (3ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாடு இப்போதுதான் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவருகிறது. இத்தகைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. சர்தேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் நாம், பல இணக்கப்பாடுகளை மேற்கொண்டுள்ளோம். அந்த இணக்கப்பாடுகள் சீர்குலைக்கப்படுமானால், மீண்டும் நாம் 2022 யுகத்துக்கே செல்ல வேண்டும்.

இவற்றைத் தெரிந்துகொண்டே நாம் மீண்டும் அந்த அழிவை நோக்கிச் செல்வதா? அல்லது பொது இணக்கப்பாட்டுடன் இரண்டு தேர்தல்களையும் ஒத்திப்போடுவதா?இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். பதவியில் தொடர்ச்சியாக இருப்பதற்கு ஆசைப்படுபவரல்ல ஜனாதிபதி. கட்சியென்ற ரீதியிலேயே இதனை நாம் கோருகிறோம். பாராளுமன்ற தேர்தலுக்குச் சென்று வீணான நிதி விரயத்தை மேற்கொள்வதா என்பதையும் சிந்திப்பது சிறந்தது.எனவே, தேர்தல்கள் இரண்டையும் இரண்டுவருடங்களுக்கு ஒத்திப்போடுவதே சிறந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டாய ஓய்வு இழப்பீட்டு... (3ஆம் பக்கத் தொடர்)

இழப்பீட்டு முறைமையின் கீழ் ஓய்வு பெறுவதற்கு 267 ஊழியர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கமைய, அரச தொழில்முயற்சிகளில் மேலதிக ஊழியர்களை சுய ஓய்வூதிய முறைமையின் கீழ், ஓய்வு பெறச் செய்தல் தொடர்பாக அமைச்சின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழு பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

அந்த வகையில் வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியையும் கூட்டிணைப்பதற்கு கட்டாய ஓய்வு இழப்பீட்டு முறைமையை அமுல்படுத்துவதற்கும், முன்மொழியப்பட்டுள்ள கட்டாய ஓய்வூதிய உத்தேச முறைமையை அமுல்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அந்த வகையில் இரண்டு உரக் கம்பனிகளின் நிதியிலிருந்து 844 மில்லியன் ரூபாவை செலவிடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## காஸா சிறுவர் நிதியம்: இதுவரை...

Nations Relief and Works Agency ஊ டாக 04012024 அன்று பாலஸ்தீன அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அரசாங்கத்தின் நன்கொடைக்கு மேலதிகமாக, வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் அமைப்புக்களும் இந்நிதியத்துக்கு உதவியிருந்தன.இந்நிலையில்,இந்நிதியை வழங்குவதற்கான கால அவகாசம் இம்மாதம் (31) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## மறு அறிவித்தல் வரை...

மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, மறு அறிவித்தல் வரை, நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் மீன்பிடித்தல் மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு, மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினருக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## கொவிட் 19 ஐ, விட பேரழிவு தரும்...

என்று ஏற்கனவே கூறியுள்ளார். உலகத் தலைவர்கள் இந்த ஆண்டின் ஒரு பகுதியை, அடுத்த தொற்றுநோய்க்கான தயாரிப்பு பற்றி விவாதித்துள்ளனர்.

கொவிட்19 தொற்றுநோயை விட இது 20 மடங்கு அதிகமான உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய வைரஸ்கள் என, இதன்போது இவர்கள், கலந்துரையாடினர். 2024 ஆம் ஆண்டின் உலகப் பொருளாதார மன்றத்தில் "டிஸீஸ் எக்ஸ்" தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக விலங்குகளின் வாழ்விடங்களில் மனித செயற்பாடு அதிகரிப்பதாலேயே, இவ்வறான தொற்று நோய்கள் ஏற்படுவதாக வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## G.C.E உயர்தர பெறுபேறுகள்...

மாதம் நடைபெற்றிருந்தது. பரீட்சையில் 3,46,976 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். அவர்களில் 2,81,445 பாடசாலை பரீட்சார்த்திகளும், 65,531 தனியார் பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

## மலையக கலை கலாசார இரத்தின தீப சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் பார்வையில்...

# ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலியின் இரு நூல்களின் வெளியீட்டு விழா

அக்குறணை ஐடெக் கல்வி நிலையம், மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இணைந்து நடத்திய எமது பிராந்திய செய்தியாளர் ஊடகவியலாளர் கவிஞர் இக்பால் அலி எழுதிய காலத்தின் கால்கள் (திறன்நோக்கு கட்டுரைத் தொகுதி) குரங்குத் தம்பி (சிறுவர் பாடல்கள் ) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அக்குறணை ஐடெக் கல்வி நிலைய மண்டபத்தில் இயக்குநர் ஐ. ஐனுடீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினர்களாக கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். ஏ. ஹலீம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.









இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அக்குறணை பிரதேச செயலாளர் ருவன்திகா குமாரி ஹென்நாயக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன் வரவேற்புரையினையும், மத்திய மாகாணம் முன்னாள் முதலமைச்சர், வட மத்திய மாகாண முன்னாள் ஆளுநர் சரத் ஏக்கநாயக்க, அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, மனித அபிவிருத்தி தாபனம், இயக்குனர், சர்வதேச விவசாய நிறுவனத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் , சமய, சமூகப் பேச்சாளர் நெலும் ஆடைக் காட்சியகத்தின் உரிமையாளர் தேசமானிய முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கியதுடன் நூல் பற்றிய அறிமுகத்தை பேராசிரியர் எம். எஸ்.எம். அனஸ், நயவுரையினை கவிஞர் ரா. நித்தியானந்தன், ஆசிரியை சர்மிளாதேவி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நூலின் முதல் சிறப்புப் பிரதிகளைப் தொழிலதிபர் அல்ஹாஜ் டி. எம். எஸ். நிஸாஹிர், மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன், சந்திரவதனா ரட்ணராஜ குருக்கள் பெற்றுக் கொண்டனர்.











தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலீல், பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் றாசிக், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் சாமிலா தாவூத், திருகோணமலை யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் உள்ள எழுத்தாளர்கள் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



**பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இங்கு உரையாற்றும் போது;**

எழுத்தாளர் இக்பால் அலி, சாய்ந்தமருதூரில் பிறந்து பறகஹதெனியாவில் வாழ்ந்து கொண்டிருப்பவர். கண்டி நகருக்கு அடிக்கடி வந்து இலக்கியத்திற்கு அவர் செய்கின்ற பங்களிப்பு சாமானியமானதல்ல. பறஹகதெனியாவில் இருந்து தினமும் வந்து போவது என்றால் மிகவும் கஷ்டமான விசயம். அதே போன்றுதான் அவருடைய இரட்டைச் சகோதரர்களாக நாம் பார்க்கின்ற இராமன். இந்த இரண்டு பேரும் கண்டி மாநகரின் இலக்கியத்துறையை வாழ்வித்துக் கொண்டிருப்பவர்கள் என்று சொன்னால் மிகையாகாது. இக்பால் அலி ஓயாத ஊடகப் பணியில் இருந்து கொண்டு எப்படித்தான் படைப்பிலக்கியம் செய்கிறாரோ என்பது ஒரு கஷ்டமான விசயம். அது ஒரு சாதாரண விசயமல்ல. எனக்கு பாராளுமன்ற வாழ்க்கையில் இந்த வருடத்தோடு 30 வருடமாகின்றன.

இந்த 30 வருடத்திலும் இக்பால் அலியினுடைய ஊடகப் பணியானது நான் ஆரம்பத்திலே கண்டிக்கு வந்ததில் இருந்து அக்கால கட்டத்தில் டிஜிட்டல் ஊடகம் அவ்வளவு பிரசித்தமாக இருக்க வில்லை. அச்சு ஊடகம், வானொலி, தொலைக்காட்சி ஊடகம் ஆகியவற்றின் மூலம்தான் அனுப்ப வேண்டும். டிஜிட்டல் தொழில் நுட்பம் இல்லாத காலத்தில் இருந்து பெரிய பங்களிப்பை மிக அமைதியாகச் செய்து கொண்டிருப்பவர். அவருடைய இலக்கியப் பணியில் அவருடைய புத்தகங்களை திறனாய்வு செய்வதற்கு அழைக்கப்பட்டவன் அல்ல. இருந்தாலும் ஒரு விசயத்தை நான் சொல்ல வேண்டும்.

அண்மையில் இந்தியாவில் எல்லோருக்கும் தெரிந்த இறையருள் கவிமணி கா. அப்துல் கபூர் அவர்களின் நூற்றாண்டு விழாவுக்கு அழைத்திருந்தார்கள். இறையருள் கவிமணி கா. அப்துல் கபூருடைய கவிதைகள் மட்டுமல்ல. அல்குர்ஆனைக் கூட அவர் தமிழ் கவிதையாக மாற்றி இலகு தமிழில் நாவில் தவழுகிற விசயமாக குர்ஆனை மாற்றிய ஒரு பெருந்தகை அவர். அவருடைய கவிமாண்புகள் பற்றிப் பேசுவது அல்ல விசயம். அவர் குழந்தை இலக்கியம் ஊடாக அதை விடவும் மகத்தானது. குழந்தை இலக்கியம் படைப்பது இலேசான விசயமல்ல. வளர்ந்தவர்களுக்கு தாங்களே குழந்தைகளாக மாறி கவிபடைப்பது என்பது ஒரு வித்தியாசமான கலை.

அவருடைய மற்றைய நூலில் பேராசியர் எம். ஏ. நுஹ்மான் அவர்கள் நூலைப் பற்றி திறனாய்வு செய்துள்ளார். பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான், ஒரு நல்ல தமிழ் கவிஞர். இக்பால் அலி, சாய்ந்தமருது பேராசிரியர் எம். ஏ. நுஹ்மான் பக்கத்து ஊர் கல்முனை. எம். ஏ. நுஹ்மான் அவர்களுடைய கவிதையினை நான் இந்தியாவில் கொண்டு சென்று வாசித்தேன். அவ்வளவு பெருமையாக இருந்தது. எங்கள் நாட்டுப் பேராசிரியர் ஒரு கவிஞர். அவருடைய கவிதையை இந்திய அரங்கில் வாசித்தேன். அதனை ஏன் வாசித்தேன் என்றால் அவ்வளவு தூரம் சமகாலத்தில் முஸ்லிம்களுடைய மிகப் பெரிய அவலமாக இருக்கின்ற காஸா மண்ணில் நடக்கின்ற இந்தப் படுகொலைகள், படுபாதகச் செயல்களுக்கு பதில் இருக்கும் வகையில் அவர் எழுதிய ஒரு கவிதை. அதாவது ஒரு இஸ்ரேலிய அமைச்சர் பலஸ்தீனர்களை மனிதர்களை விலங்குகளாகக் கூறி அவர்கள் அத்தனை பேரையும் விட்டு வைக்கக் கூடாது என்று பேசுகிறான். அதற்கு பதிலளிக்கும் வகையில் கவிதையிலே பதிலிருக்கிறார் எம். நுஹ்மான். விலங்குகளைப் பழியாக்காதீர்கள் என்ற தலைப்பிலே அவர் எழுதியிருந்தார்.

அக்குறணையில் உள்ள கஸாவத்தை ஆலிம் அவர்களுடைய ஆளுமை சாதாரண விசயமல்ல. கசாவத்தை ஆலீம் அப்பா பற்றி இன்னும் பேசிக் கொண்டுதான் இருக்கின்றோம். அவருடைய படைப்புக்களை வெளிக் கொண்டு வந்தமாதரி இல்லை. மிகப் பெரிய பணி இருக்கிறது. அவற்றை எல்லாம் மீள் பதிப்பு செய்ய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.. எச். ஏ. ஹலீம் உரையாற்றும் போது;**

மத்திய மலை நாட்டில் இலக்கிய விடயங்களை நினைவூட்டும் போது மத்திய மலை நாட்டின் இலக்கியங்கள் எழுத்துத் துறை பற்றிப் பேசும் போது அறிஞர் எம். சி. சித்திலெப்பை, கசாவத்தை ஆலிம் அப்பா புலவர், அருள்வாக்கி அப்துல் காதர் போன்றோரை ஞாபகமூட்டாமல் பேச முடியாது என்று நினைக்கின்றேன். இவர்கள் 1800 களில் ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றிய மலையக முஸ்லிம் எழுத்தாளர்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

சித்திலெப்பை எழுத்துப் பணி முஸ்லிம்களுடைய தேசிய மறுமலர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வித்திட்டவை. சித்திலெப்பை ஆய்வு மன்றம் அவருடைய எழுத்துக்களை மென்மேலும் தேடுதல் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். சித்திலெப்பையின் எழுத்துத் துறை மேலும் ஆய்வு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது அவாவாகும். அறிஞர் சித்திலெப்பை அவர்களுக்கு மார்க்க வழிகாட்டியாக இருந்தவர் அக்குறணையைச் சேர்ந்த கஸாவத்தை ஆலிம் அப்பா அவர்கள். 19 ம் நூற்றாண்டில் ஈழத்து இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றிய மாமேதையாக திகழ்ந்தார். இவருடைய எழுத்துப் பணிகளை உயிர்ப்பிக்க வேண்டிய பணி நம்முன் இருந்து கொண்டிருப்பது என்பதையும் இத்தருணத்தில் ஞாபகமூட்டுகின்றேன்.

**இந்நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய கலாநிதி பி. பி. சிவப்பிரகாசம் உரையாற்றும் போது;**

நமக்குத் தொழில் கவிதை. நாட்டுக் உழைத்தல் என்று பாரதி பாடினான். பாரதி கவிதையோடு நின்று விடவில்லை கவிதைகளை எழுதுவதும் புத்தகங்களை எழுதுவதும் மாத்திரம் அல்ல. நாட்டுக்கு உழைத்தல். நாம் வாழுகின்ற எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டுக்காக எங்களுடைய பங்களிப்பை எங்களுடைய வகிபாகத்தை செலுத்தல் என்று பொருள்படுகின்றது. ஆகவே இந்த இரண்டும் ஒன்று சேர்ந்து செல்ல வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் தான் கவிஞர்கள் உண்மையான கவிஞர்களாக இருக்க முடியும். எழுத்தாளர்களாக இருக்க முடியும். கட்டுரை ஆசிரியர்களாக இருக்க முடியும். அந்த அடிப்படையில் நண்பர் இக்பால் அலியின் இந்தப் புத்தக வெளியீடு இந்த அக்குறணை மாநகரில் நடைபெறுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த இக்பால் அலி என்பவர் எங்களுக்கு ஓர் எழுத்தாளராக ஒர் ஊடகவியலாளராக மற்றும் அல்ல அவர் அதற்கப்பால் நான் பேராதனை பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்த போது ஏற்கெனவே இராமன் சொன்னது போல் தங்கக் கட்டிகளை தன்னுடைய பையில் சுமந்து வந்தார். ஆனால் இவர் இப்பொழுது பித்தளைக் கட்டியாக வைத்து இருக்கின்றார். நான் அவரைச் சந்திக்கும் போது அந்தச் சந்தர்ப்பத்தில் பித்தளைக் கட்டிகள் இருக்க வில்லை. புத்தகங்கள் தான் கையிலே இருந்தன.

**அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட்எம். ரிஸ்மி உரையாற்றுகையில்;**

இக்பால் அலி எம்மில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறார். இவருடைய படைப்புகளின் நீலம் அகலம் மிகவும் பிரமாண்டம் ஆனது. இவரோடு நான் பத்து வருடங்களில் நாடளாவிய ரீதியில் 50,000 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்துள்ளேன். எனவே ஒருவரோடு பயணம் செய்தால் அவருடைய உண்மையான குணாதிசயங்கள் விளங்கிக் கொள்ளலாம். அந்த வகையில் அவர் பற்றிய விடயங்களை கூறாமல் இருக்க முடியாது.

ஊடகவியலாளர் என்ற வகையில் இலக்கியம் ஆன்மீகம், தேசப் பிரச்சினைகள், நுட்பமான தகவல்கள், குடும்ப ஆக்கத்திற்கான கருத்துக்கள். தனிமனிதனை முன்னேற்றுதல் போன்ற பல செய்திகள். ஒவ்வொரு நாளும் செய்தித்தாள்களிலும் டிஜிட்டல் ஊடகங்களிலும் இலத்திரனியல் ஊடங்களிலும் அவர் செய்து வராத நாட்கள் இல்லை. இப்பொழுது கூட கமராவைத் தூக்கிக் கொண்டு நிற்கிறார். பத்திரிகை வாசிப்பவர்களுக்குத் தான் தெரியும். அக்குறணையில் பத்திரிகைக் கடை மூடப்பட்டதற்கான காரணம்.

அக்குறணையில் பத்திரிகை வாசிப்பவர்கள் இல்லை என்பதினாலாகும். நீங்கள் பத்திரிகை வாசிப்பவர்களை ஊக்குவித்து விட்டு மீண்டும் அந்தக் கடையைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

இக்பால் அலி, கல்முனை சாஹிரா கண்டி சித்திலெப்பை கல்லூரிகளின் பழைய மாணவர். அவர் அறிஞர் சித்திலெப்பையின் கனவை நனவாக்கிக் கொண்டிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அறிஞர் சித்திலெப்பபையின் வரலாற்றை முதன் முதலில் எழுதியர் அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஏ. இக்பால். அதனைத் தொடர்ந்து விரிவுரையாளர் அமீன், பேராசிரியர் எம். எஸ். எம். அனஸ் போன்றவர்கள் எழுதினார்கள். இக்பால் அலியை நாங்கள் ஆரம்பத்தில்' ஓர் ஊடகவியலாளராக மாத்திரம்தான் பார்த்தோம். ஆனால் அவரிடம் எங்களை பிரமிக்க வைக்கும் இவ்வளவு பெரிய விசயம் இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

நான் எல்லோரையும் எழுதுங்கள் என்று சொல்லுவேன். அவர் என்னையே எழுதுங்கள் என்று சொல்லுவார். இக்பால் அலி பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ்த் துறை விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சனனுடன் இணைந்து மருதூர்க் கொத்தனின் படைப்புக்களை ஒன்று திரட்டி செம்பதிப்பை வெளியிடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

மத்திய மாகாண முன்னாள்முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உரையாற்றும் போது; இக்பால் அலி இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நன்கு அறிவேன். இன்று வாசிப்பெல்லாம் டிஜிட்டல் யுகத்திற்கு மாறிச் சென்று கொண்டிருக்கின்ற கால கட்டத்தில் இக்பால் அலி இரு நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளமை பாராட்டத்தக்க விடயமாகும். எனவே இத்தகைய முயற்சிகளுக்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**கண்டி இரா அ.இராமன்**




மட்டக்களப்பில்

# கிராமிய வீதிகள் உட்கட்டமைப்பில் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடல்

**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக் களப்பு விசேட நிருபர்கள்**

மட்டக்களப்பில் முன்னெடுக் கப்பட்டு வரும் கிராமிய வீதிகள் உட்கட்டமைப்பின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையா டல், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடை பெற்றதுடன், எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் இதற்கான அனைத்து வேலைத்திட்டங்களையும் முடிவு றுத்தவும் இக்கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரனின் ஏற் பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கி ழமை இக்கலந்துரையாடல் நடை பெற்றது.

நாடளாவிய ரீதியில் மணல் வீதிகளை கிறவல் வீதிகளாக மாற்றும் செயற் றிட்டத்தின் கீழ் மட்டக் களப்பு மாவட்டத்தில் மக்கள் அதிகம் உபயோ கிக்கும் மணல் வீதிகளை கிறவல் வீதிகளாக மாற் றுவதற்கான ஆலோ சனையை இராஜாங்க அமைச்சர் வழங்கினார்.



பிரதேச ரீதியாக நியமிக்கப்பட் டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கிடையி லான வேலைத்திட்டங்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாக இதன்போது ஆராயப் பட்டு, ஆலோசனையையும் இரா ஜாங்க அமைச்சர் வழங்கினார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயத்தை நவீன மயமாக்கல், உலக வங்கியின் நிதி அனுசரணையுடனான உணவு பாது காப்பு, ஏற்றுமதி பயிர்ச்செய்கை திட்டம், இவற்றினூடாக அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பாக வும் இராஜாங்க அமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாவட்டச் செயலகத்தில் கலந்துரை யாடல் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளித ரனின் ஏற்பாட்டில் நடை பெற்ற இக்கலந்துரையா டலின் போது ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலாத்த ளமாக அடையாளப்படுத்து வது, மாவட்டத்துக்கேயான அருங்காட்சியகம் அமைத்து புராதன விடயங்களை காட் சிப்படுத்துவது, மாவட்ட கைப்பணிகளை விற்பனை செய் வதற்காக வர்த்தக மையம் அமைத் தல், பாரம்பரிய உணவுகளுக்கான விற்பனை கூடங்கள் அமைத்தல், உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கல், சமுர்த்தி நலன் ஓம்புகை திட்டங்கள் ஆகியவை தொடர்பா கவும் இதன்போது விரிவாக ஆரா யப்பட்டதுடன், பல்வேறு ஆலோச னைகளையும் இராஜாங்க அமைச்சர் வழங்கினார்.

# சாய்ந்தமருது இளைஞர் காங்கிரஸ் அணியின் அங்குரார்ப்பண நிகழ்வு

**பாலமுனை தினகரன், சம்மாந் துறை கிழக்கு தினகரன் நிருபர்கள்**



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸினுடைய சாய்ந்தமருது இளைஞர் காங்கிரஸ் அணியின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற் றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமை யில் மருதமுனையில் நடை பெற்ற இந்நிகழ்வுக்கு முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவ ரும் பாராளுமன்ற உறுப்பின ருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரை யாற்றினார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தௌபீக், கட்சியின் செய லாளர் நாயகம் நிசாம் காரியப் பர், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெவ்வை ஆகியோரும் இந்நிகழ் வில் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது, மாளிகைக்காடு பிரதேசங்களி லிருந்து சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டதுடன், மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமினால் 'இளைஞர் நாமம்' என்ற பெயரும் மேற்படி அணிக்கு சூட்டப்பட்டது.

நாளை திருகோணமலையில்

# சந்நிதி – கதிர்காமம் பாத யாத்திரை குழுவினர்



**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ். சந்நிதி கதிர்காமம் ஜெயா வேல்சாமி தலைமையிலான பாத யாத்திரை குழு வினர் நாளை வியாழக்கிழமை (30) திருகோணமலை நகரை சென்றடைய வுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி கோயிலிலிருந்து பாத யாத்திரையை இந்தக் குழுவினர் ஆரம்பித்தனர். இந்நிலையில் கும் புறுப்பிட்டியை இந்தக் குழுவினர் சென்றடைந்துள்ளனர்.

இப்பாத யாத்திரை குழுவினர் இன்று புதன்கிழமை கோபாலபு ரத்தில் தரித்து, நிலாவெளியில் தங்குவர்.

இதனைத் தொடர்ந்து நாளைய தினம் திருகோணமலை நகரை சென்றடையவுள்ளனர்.

கதிர்காமம் பாத யாத்திரை பேரவைத் தலைவர் ஜெயா வேல்சாமி தலைமையில் இந்தக் குழுவினர் பாத யாத்திரை செல் வதுடன், இப்பாத யாத்திரையில் 124 அடியார்கள் பங்குபற்றியுள் ளனர்.

கடந்த இரு தினங்களாக

# கிண்ணியா வட்டமடுவில் காட்டு யானைகள் அட்டகாசம்

**கிண்ணியா மத்திய நிருபர்**



கிண்ணியாவின் ஆயிலிடி கிராம அலுவ லர் பிரிவிலுள்ள வட் டமடு மீள்குடியேற்ற பிரதேசத்தில் கடந்த இரு தினங்களாக காட்டு யானைகள் புகுந்து அட் டகாசம் புரிந்துள்ளன.

நேற்று முன்தினம் திங் கட்கிழமை மற்றும் நேற்று செவ் வாய்க்கிழமை அதிகாலை வேளைக ளில் இந்த பிரதேசத்துக்குள் காட்டு யானைகள் புகுந்து வீடுகளையும் பயன் தரும் மரங்களையும் சேதப்ப டுத்தியுள்ளதாக, அப்பிரதேசவாசி கள் தெரிவித்தனர்.

இதன்போது அரிசி ஆலையொன் றும் வீடொன்றும் தென்னம் மரங்க ளும் காட்டு யானைகளால் சேதப்ப டுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் 14 தென்னம் மரங் கள் யானைகளால் சேதமாகியுள் ளன. மேலும் மேற்படி கிராமத்தில் வேளாண்மைச் செய்கையில் ஒரு பகுதியும் யானைகளால் சேதமாகி யுள்ளது.

சுமார் 117 குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தொல்லை காணப்படுவதாகவும் ஆகையால் காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும், வட் டமடு மீள்குடியேற்ற கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மட்டு. வெல்லாவெளியில் கொடூரம்

# இணக்க சபைக்கு சென்ற நபர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

## சந்தேக நபர் ஒருவர் கைது

**மண்டூர் தினகரன், பெரியபோரதீவு தின கரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு, வெல்லாவெளி பிர தேசத்தில் காணி பிணக்கு தொடர்பாக இணக்க சபைக்குச் சென்ற குடும்பஸ் தர் ஒருவர் காயங்களுடன் கிணற்றிலி ருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார். மண்டூர், கோட்டமுனை பிரதே சத்தை சேர்ந்த மீன் வியாபாரியான 69 வயதுடைய தம்பிராசா பதிராசா என்ப வரது சடலமே இவ்வாறு கடந்த திங் கட்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ள தாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காணி பிணக்கொன்று தொடர்பாக வெல் லாவெளியிலுள்ள இணக்க சபைக் குச் சென்று வருவதாக கூறிவிட்டு புறப்பட்டுச் சென்ற ஒரு பிள்ளை யின் தந்தையான இந்தக் குடும்பஸ் தர், திங்கட்கிழமை மாலையாகியும் வீடு திரும்பாததால் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தி னர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் தேடுதல் நடத்தியதில், வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வயல்வெளியிலுள்ள கிணற்றிலிருந்து இந்தக் குடும்பஸ் தர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு சென்று சடலத்தை பார்வையிட்ட களுவாஞ்சிக்குடி நீதிமன்ற நீதவான் ஜே.வி.ஏ.ரஞ்சித் குமார், சடலத்தை பிரேத பரிசோத னைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கு மாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். இவர் பயணித்த சைக்கிளையும் அப்பகுதியிலிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர். சடலத்தில் காயங்கள் காணப்படுவதாகவும், இது கொலையாக இருக்கலாமென்ற சந்தே கத்தின் அடிப்படையில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

# அம்பாறையில் அனர்த்த அபாயமுள்ள பிரதேசங்களுக்கு நீர், மின் இணைப்பு வழங்கல் இடைநிறுத்தம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த அபாயமுள்ள பிரதேசங்க ளுக்கு புதிதாக நீர் மற்றும் மின்சார இணைப்புகள் வழங்குவது இடை நிறுத்தப்பட்டுள்ளதாக, அம்மா வட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த அபாய எச்சரிக்கையான இடங்களில் முறையற்ற குடியேற் றங்கள் அதிகமாக இடம்பெற்று வருவதுடன், இவ்வாறு குடியே றியவர்கள் கிராம அலுவலரின் பரிந்துரைக்கமைய குடிநீர் மற்றும் மின்சார இணைப்புகளை பெற்று நிரந்தரமாக கட்டுமானங்களை அமைப்பதால் அனர்த்தங்கள் ஏற்படுவது படிப்படியாக அதிக ரிக்கின்றது. இது எதிர்காலத்தில் முழு மாவட்டத்தையும் பாதிக்கும் அபாயம் ஏற்படக்கூடிய நிலை ஏற் படுமெனவும், அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா கரையோரங்கள், கடற்கரையோரங்கள், சதுப்பு நிலங்கள், நீர்நிலைகள், குளங்கள் ஆகியவற்றை அண்டி இக்குடியேற் றங்கள் அதிகரித்துள்ளது. இதன் விளைவாக இம்முறை ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

அதன் அடிப்படையில் எதிர் காலத்தில் இந்நிலைமைகளை தடுப்பதற்காக பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள் ளதாகவும், அவர் தெரிவித்தார். முறையற்ற கட்டுமானங்களுக்கு நீர் மற்றும் மின் இணைப்புகள் பெற் றுக்கொடுக்கும் போது பிரதேச செயலாளர், சுற்றாடல் அதிகார சபை, நீர்வழங்கல் வடிகால மைப்பு சபை, பெருந்தெருக்கள், விவசாய திணைக்களம், கடலோ ரம் பேணல் திணைக்களம் ஆகிய பொறுப்புக்கூறும் நிறுவனங்களின் அதிகாரிகளின் பரிந்துரைக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுமென வும், அவர் தெரிவித்தார்.

அம்பாறையில் அனர்த்த அபாய குறைப்பு முகாமைத்துவம் தொடர் பான செயற்பாடுகள் சிறந்த முறையில் வினைத்திறனுடன் முன் னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

# துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

**மணல்சேனை நிருபர்**

வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக் களப்பு, துறைநீலாவணை முத்து மாரியம்மன் கோயில் புனராவர்த்தன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷே கம் எதிர்வரும் ஜூன் மாதம் 05ஆம் திகதி (புதன்கிழமை) நடைபெற வுள்ளது. கும்பாபிஷேக நிகழ்வின் கர்மாரம்பம் எதிர்வரும் 03ஆம் திக தியும் பால்காப்பு நிகழ்வு 04ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இதன் பின்னர் பத்து தினங்கள் மண்டலாபி ஷேக பூஜை நடைபெறவுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து 15ஆம் திகதி அம்பாளுடைய திருக்கதவு திறத்தலு டன் உற்சவம் ஆரம்பாகி நடைபெ றவுள்ளது.

17ஆம் திகதி அம்பாள் ஊர்வல மாக செல்வதுடன், 18ஆம் திகதி துரைவந்தியமேட்டுக்கு அம்பாள் ஊர்வலமாக செல்லவுள்ளார். 19ஆம் திகதி கன்னிக்கால் வெட்டும் நிகழ் வும் 20ஆம் திகதி மாலை சமுத்திர நீராடலும் 21ஆம் திகதி அதிகாலை தீ மிதிப்பு நடைபெறவுள்ளது. இந் நிலையில் 21ஆம் திகதி மாலை பொங்கல் உற்சவம் நடைபெறவுள் ளதாக, மேற்படி கோயில் நிர்வாகத் தினர் தெரிவித்தனர்.

# கணக்காளருக்கு விளக்கமறியல் நீடிப்பு

**கல்முனை விசேட நிருபர்**

போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கணக்காள ருக்கு விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது. அம்பாறை சுகாதார சேவைகள் பணிமனையின் கணக் காளருக்கே விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது. இவரை எதிர்வரும் ஜூன் மாதம் 10ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக் குமாறு கல்முனை நீதவான் நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன் றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, நீதவான் எஸ்.எம்.சம்சுதீன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இவர் கடந்த மாதம் 22ஆம் திகதி பெரியநீலாவணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

# மரமுந்திரிகை கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கல்

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலையின் மூதூர் பிரதேசத்தில் மர முந்திரிகை செய்கையை ஊக்குவிக்கும் வகையில் 20 பயனா ளிகளுக்கு இலவசமாக மரமுந்திரிகைக் கன்று கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மூதூர் அறபா நகர் கிராமத்தை சேர்ந்த பய னாளிகளுக்கே மரமுந்தி ரிகைக் கன்றுகள் வழங் கப்பட்டுள்ளன.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. மூதூர் கிளையின் வேண்டு கோளுக்கமைய திரு கோணமலை மாவட்ட சிட்டிகாடின் அமைப் பின் மாவட்ட இணைப் பாளர் எம்.சித்தீக்கிடம் விடுத்த வேண்டுகோ ளுக்கமைய பயனாளிக ளுக்கு மரமுந்திரிகைக் கன்றுகள் வழங்கப்பட் டுள்ளன.

இந்நிகழ்வில் மாவட்ட இணைப் பாளர் எம்.சித்தீக், வை.எம்.எம்.ஏ. மூதூர் கிளைத் தலைவர் கே.எம்.ஜிகாத், ஜம்மிய துல் உலமா கிளையின் மூதூர் செயலாளர் எம். சல்மான், சமூக அமைப் புகளின் பிரதிநிதிகள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்முனையில் உலக சைக்கிள் தின நிகழ்வு

**மருதமுனை தினகரன் விசேட நிருபர்**




கல்முனை பிரதேச செயல கம் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து 'ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகம்' உலக சைக்கிள் தினத்தை எதிர்வரும் 02ஆம் திகதி கொண் டாடவுள்ளது.

இந்நிகழ்வில் தம்மிடமுள்ள சைக்கிள்களு டன் வருகை தந்து சிறப்பிக்குமாறும் இதற்கு ஒத் துழைப்பு வழங்குமாறும் அனைத்து கழகங்கள், சமூக சிவில் சேவை அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், பாடசாலை சமூகங்கள், பொது மக்கள் அனைவருக்கும் ரைடர்ஸ் ஹப் சைக்கி ளிங் கழகத் தலைவர் கலீல் கபூர் மற்றும் அதன் நிர்வாகிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிலையில் தம்மிடமுள்ள சைக்கிள்களு டன் அன்றையதினம் காலை 6.30 மணிக்கு மருதமுனை பரக் கத்டெக்ஸ் முன்றலில் ஒன்றுகூ டுமாறும் கல்முனை நகர்வரை சென்றுவர ஒத்துழைப்பு வழங் குமாறும், ரைடர்ஸ் ஹப் சைக் கிளிங் கழகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சைக்கிள் செலுத்தி செல்வதை கொண்டாடுவோம், சைக்கிள் பயன்பாட்டை ஊக்குவிப் பதால் ஆரோக்கிய சமூகத்தை உருவாக்கு வதுடன், மாசற்ற சுற்றுச்சூழலை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்லும் முன்னோடி களாவோம், கார்பன் அற்ற பசுமையான பூமி கிரகத்தின் உருவாக்கத்தில் ஆரோக்கியமான பங்காளிகளாவோம் எனும் கருப்பொருளில் உலக சைக்கிள் தினம் கொண்டாடப்படவுள் ளதாக, ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகத்தினர் தெரிவித்தனர்.

# மாதர் பயிற்சி நிலையத்தில் 50 பெண்களுக்கு தையல் பயிற்சி

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனை வடக்கு நற்பிட்டி முனை சேனைக்குடியிருப்பு எல்லை யில் அமைந்துள்ள மாதர் பயிற்சி நிலையத்தில் ஐம்பது பெண்கள் தையல் பயிற்சி பெற்று வருகின்ற னர்.

இத்தையல் பயிற்சி நிலையம் மிகச் சிறப்பாக இயங்குவதுடன், இங்கு தைக்கப்படும் ஆடைகள் விற்பனை செய்யப்பட்டும் வருகின் றன.தையல் பயிற்சி ஆசிரியை வர தராஜா சோதியாவின் மேற்பார்வை யில் இப்பெண்கள் தையல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் சித்தி அடைந்தோர் இங்கு பயிற்சி பெற்று வருகின்றனர்.

# போதைப் பாவனையை ஒழித்தல்; விழிப்புணர்வு செயலமர்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்துக்கமைய காத் தான்குடி பிரதேச செயலகத்தில் விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடை பெற்றது காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவி ருத்தி பிரிவு மற்றும் காத்தான்குடி பிரதேச செயலகமும் இணைந்து இந்த விழிப்புணர்வு செயல மர்வை நடத்தியது. இதன்போது போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் தொடர் பாக விளக்கமளிக்கப்பட்டதுடன், அதனை தவிர்க்க வேண்டியதன் அவ சியமும் வலியுறுத்தப்பட்டது.

BWIO USA சர்வதேச விருது விழா 2023

# ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் கல்வி நிறுவனமாக அமேசன் கல்வி நிறுவனம் தெரிவு



2023 ஆண்டுக்கான சிறந்த வளர்ந்து வரும் கல்வி நிறுவனமாக அமேசன் கல்வி நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.BWIO USA ஏற்பாடு செய்த சர்வதேச விருது விழாவில் இந்த விருது அமேசன் உயர் கல்வி நிறுவனத்திற்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக துறையில் சிறந்த செயற்பாடுகளை முன்னெடுத்து நுகர்வோருக்கு சிறந்த சேவையாற்றிய நிறுவனங்களை கௌரவிக்கும் முகமாக Business World International Organization, USA (BWIO) நிறுவனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டு விருதுகள் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்துக்கான விருதினை அமேசன் உயர் கல்வி (AMAZON COLLEGE & AMAZON CAMPUS) நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் பெற்றுக்கொண்டார்.

விருதினை பெற்றுக் கொண்ட அவர் அது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், அயராத முயற்சியும், வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக எமது நிறுவனம் வழங்கி வந்த தரமான சேவையே எம்மை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது. இந்த விருதும் கௌரவமும் எமக்கு மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் தந்துள்ளது. எமது இந்த வெற்றிக்கும் நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் பக்கபலமாக இருந்த நிறுவனத்தின் சகல ஊழியர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# புரட்சிகரமான Sigiriya AI தளத்தை வெளியிட தயாராகும் LankaGPT



செயற்கை நுண்ணறிவு (AI) ஆனது உலகளாவிய ரீதியில் வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றதும் வணிகங்களை உருமாற்றத்திற்கு உள்ளாக்கி வருகின்றதுமான இந்த சகாப்தத்தில், எதிர்வரவுள்ள Sigiriya AI இன் அறிமுகத்தை LankaGPT பெருமையுடன் அறிவித்துள்ளது. இலங்கை, அமெரிக்கா, துபாய் ஆகிய நாடுகளில் உள்ள 30 பேர் கொண்ட குழுவினால் உருவாக்கப்பட்ட இந்த அற்புதமான AI தளமானது, 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடுவதற்கு தயாராக உள்ளது.

Sigiriya AI இன் ஆரம்பப் பதிப்பானது, சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்கு ஆதரவான வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு எழுத்து அடிப்படையிலான தளமாக அமையும் என்பதோடு, பல்வேறு பேச்சு வழக்குகள், பிராந்திய சொற்றொடர்கள், நுணுக்கமான உச்சரிப்புகளை உள்ளடக்கியதாக இது அமையும். 10 பில்லியன் சிங்கள தரவுத் தொகுப்புகள் மற்றும் 10 பில்லியன் தமிழ் தரவுத் தொகுப்புகள் உள்ளிட்ட தனியுரிம தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சந்தையில் நுழைந்து, மத்திய கிழக்கு, கனடா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட இலங்கையர் கணிசமான அளவில் வாழும் பிராந்தியங்களுக்கு விரிவுபடுத்துவதை இந்த தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகள் உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள பரந்த தமிழ் பேசும் சமூகங்களுக்கும் இந்த தளம் ஆதரவளிக்கிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, LankaGPT Technologies (Pvt) Ltd நிறுவனத்தின் இணை நிறுவுனரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான லசித குணசிங்க, "LankaGPT ஆகிய நாம், பொருளாதார மற்றும் சமூகத் துறையை மேம்படுத்துவதில் AI ஆற்றக்கூடிய பங்கை அவதானித்து நன்கு புரிந்துகொண்டோம். கல்வி, விவசாயம், சுகாதாரத் துறைகளுக்கு இந்த தளத்தை இலவசமாக வழங்குவதற்கு நாம் மிக உறுதியுடன் இருக்கிறோம்." என்றார்.

தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# 'நெறிமுறையான வணிக சான்றிதழ்' வென்றது Alumex PLC நிறுவனம்



"ALUMEX PROUDLY BECOMES THE INAUGURAL RECIPIENT OF THIS PRESTIGIOUS AWARD WITHIN SRI LANKA'S ALUMINIUM EXTRUSION INDUSTRY"

Hayleys இன் துணை நிறுவனமும், இலங்கையில் அலுமினிய உற்பத்தியாளருமான Alumex PLC நிறுவனத்திற்கு உயர்ந்த 'Certificate of Ethical Trading'(நெறிமுறை வர்த்தகச் சான்றிதழை), இலங்கையின் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் (NCE) அண்மையில் வழங்கியிருந்தது. வணிகம், தொழிலாளர், நெறிமுறை நடத்தை, சூழல், சமூகம் தொடர்பான சிறந்த நடைமுறைகள் மூலம் மாற்றமடைந்துவரும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் மற்றும் நுகர்வோர் தெரிவுகளுக்கு இணங்குவதற்கான நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை, இந்த பெறுமதி வாய்ந்த சான்றிதழ் அங்கீகரிக்கிறது.

தொழிலாளர்களை நியாயமான முறையில் நடத்துதல், பாதுகாப்பான பணிச் சூழல், சுற்றுச்சூழலை மதித்தல், உள்ளூர் சமூகங்களுடனான ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் NCE ஆனது விருது பெறத் தகுதியானோரை தெரிவு செய்கிறது. இச்சான்றிதழின் மூலம், ஏற்றுமதித் துறையில் நெறிமுறையான நடைமுறைகளை மேம்படுத்துவதை NCE நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், நிலைபேறான மற்றும் பொறுப்பான வணிக நடைமுறைகளை பின்பற்ற நிறுவனங்களை ஊக்குவிக்கிறது. இந்த சான்றிதழானது நிறுவனங்களுக்கு நன்மைகளை வழங்குவது மட்டுமன்றி, உலகளாவிய சந்தையில் ஒரு பொறுப்பான வர்த்தகப் பங்காளி எனும் இலங்கையின் நற்பெயரையும் மேம்படுத்துகிறது.

Alumex PLC முகாமைத்துவப் பணிப்பாளர் பிரமுக் தெடிவால இது பற்றி தெரிவிக்கையில், "ஏற்றுமதிச் சந்தைகள் தொடர்பான நெறிமுறையான விநியோகஸ்தர் எனும் வகையில், அலுமினிய உற்பத்தித் தொழில் துறையை அதிநவீன தரங்களுக்கு இணங்க பேணுவதற்கான எமது அர்ப்பணிப்பானது, இத்தொழில்துறையின் தரத்தை உயர்த்தும் அதே வேளையில், பல்வேறு துறைகளில் முன்னோடியாக இருக்க எமக்கு உதவியுள்ளது என்றார்.

# NFC தொழில்நுட்பத்துடனான பணப்பரிமாற்ற விற்பனை இயந்திரங்களை அறிமுகப்படுத்தும் கொமர்ஷல் வங்கி



நாட்டின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான கொமர்ஷல் வங்கி மற்றும் முன்னணி நிதி தொழில்நுட்ப தீர்வுகள் நிறுவனமான சிலோன் பிசினஸ் அப்ளையன்சஸ் (CBA) ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பைத் தொடர்ந்து, இலங்கை தனது முதல் கிரெடிட் மற்றும் டெபிட் அட்டை செயற்படுத்தப்பட்ட விற்பனை இயந்திரங்களை பயன்படுத்த முடியும்.

நுகர்வோருக்கான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை ஏற்றுக்கொள்ளல் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒத்துழைப்பின் விளைவாக, இலங்கை முழுவதும் ' Grab.it ' வர்த்தக நாமமிடப்பட்ட முழுமையான தானியங்கி, NFC தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் விற்பனை இயந்திர சேவை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

சில்லறை வர்த்தகத்தில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட தீர்வை வழங்குவதற்கு இலங்கையின் வங்கியொன்று நிதியியல் தொழில்நுட்ப (fintech) நிறுவனமொன்றுடன் ஒத்துழைப்பில் ஈடுபடுவது இதுவே முதல் தடவை என வங்கி தெரிவித்துள்ளது.

CBA ஆல் வழங்கப்பட்ட அதிநவீன IM30 PointofSale (POS) இயந்திரங்கள் இந்த விற்பனை இயந்திரங்களில் தடையின்றி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால் கொமர்ஷல் வங்கி இணையத்தள கொடுப்பனவு நுழைவாயில் (IPG) மூலம் செயலாக்கப்படும் கட்டணங்களுடன் Visa> MasterCard, UnionPay, LankaPay மற்றும் JCB அட்டைகளை ஏற்க அனுமதிக்கப்படுகிறது. தொழில்நுட்ப முன்னேற்றத்தில் இந்த புதிய மைல்கல் குறித்து கருத்து தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர், 'இந்த முயற்சியானது இலங்கையிலும் அதற்கு அப்பாலும் உள்ள வங்கித் துறையில்' அதிநவீன கட்டணத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கும் சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்குமான எங்களின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என்றார்.

ICC ஆண்களுக்கான T20 உலகக் கிண்ண 2024 இற்கான

# 'உத்தியோகபூர்வ ஆடைப் பங்காளராக' சிக்னேச்சர் இலங்கை கிரிக்கட் உடன் இணைந்துள்ளது




இலங்கையின் மிக போற்றப்படுகின்ற ஆடவர்களுக்கான ஆடை வர்த்தக நாமமாக விளங்கும் சிக்னேச்சர், ஐசிசி ஆண்களுக்கான இருபதுக்கு 20 உலகக்கிண்ண 2024 இற்கான "உத்தியோகபூர்வ முறையான ஆடைப் பங்காளராக" மீளவும் இலங்கை கிரிக்கெட்டுடன் இணைந்துள்ளது. கடந்த காலங்களில் இவ்விரண்டு நிறுவனங்களும் கூட்டாக இணைந்து செயற்பட்டபோது நிலவிய நம்பிக்கையே இதனை எடுத்துக்காட்டுகின்றது. இந்நிறுவனமானது இதற்கு முன்னர் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்திற்கும் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்திற்கும் ஆடை அனுசரணையாளராக பணியாற்றியதுடன் அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இலங்கை அணி உலகக்கிண்ணத்தை வென்றெடுத்தது.

விளையாட்டுத்துறையில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தவே இந்த வர்த்தக நாமம் பாடுபகின்றது. சிக்னேச்சர் வர்த்தக நாமத்தின் அர்ப்பணிப்பு ஃபேஷன் துறைக்கு அப்பாற்பட்டது. இலங்கை கிரிக்கெட்டுக்கான தனது ஆதரவை மீளவும் வழங்க உறுதிப்படுத்தியதன் ஊடாக சிக்னேச்சர் விளையாட்டு வீரர்கள் மற்றும் இரசிகர்களை சாதனையின் இலக்குகளை அடைய ஊக்கப்படுத்துவதை தமது நோக்கமாக கொண்டு செயற்படுவதை இதனூடாக காண முடியும்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சிக்னேச்சர் நிறுவனத்தின் பணிப்பாளர் அம்ஜத் ஹமீட் " இலங்கை கிரிக்கட் உடன் மீள இணைந்து கொண்டமை மகிழ்ச்சியானது. ஐசிசி ஆண்கள் இருபதுக்கு 20 உலகக் கிண்ணம் 2024 இல் மீண்டும் இலங்கை கிரிக்கெட்டுடன் பங்குதாரராக இருப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். நாம் அவர்களுக்கு வழங்கும் இந்த ஒத்துழைப்பானது எமது நீண்டகால உறவு மற்றும் அவர்கள் மீது நாம் வைத்துள்ள மதிப்பிற்கு சான்றாகும்" என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வால் கிலோ தேயிலைக்கான செலவு 45%ஆல் உயரும்

முதலாளிமார் சம்மேளனம் அறிவிப்பு

தேயிலை மற்றும் றப்பர் துறையில் தொழில்புரியும் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை முன்னெப்போதும் இல்லாத வகையில் 70% உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு முதலாளிமார் சம்மேளனம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

புதிய சம்பள உயர்வால் பெருந்தோட்டத் துறையில் ஏற்பட்டுள்ள பாதகமான பாதிப்புகளுக்கு எதிராக அனைத்து பங்குதாரர்களாலும் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இந்தத் தீர்மானமானது பெருந்தோட்டத் துறையை நலிவடையச் செய்து இறுதியில் நாட்டில் கடுமையான பொருளாதார ஸ்திரமின்மைக்கு வழிவகுக்கும் என முதலாளிமார் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

"தொழில்துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களின் நலன்கள் மீது எந்த அக்கறையும் இல்லாமல் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது. எந்த நன்மையையும் தராத இந்தத் தீர்மானமானது, இந்நாட்டின் தேயிலை மற்றும் ரப்பர் கைத்தொழிலின் ஒவ்வொரு துறையையும் மேலும் பலவீனப்படுத்தும் என்பது எமது நம்பிக்கை. இத்தகைய நியாயமற்ற சம்பள உயர்வை ஏற்றுக் கொள்ளமுடியாது. "எனஇலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அரசு எடுத்துள்ள இந்த முடிவால் தேயிலை மற்றும் றப்பர் உற்பத்திச் செலவு மிக அதிகமாக இருப்பதுடன், தற்போது மதிப்பிடப்பட்டுள்ள ஒரு கிலோ தேயிலைக்கான செலவு சுமார் 45%ஆல் அதிகரிக்கும்.

மேலும், வருடாந்த EPF/ETF மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் 35 பில்லியனாக உயரும் என்பதால், இந்த சம்பள உயர்வு பிராந்திய பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு (RPCS) தேவையற்ற சுமையை ஏற்படுத்தும்.

# அமானா வங்கி முதல் காலாண்டில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 734.5 மில்லியனை பதிவு செய்தது



அமானா வங்கி தனது சிறந்த நிதிப் பெறுபேறுகளை தொடர்ந்தும் பதிவு செய்து, முதல் காலாண்டில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 734.5 மில்லியனை பதிவு செய்திருந்தது.

முன்னைய ஆண்டில் இதே காலப்பகுதியில் பதிவு செய்திருந்த வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 423.5 மில்லியனாக காணப்பட்டதுடன், இது 73% வருடாந்த அதிகரிப்பாகும். அதுபோன்று வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 422.2 மில்லியனாக காணப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்தப் பெறுமதி ரூ. 220.7 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது 91% வருடாந்த வளர்ச்சியாகும்.

வங்கியின் மொத்த வருமானம் ரூ. 4.1 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி என்பதுடன், இதில் இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார மீட்சி கொள்கைகளின் பிரகாரம் சந்தையில் ஏற்பட்ட வங்கி வீதங்களின் வீழ்ச்சி பங்களிப்பு செய்திருந்தது. எவ்வாறாயினும், ஆரோக்கியமான நிதியளிப்பு எல்லைப் பெறுமதியான 4.5% ஐ பேணியிருந்ததுடன், தேறிய நிதியளிப்பு வருமானம் ரூ. 1.8 பில்லியனாக முன்னேறியிருந்தது.

வங்கியின் கட்டண மற்றும் தரகு வருமானம் மற்றும் வியாபார வருமானம் வருடாந்த அடிப்படையில் முறையே 15% மற்றும் 11% அதிகரிப்பை பதிவு செய்து ரூ. 285.9 மில்லியன் மற்றும் ரூ. 275.1 மில்லியனாக பதிவாகியிருந்தன. அதனூடாக வங்கியின் மொத்த தொழிற்படு வருமானம் ரூ. 2.4 பில்லியனை எய்தியிருந்தது.

வங்கி ஆரோக்கிமான வருமானத்துக்கான செலவு விகிதத்தை 48% ஆக கொண்டிருந்தது. இதனூடாக நிதிச் சேவைகளின் மீது VAT வரிக்கு முன்னரான தொழிற்படு இலாபம் 51% வருடாந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

# நிதிக் கூற்றுகள்

2024 மார்ச் 31 இல் முடிவுற்ற ஒன்பது மாதங்களுக்கானது

NDB வங்கி
எதிர்கால வங்கியியல் முன்னோடி

## வருமான அறிக்கை

| | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 31/03/2024 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | 31/03/2023 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | மாற்றம் % | 31/03/2024 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | 31/03/2023 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | மாற்றம் % |
| **மொத்த வருமானம்** | **26,074,357** | 33,534,090 | (22) | **26,656,755** | 33,955,345 | (21) |
| வட்டி வருமானம் | 24,065,621 | 32,773,592 | (27) | 24,121,581 | 32,900,803 | (27) |
| வட்டிச் செலவீனம் | 15,989,592 | 24,228,886 | (34) | 15,973,540 | 24,205,631 | (34) |
| **நிகர வட்டி வருமானம்** | 8,076,029 | 8,544,706 | (5) | 8,148,041 | 8,695,172 | (6) |
| **நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 1,800,322 | 1,938,108 | (7) | 2,255,172 | 2,222,849 | 1 |
| கழிப்பு: கட்டண மற்றும் தரகுப்பணச் செலவுகள் | 3,357 | 1,357 | 147 | 3,357 | 1,357 | 147 |
| **நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 1,796,965 | 1,936,751 | (7) | 2,251,815 | 2,221,492 | 1 |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான நிகர இலாபம்/(செலவீனம்) | 316,921 | 905,208 | (65) | 316,921 | 905,208 | (65) |
| அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகளின் நீக்கத்திலிருந்து நிகர ஆதாயம்/(இழப்பு) | 379,925 | 115,048 | 230 | 438,882 | 144,469 | 204 |
| நிதிச் சொத்துகளின் அங்கீகாரத் தவிர்ப்பு மூலமான நிகர இலாபம்/(நட்டம்) | 710,403 | 44,510 | 1,496 | 710,403 | 44,510 | 1,496 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | (1,198,835) | (2,241,019) | 47 | (1,186,204) | (2,261,137) | 48 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | 10,081,408 | 9,305,204 | 8 | 10,679,858 | 9,749,713 | 10 |
| கழி: கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு | 4,356,479 | 4,810,712 | (9) | 4,356,479 | 4,830,496 | (10) |
| **தேறிய தொழிற்பாட்டு இலாபம்** | 5,724,929 | 4,494,492 | 27 | 6,323,379 | 4,919,217 | 29 |
| **தொழிற்பாட்டு செலவீனங்கள** | | | | | | |
| தனிப்பட்ட செலவீனங்கள் | 2,077,836 | 1,453,672 | 43 | 2,263,120 | 1,610,267 | 41 |
| நிலைமாற்றம் மற்றும் தேய்மானம | 258,290 | 242,063 | 7 | 274,871 | 259,285 | 6 |
| ஏனைய செலவினங்கள | 1,559,686 | 1,399,123 | 11 | 1,736,110 | 1,548,552 | 12 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள** | 3,895,812 | 3,094,858 | 26 | 4,274,101 | 3,418,104 | 25 |
| **நிதியியல் பணிகள் மீதான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம** | 1,829,117 | 1,399,634 | 31 | 2,049,278 | 1,501,113 | 37 |
| கழிக்குக: நிதிச் சேவைகள் மீதான வரிகள் | 645,518 | 478,498 | 35 | 645,518 | 478,498 | 35 |
| **நிதியியல் பணிகள் மீதான வரிக்கு பின்னரான தொழிற்பாட்டு இலாபம்** | 1,183,599 | 921,136 | 28 | 1,403,760 | 1,022,615 | 37 |
| வரிக்கு முந்திய இலாபத்தில் இணைக்கம்பனிகளின் பங்கு/(நட்டம்) | - | - | - | - | - | - |
| **வரிக்கு முந்திய இலாபம்** | 1,183,599 | 921,136 | 28 | 1,403,760 | 1,022,615 | 37 |
| கழி: வருமான வரிச் செலவினங்கள் | 463,997 | 115,841 | 301 | 560,774 | 177,778 | 215 |
| **காலப்பகுதிக்கான இலாபம** | 719,602 | 805,295 | (11) | 842,986 | 844,837 | (0) |
| **பங்குதாரர்களுக்கு உரிமையாக்கக்கூடிய :** | | | | | | |
| பங்கொன்றுக்கான வருமதி (ரூ) | 719,602 | 805,295 | (11) | 837,651 | 854,076 | (2) |
| வலுக் குறைந்த சாதாரண பங்கொன்றுக்கான வருமதி (ரூ) | - | - | - | 5,335 | (9,239) | 158 |
| | 719,602 | 805,295 | (11) | 842,986 | 844,837 | (0) |
| பங்கொன்றுக்கான வருமதி (ரூ) | 1.80 | 2.12 | (15) | 2.10 | 2.25 | (7) |
| வலுக் குறைந்த சாதாரண பங்கொன்றுக்கான வருமதி (ரூ) | 1.80 | 2.12 | (15) | 2.10 | 2.25 | (7) |

## முழுமையான வருமானக் கூற்று

| | | 31/03/2024 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | 31/03/2023 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | மாற்றம் % | 31/03/2024 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | 31/03/2023 இல் முடிவடைந்த காலாண்டுக்கான ரூ. '000 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| **காலப்பகுதிக்கான இலாபம்** | | 719,602 | 805,295 | (11) | 842,986 | 844,837 | (0) |
| **வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படக்கூடிய உருப்படிகள்** | | | | | | | |
| வெளிநாட்டு நடவடிக்கைகளில் பணப் பரிமாற்றத்தின் மொழிபெயர்ப்பு | | - | - | - | (24,041) | (58,182) | 59 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட கடன் பத்திரங்களிலான முதலீடுகளின் மூலம் நிகர ஆதாயம்/(இழப்பு | | 711,413 | 1,354,157 | (47) | 750,508 | 1,366,585 | (45) |
| காசுப் பாய்ச்சல் ஹெஜ் ஒதுக்கம் - இடமாற்று | | (407,777) | 75,454 | (640) | (407,777) | 75,454 | (640) |
| கழி: வருமான அறிக்கையில் காணப்படும் மறுசீரமைக்கப்படும் விடயங்கள் தொடர்பான வரிச் செலவுகள் | | (91,091) | (428,883) | 79 | (91,091) | (428,883) | 79 |
| | A | 212,545 | 1,000,727 | (79) | 227,599 | 954,973 | (76) |
| **வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படமுடியாத உருப்படிகள்** | | | | | | | |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட பங்குரிமைப் பத்திரங்களிலான முதலீடுகளின் மூலம் நிகர ஆதாயம்/(இழப்பு) | | 80,253 | 40,709 | 97 | 80,253 | 40,709 | 97 |
| | B | 80,253 | 40,709 | 97 | 80,253 | 40,709 | 97 |
| **வரிக்குப் பின்னரான ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம** | A + B | 292,798 | 1,041,436 | (72) | 307,852 | 995,682 | (69) |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | | 1,012,400 | 1,846,731 | (45) | 1,150,839 | 1,840,519 | (37) |
| **உரித்தாக்கப்படக்கூடியது:** | | | | | | | |
| தாய் நிறுவனத்தின் உரிமைதாரருக்கான இலாபம் | | 1,012,400 | 1,846,731 | (45) | 1,149,812 | 1,859,072 | (38) |
| நிறுவனத்தை கட்டுப்படுத்தா வட்டி வீதம | | - | - | - | 1,027 | (18,553) | 106 |
| | | 1,012,400 | 1,846,731 | (45) | 1,150,839 | 1,840,519 | (37) |

## 31.03.2024 இல் உள்ளவாறு நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பி.எல்.சி இன் பணிப்பாளர்கள் கொண்டுள்ள பங்குகள்

| பெயர் | பங்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. ஸ்ரீயன் கூரே | - |
| திரு. பெர்னார்ட் சின்னையா | - |
| திரு. சுஜீவா முதலிகே | - |
| திரு. குஷன் டி அல்விஸ், பிசி | - |
| செல்வி. (FAY) பையச்சத்ர் சேட்னகர்ங்குல் | - |
| செல்வி. சண்டிமா தில்ருக்ஷி | - |
| திருமதி. கஸ்தூரி செல்லராஜா | - |
| திருமதி. ஸ்வேதா பாண்டே | - |
| திரு. ஹசித பிரேமரத்ன | - |
| திரு. கெலும் எதிரிசிங்க | - |

## உரிமை முதல் மூலதன மாற்ற கூற்று

| மார்ச் 31 இல் முடிவுற்ற ஒன்பது மாதங்களுக்கானது | குறிப்பிட்ட பங்கு மூலதனம் ரூ. '000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. '000 | ஒதுக்கங்கள்: நிலுவையில் உள்ள பங்கு ஒதுக்கீட்டு மீதி ரூ. '000 | ஒதுக்கங்கள்: விற்பனை ஒதுக்கங்களுக்காக கிடைக்கக் கூடியவை ரூ. '000 | ஒதுக்கங்கள்: காசுப் பாய்ச்சல் காப்பு வருவாய் ரூ. '000 | ஒதுக்கங்கள்: காசுப் பாய்ச்சல் காப்பு வருவாய் ரூ. '000 | ஒதுக்கங்கள்: நிறுத்தி வைத்திருப்பு வருவாய் ரூ. '000 | ஒதுக்கங்கள்: காசுப் பாய்ச்சல் ஹெஜ் ஒதுக்கம் இ.ரூ.'000 | மொத்தம் ரூ. '000 | கட்டுப்படுத்த முடியாத வட்டிகள் ரூ. '000 | மொத்த உரிமை முதல் ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2023 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி** | 19,870,665 | 2,746,479 | - | 1,466,265 | 44,479 | (1,042,735) | 3,069,667 | 37,381,043 | 63,535,863 | - | 63,535,863 |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | | | | | | | | | | | |
| ஆண்டிக்கான லாபம் | - | - | - | - | - | - | - | 805,295 | 805,295 | - | 805,295 |
| வரிக்கு முந்திய ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் | - | - | - | - | - | 1,394,866 | 75,454 | - | 1,470,320 | - | 1,470,320 |
| ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் மீதான வரி | - | - | - | - | - | (406,247) | (22,636) | - | (428,883) | - | (428,883) |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | - | - | - | - | - | 988,619 | 52,818 | 805,295 | 1,846,732 | - | 1,846,732 |
| **பங்குரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | | | | | |
| முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பங்குலாபங்களை மாற்றியமைத்தல் | - | - | - | - | - | - | - | 2,667 | 2,667 | - | 2,667 |
| **2023 டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி** | 19,870,665 | 2,746,479 | - | 1,466,265 | 44,479 | (54,116) | 3,122,485 | 38,189,005 | 65,385,262 | - | 65,385,262 |
| **2024 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி** | 20,738,231 | 3,046,479 | - | 1,501,603 | 44,479 | 2,954,169 | 835,416 | 41,027,500 | 70,147,877 | - | 70,147,877 |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | | | | | | | | | | | |
| ஆண்டிக்கான லாபம | - | - | - | - | - | - | - | 719,602 | 719,602 | - | 719,602 |
| வரிக்கு முந்திய ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் | - | - | - | - | - | 791,666 | (407,777) | - | 383,889 | - | 383,889 |
| ஏனைய மொத்த தொகுக்கப்பட்ட வருமானம் மீதான வரி | - | - | - | - | - | (213,422) | 122,332 | - | (91,091) | - | (91,091) |
| **காலப்பகுதிக்கான மொத்த தொகுக்கப்பட்ட வருமானம்** | - | - | - | - | - | 578,244 | (285,445) | 719,602 | 1,012,400 | - | 1,012,400 |
| **பங்குரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | | | | | | |
| 2023 க்கான இறுதி பங்குலாபம் - பணம் | - | - | - | - | - | - | - | (798,929) | (798,929) | | (798,929) |
| 2023 க்கான இறுதி பங்குலாபம - பங்கு | - | - | 1,018,634 | - | - | - | - | (1,198,393) | (179,759) | - | (179,759) |
| **2024 மார்ச் 31 இல் உள்ளவாறு மீதி** | 20,738,231 | 3,046,479 | 1,018,634 | 1,501,603 | 44,479 | 3,532,413 | 549,971 | 39,749,780 | 70,181,589 | - | 70,181,589 |
| **குழுமம்** | | | | | | | | | | | |
| **2023 ஜனவரி 1இல் உள்ளவாறான மீதி** | 19,870,665 | 2,746,479 | - | 1,682,940 | 44,479 | (1,025,487) | 3,069,667 | 41,116,154 | 67,504,897 | 1,391,259 | 68,896,156 |
| **காலாண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | | | | | | | |
| காலாண்டில் லாபம் | - | - | - | - | - | - | - | 854,076 | 854,076 | (9,239) | 844,837 |
| வரிக்கு முந்தைய பிற விரிவான வருமானம | - | - | - | - | - | 1,407,294 | 75,454 | (48,857) | 1,433,891 | (9,327) | 1,424,564 |
| மற்ற விரிவான வருமானம் மீதான வரி | - | - | - | - | - | (406,247) | (22,636) | - | (428,883) | - | (428,883) |
| **காலாண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | - | - | - | 1,001,047 | 52,818 | 805,219 | 1,859,084 | (18,566) | 1,840,518 |
| **ஈக்விட்டி வைத்திருப்பவர்களுடனான பரிவர்த்தனைகள்** | | | | | | | | | | | |
| முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பங்குலாபங்களை மாற்றியமைத்தல் | - | - | - | - | - | - | - | 2,667 | 2,667 | - | 2,667 |
| **2023 டிசம்பர் 31மார்ச் உள்ளவாறு மீதி** | 19,870,665 | 2,746,479 | - | 1,682,940 | 44,479 | (24,440) | 3,122,485 | 41,924,040 | 69,366,648 | 1,372,693 | 70,739,341 |
| **2024 ஜனவரி 1ஜனவரி உள்ளவாறான மீதி** | 20,738,231 | 3,046,479 | - | 1,747,711 | 44,479 | 2,979,910 | 835,416 | 45,079,167 | 74,471,393 | 1,424,930 | 75,896,323 |
| **காலாண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | | | | | | | |
| **காலாண்டிற்கான இலாபம்** | - | - | - | - | - | - | - | 837,651 | 837,651 | 5,335 | 842,986 |
| வரிக்கு முன் ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | - | - | 830,761 | (407,777) | (19,731) | 403,253 | (4,308) | 398,945 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் மீதான வரி | - | - | - | - | - | (213,424) | 122,332 | - | (91,092) | - | (91,092) |
| **காலாண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | - | - | - | - | - | 617,337 | (285,445) | 817,920 | 1,149,812 | 1,027 | 1,150,839 |
| **பங்கு மூலதன உரிமையாளர்களுடன் மொத்த கொடுக்கல் வாங்கல்** | | | | | | | | | | | |
| 2023 க்கான இறுதி பங்குலாபம் - பணம் | - | - | - | - | - | - | - | (798,929) | (798,929) | - | (798,929) |
| 2023 க்கான இறுதி பங்குலாபம் - பங்கு | - | - | 1,018,634 | - | - | - | - | (1,198,393) | (179,759) | - | (179,759) |
| **2024 டிசம்பர் 31இல் உள்ளவாறு மீதி** | 20,738,231 | 3,046,479 | 1,018,634 | 1,747,711 | 44,479 | 3,597,247 | 549,971 | 43,899,765 | 74,642,517 | 1,425,957 | 76,068,474 |

## ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமை குறித்த அறிக்கை

| | வங்கி | | | குழுமம் | | |
|---|---|---|---|---|---|---|
| | நடப்புகாலம் 31/03/2024 இல் உள்ளவாறு (கணக்காய்வானது) ரூ. '000 | முன்னைய காலம் 31/12/2023 இல் உள்ளவாறு (கணக்காய்வானது) ரூ. '000 | மாற்றம் % | நடப்புகாலம் 31/03/2024 இல் உள்ளவாறு (கணக்காய்வானது) ரூ. '000 | முன்னைய காலம் 31/12/2023 இல் உள்ளவாறு (கணக்காய்வானது) ரூ. '000 | மாற்றம் % |
| **சொத்துக்கள்** | | | | | | |
| பணம் மற்றும் பணம் நிகரானவை | 13,099,774 | 28,100,515 | (53) | 13,877,262 | 28,580,676 | (51) |
| மத்திய வங்கியிலுள்ள மீதி | 8,107,012 | 7,040,421 | 15 | 8,107,012 | 7,040,421 | 15 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | 24,680,629 | 33,743,602 | (27) | 24,680,629 | 33,743,602 | (27) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,916,395 | 3,083,815 | (38) | 1,916,395 | 3,083,815 | (38) |
| இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாய பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் | 22,184,166 | 24,021,340 | (8) | 24,197,441 | 26,040,046 | (7) |
| அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் கடன்கள் மற்றும் முற்பணங்கள | 439,638,046 | 452,660,461 | (3) | 439,727,116 | 452,739,928 | (3) |
| நிலைமாற்றப்பட்ட பெறுமதியி நிதிச் சொத்துகள் - கடன் பத்திரங்கள | 135,222,849 | 125,672,370 | 8 | 135,301,794 | 125,672,370 | 8 |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக்கூற்றினூடாக நியாயப் பெறுமதியியல் மதிப்பிட்ட நிதியியல் சொத்துக்கள | 90,843,240 | 83,805,398 | 8 | 91,636,106 | 84,645,423 | 8 |
| துணைக் கம்பனிகளில் முதலீடு | 1,108,772 | 1,108,772 | - | - | - | - |
| முதலீட்டு ஆதனம் | - | - | - | 3,708,265 | 3,112,440 | 19 |
| அருவச் சொத்துக்கள் | 1,911,686 | 1,883,447 | 1 | 1,933,291 | 1,898,270 2 | |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 3,086,485 | 3,141,117 | (2) | 3,171,530 | 3,817,097 | (17) |
| சொத்து பயன்பாட்டிற்கான உரிமை | 1,179,992 | 1,145,601 | 3 | 1,300,355 | 1,260,055 | 3 |
| நடப்பு வரிச் சொத்துகள் | - | - | - | 45,728 | 43,102 | 6 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 10,161,812 | 9,648,118 | 5 | 10,229,916 | 9,717,805 | 5 |
| ஏனைய சொத்துக்கள் | 4,230,240 | 4,844,183 | (13) | 4,746,491 | 5,563,827 | (15) |
| **மொத்த சொத்துக்கள்** | **757,371,098** | **779,899,160** | **(3)** | **764,579,331** | **786,958,877** | **(3)** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 230,677 | 7,679,195 | (97) | 230,677 | 7,679,195 | (97) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 845,782 | 93,361 | 806 | 845,782 | 93,361 | 806 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 614,395,787 | 615,643,999 | (0) | 613,940,806 | 615,232,470 | (0) |
| நிலைமாற்றப்பட்ட பெறுமதியில் நிதி பொறுப்புக்கள் | | | | | | |
| - கடன் பத்திரதாரர்களுக்கு செலுத்துமதி | 2,783,579 | 15,632,569 | (82) | 2,783,579 | 15,632,569 | (82) |
| - ஏனைய கடன்படுனர்களுக்கு செலுத்துமதி | 22,921,467 | 24,636,539 | (7) | 22,921,467 | 24,636,539 | (7) |
| கடன்பத்திரங்கள் வழங்கல் | 30,214,289 | 29,388,875 | 3 | 30,214,289 | 29,388,875 | 3 |
| ஓய்வுகால அனுகூலக் கடப்பாடுகள் | 1,284,181 | 1,299,909 | (1) | 1,428,552 | 1,439,374 | (1) |
| தற்போதைய வரிப் பொறுப்புக்கள் | 7,718,044 | 7,265,070 | 6 | 7,907,558 | 7,430,773 | 6 |
| பிற்போடப்பட்ட வரி | - | - | - | 924,239 | 921,189 | 0 |
| ஏனைய பொறுப்புக்கள் | 6,016,417 | 8,033,112 | (25) | 6,534,622 | 8,529,555 | (23) |
| செலுத்த வேண்டிய பங்கிலாபங்கள் | 779,286 | 78,654 | 891 | 779,286 | 78,654 | 891 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **687,189,509** | **709,751,283** | **(3)** | **688,510,857** | **711,062,554** | **(3)** |
| **பங்கு மூலதனம்** | | | | | | |
| அறிக்கையிடப்பட்ட முதலீடு | 20,738,231 | 20,738,231 | - | 20,738,231 | 20,738,231 | - |
| சட்டரீதியான ஒதுக்க நிதி | 3,046,479 | 3,046,479 | - | 3,046,479 | 3,046,479 | - |
| பொது ஒதுக்கங்கள் | 39,749,779 | 41,027,500 | (3) | 43,899,765 | 45,079,167 | (3) |
| பிடித்து வைக்கப்பட்ட பங்கு வருவாய்கள் | 6,647,100 | 5,335,667 | 25 | 6,958,042 | 5,607,516 | 24 |
| **பங்குதாரர்களுக்கான மொத்த பங்கு மூலதனம்** | **70,181,589** | **70,147,877** | **0** | **74,642,517** | **74,471,393** | **0** |
| நிறுவனத்தின் கட்டுப்பாடில்லா உரித்து | - | - | - | 1,425,957 | 1,424,930 | 0 |
| **மொத்த பங்கு மூலதனம்** | **70,181,589** | **70,147,877** | **0** | **76,068,474** | **75,896,323** | **0** |
| **மொத்த பங்கு மூலதனமும் பொறுப்புக்களும்** | **757,371,098** | **779,899,160** | **(3)** | **764,579,331** | **786,958,877** | **(3)** |
| ஒரு சாதாரண பங்கிற்கான நிகர புத்தகப் பெறுமதி (ரூபா) | 175.69 | 175.60 | 0 | 186.86 | 186.43 | 0 |
| எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் | 267,207,407 | 277,965,419 | (4) | 267,304,324 | 278,127,046 | (4) |
| **அமைப்புத் தகவல்கள்** | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 2,875 | 2,756 | | | | |
| வங்கி கிளைகளின் எண்ணிக்கை | 113 | 113 | | | | |

## உறுதியுரை

மேற்காணப்படும் நிதியறிக்கைகள், 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் தேவைகளுக்கு அமைவானவை என்று இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

(ஒப்பம்)
**ஹசீதா அதபத்து**
பிரதித் தலைவர் - நிதி

கீழே கையொப்பமிட்டுள்ள நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பி.எல்.சி.யின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகிய நாம் பின்வருவனவற்றைக் கூட்டாக உறுதிப்படுத்துகின்றோம்.

(அ) மேற்கான் கூற்றுக்களானது இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வடிவத்திற்கும் வரைவிலக்கணத்திற்கும் அமைய தயாரிக்கப்பட்டது.
(ஆ) இக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவலானது கணக்காய்வு செய்யப்படாத நிதிக்கூற்றிலிருந்து பெறப்பட்டது.

(ஒப்பம்)
**ஸ்ரீயன் குரே**
இயக்குனர்/தலைவர்

(ஒப்பம்)
**கெலும் எதிரிசிங்க**
இயக்குனர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

14 மே 2024

## முதன்மை பெறுபேற்றுக் குறிகாட்டிகள் (நெறிப்படுத்தல் அறிக்கையின் படி)

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | 31/03/2024 இல் உள்ளவாறானது | 31/12/2023 இல் உள்ளவாறானது | 31/03/2024 இல் உள்ளவாறானது | 31/12/2023 இல் உள்ளவாறானது |
| **நெறிப்படுத்தப்பட்ட மூலதன போதுமை (ரூபா. '000)** | | | | |
| பொது உரிமையாண்மை Tier 1 மூலதனம் | 52,777,547 | 54,699,450 | 56,571,415 | 58,524,995 |
| Tier 1 மூலதனம் | 52,777,547 | 54,699,450 | 56,571,415 | 58,524,995 |
| மொத்த மூலதனம | 70,861,938 | 74,523,602 | 74,618,159 | 78,313,241 |
| **நெறிப்படுத்தப்பட்ட மூலதன போதுமை விகிதம் (%)** | | | | |
| பொது உரிமையாண்மை Tier 1 விகிதம் (%) (ஆகக் குறைந்த நிர்ணயம் - 7% ) | 11.93 | 11.67 | 12.49 | 12.22 |
| Tier 1 மூலதன விகிதம் (ஆகக் குறைந்த நிர்ணயம் - 8.5% | 11.93 | 11.67 | 12.49 | 12.22 |
| மொத்த மூலதன விகிதம் (ஆகக் குறைந்த நிர்ணயம் - 12.5% | 16.02 | 15.90 | 16.48 | 16.35 |
| கடன் விகிதம் (ஆகக் குறைந்த நிர்ணயம் - 3%) | 6.72 | 6.74 | 7.14 | 7.15 |
| **நெறிப்படுத்தப்பட்ட திரவத்தன்மை** | | | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் - (ரூ.'000) | 286,505,082 | 270,066,127 | 286,505,082 | 270,066,127 |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்களின் விகிதம் (ஆகக் குறைந்த நிர்ணயம் 20 %) | 41.67 | 39.02 | 41.67 | 39.02 |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்தப் பங்குகள் (ரூ.'000) - சகல நாணயங்களும் | 252,715,483 | 223,342,569 | 252,715,483 | 223,342,569 |
| உயர்தர திரவச் சொத்துக்களின் மொத்தப் பங்குகள் (ரூ.'000) - இலங்கை ரூபா | 227,947,610 | 199,940,490 | 227,947,610 | 199,940,490 |
| திரவத்தன்மை காப்பு விகிதம (%) – இலங்கை ரூபா (ஆகக் குறைந்த நிர்ணயம - 100% | 336.22 | 309.61 | 336.22 | 309.61 |
| திரவத்தன்மை காப்பு விகிதம (%) –சகல நாணயங்களும் (ஆகக் குறைந்த நிர்ணயம் - 100%) | 282.80 | 228.58 | 282.80 | 228.58 |
| நிகர நிலையான நிதி விகிதம் (%) (ஆகக்குறைந்த தேவை - 100%) | 152.15 | 142.26 | 152.15 | 142.26 |
| **சொத்துக்களின் தரம் (கடன் தளங்களின் தரம்)** | | | | |
| மொத்த செயற்படாத முற்பண விகிதம் (%) | 8.27 | 8.58 | 8.27 | 8.58 |
| தேறிய செயற்படாத முற்பண விகிதம் (%) | 44.74 | 41.11 | 44.74 | 41.11 |
| **இலாபத்தன்மை** | | | | |
| பங்கொன்றின் வருவாய் (ரூ) - (ஆண்டுக்கு) | 7.92 | 13.44 | 9.11 | 14.42 |
| சராசரி பங்குதாரர்களின் நிதி வருவாய் (%) | 4.51 | 8.03 | 4.88 | 8.11 |
| சராசரி சொத்துக்களிலிருந்ததான வருவாய் (வரிக்குப் பின்)(%) | 0.41 | 0.67 | 0.47 | 0.71 |
| சராசரி சொத்துக்களிலிருந்ததான வருவாய் (வரிக்கு முன்)(%) | 1.03 | 1.25 | 1.13 | 1.34 |
| தேறிய வட்டி எல்லை (%) | 4.23 | 3.96 | 4.22 | 3.98 |
| **கடன் பாதுகாப்பு தொடர்பான விகிதங்கள்** | | | | |
| வட்டிக் காப்பீடு (மடங்குகள்) | 1.51 | 1.37 | 1.51 | 1.37 |
| கடன் - உரிமைப்பங்கு (மடங்குகள்) | 9.55 | 9.88 | 8.98 | 9.30 |

## நிதிக் கூற்றுகள் மீதான குறிப்புகள்

1 இப் புள்ளிவிபரங்கள், வங்கி மற்றும் குழுமத்தின் கணக்காய்வு செய்யப்படாத நிதி அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவை.
வங்கி மற்றும் குழுமத்தின் நிதியறிக்கைகள், இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிலையத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்கியல் நியமங்களுக்கு (SLFRSs/LKASs) அமைவான கணக்கியல் கொள்கைகள் மற்றும் முறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.
கடந்த ஆண்டறிக்கை பிரசுரிக்கப்பட்ட பின்னர், கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணிப்பீட்டு முறைகளில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை.

2 இந்த நிதியறிக்கைகள், "இடைக்கால நிதி அறிக்கையிடல்" தொடர்பான இலங்கைக் கணக்கியல் நியமம் - LKAS 34 இன் தேவைப்படுத்தல்களுக்கும் இணக்கமான முறையில் அமைவதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் விதி 7.4இன் ஏற்பாடுகளில் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களையும் வழங்குகின்றன.

3 **எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள்**

**கடன்கள் மற்றும் வருமதிகள்**

தனிநபர் மற்றும் கூட்டு அடிப்படையிலான இரண்டு அணுகுமுறைகளின் அடிப்படையில் கடன் வசதிகளின் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களை (நுஊடு) வங்கி மதிப்பீடு செய்துள்ளது. தனித்தனியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளம் காணப்பட்ட வாடிக்கையாளர்களை தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்து கடன் இடர்களின் அதிகரிப்பின் அடையாளம் காணப்பட்ட குறிகாட்டிகளின் அடிப்படையில் அந்த வாடிக்கையாளர்கள் வகைப்படுத்தப்பட்டனர்.
கூட்டு குறைபாடு அணுகுமுறையில் மதிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்கள், அண்மைக் கால முன்னறிவிப்புகள் மற்றும் கணிப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் நிகழ்தகவு இயல்புநிலை (நுஉ), நட்டம் எதிர்பார்க்கப்படும் இயல்புநிலை (டுபுனு) மற்றும் பொருளாதார காரணி சரிசெய்தல் முறை (நுகுயு) ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும், கடினமான பொருளாதார நிலைமைகள் காரணமாக கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பெறுவதற்குத் தேவையான இடங்களில் அடையாளம் காணப்பட்ட இடர் உயர்த்தப்பட்ட தொழில்களில் உள்ளடங்கிய வசதிகளின் நிலைப்பாட்டைக் குறைப்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நட்டங்களைத் தணிக்க நிர்வாக மேலடுக்குகளை வங்கி கணக்கிட்டுள்ளது.

**பிற நிதிச் சொத்துக்கள்**

இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் (ஐஆஒ) இடையில் வெளிநாட்டு நாணய மதிப்பிலான பத்திரங்களை மறுசீரமைப்பது தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளைக் கருத்தில் கொண்டு, வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்கப் பத்திரங்களில் குறைபாடுள்ள ஏற்பாடுகளை வங்கி கணக்கிட்டுள்ளது.

4 மொத்த கடன் முதலீட்டு பிரிவில் இருந்து, வங்கியானது 37.7 பில்லியன் ரூபாய் வரையிலான கடன் கணக்குத்திரட்டு ஆவணங்களை மறுவகைப்படுத்தியுள்ளது. இதில் இலங்கை அரசாங்க திறைசேரி முறிகள் 32.6 பில்லியன் ரூபாய் மற்றும் இலங்கை அரசாங்க இறையாண்மைப் பத்திரங்கள் 14 மில்லியன் அமெரிக்க (ருளுனு) 14 என்பவை "பிற விரிவான வருமானத்தில் நியாயமான மதிப்பின்" மூலம் "கடனீட்டுச் செலவில்" காட்டப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மறுவகைப்படுத்தல் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடன் பிரிவை மறுவகைப்படுத்தல் தொடர்பான மாற்று அணுகுமுறை அறிக்கையின் (ஏழுபுவு) பிரகாரம் ஒரு முறை நிகழும் நிகழ்வாக உள்ளது. ஸ்டுருக 9-நிதி கருவிகள் பந்தி 5.6.5 இன் தேவைகளுடன், பிற விரிவான வருமானத்தில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட இந்த நிதிக் கருவிகளின் ஒட்டுமொத்த நட்டங்கள் பங்குகளிலிருந்து அகற்றப்பட்டு, மறுவகைப்படுத்தப்பட்ட திகதியில் நிதிச் சொத்தின் நியாயமான மதிப்பிற்கு எதிராக சரிசெய்யப்பட்டது. இந்த முதலீடுகள் பிற விரிவான வருமானத்தின் மூலம் நியாயமான மதிப்பில் தொடர்ந்து கொண்டு செல்லப்பட்டால், மார்ச் 31, 2024 நிலவரப்படி மீதமுள்ள 'ழு சுவுகுடீழ கணக்குத்திரட்டு ஆவணங்களின் நியாயமான மதிப்பு 6.1 பில்லியன் ரூபாயாக இருந்திருக்கும் மற்றும் இந்த காலகட்டத்தில் மற்ற விரிவான வருமானம் 2.1 பில்லியன் ரூபாயாக இருந்திருக்கும்.

5 **பங்குத்தொகை**

15 மார்ச் 2024 அன்றைய தினம், பணிப்பாளர்கள் குழு ஒரு பங்கிற்கு 5.00 ரூபாய் என்ற இறுதி பங்குத்தொகையை அங்கீகரித்து அறிவித்தது. அதில் 2.00 ரூபாய் பங்குத்தொகை பணம் வடிவில் இருந்தது மற்றும் மீதமுள்ள 3.00 ரூபாய் நிறைவடைந்த நிதியாண்டிற்கான குறிக்கப்பட்ட பங்குத்தொகையாக இருந்தது. 31 டிசம்பர் 2023 அன்றைய நிலவரப்படி, 16,049,064 சாதாரண விருப்பப் பங்குகள் குறிக்கப்பட்ட பங்குகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக, வங்கியின் குறிக்கப்பட்ட மூலதனம் 21.76 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது (31 டிசம்பர் 2023 - 20 பில்லியன் ரூபாவாக இருந்தது). குறிக்கப்பட்ட பங்குத்தொகைக்குப் பதிலாக, பட்டியலிடப்பட்ட திகதி வரை நிலுவையில் உள்ள பங்கு ஒதுக்கீடு கையிருப்பில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

6 **முன்மொழியப்பட்ட கடன் பத்திர வெளியீடு**

15 மார்ச் 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வங்கியின் பணிப்பாளர்கள் குழு, வங்கி அதிகபட்சமாக நூறு மில்லியன் ரூபாய் (100,000,000) பாசல் ஐஐஐ அடுக்கு 2 இற்கு இணக்கமான பட்டியலிடப்பட்ட, மதிப்பிடப்பட்ட, பாதுகாப்பற்ற மற்றும் மீட்டெடுக்கக்கூடிய கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கு அனுமதி அளித்தது. கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகபட்சமாக பத்து பில்லியன் ரூபாயை (10,000,000,000.'- ரூபாய்) திரட்டுவதற்காக, ஒவ்வொன்றும் நூறு ரூபாய் (ரூ.100.'-) பெறுமதியான ஒரு நிச்சயதன்மையற்ற பரிமாற்றம் (இனி "கடன்கள்" என குறிப்பிடப்படுகிறது) மேற்கொள்ளப்பட்டது:

- கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் பட்டியலிடல் வரைவிலக்கணத்தின்படி "தகுதியுள்ள முதலீட்டாளர்களுக்கு" தொகுதிக்கடன்கள் வழங்கப்படும்;
- 100,000,000 தொகுதிக்கடன்கள் பகுதி பகுதியாக வழங்கப்படும். வழங்கல் காலப்பகுதியானது, தொகுதிக்கடன் வழங்கலைப் பங்குதாரர்கள் அங்கீகரித்த திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு உட்பட்டதாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனுமதிக்கு உட்பட்டதாகவும் இருக்கும் என்பதுடன், வங்கியின் தேவைகள் மற்றும் நடப்பிலுள்ள சந்தை நிலைமைகளின் அடிப்படையில் வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்படும் ;
- தொகுதிக்கடன் வழங்கலின் அளவு, காலப்பகுதி/முதிர்ச்சிக் காலம் (குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள்), கூப்பன் வீதங்கள், கூப்பன்களின் கால இடைவெளி முதலியன வங்கியின் தேவைக்கேற்ப சபையினால் தீர்மானிக்கப்பட்டு, திட்டமிடப்பட்ட அத்தகைய பல்தொகுதி வழங்கல்களின் ஆரம்பத்திற்கு முன்னர் அறிவிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பல்தொகுதி வழங்கல்கள், அவை தொடர்பில் அவசியமான ஒழுங்குபடுத்தல் அங்கீகாரங்களுக்கு உட்பட்டதாகவே மேற்கொள்ளப்படும். Basel III க்கு இணக்கமான இத் தொகுதிக்கடன்களை கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் விலைகூறவிடுவதற்கு வங்கி உத்தேசித்துள்ளது.

7 இந்த நிதியறிக்கைகளில் சீராக்கப்பட வேண்டிய அல்லது வெளிப்படுத்தப்பட வேண்டிய நிகழ்வுகள் எதுவும், வங்கி மற்றும் குழுமத்தின் நிதி நிலைமை பற்றிய அறிக்கை வெளியிடப்பட்ட திகதிக்குப் பின்னர் இடம்பெறவில்லை.

நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பி.எல்.சி
40, நவம் மாவத்தை, கொழும்பு 02. இலங்கை. தொலைபேசி: (94 11) 2448448 பக்ஸ்: (94 11) 2440262

A - (lka)
Fitch Ratings Lanka Limited

# நிதிக் கூற்றுகள்

2024 மார்ச் 31 இல் முடிவுற்ற ஒன்பது மாதங்களுக்கானது

NDB வங்கி

எதிர்கால வங்கியியல் முன்னோடி

## கூறுநிலைப் பகுப்பாய்வு - குழுமம்

| மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கானது | வங்கி | | முதலீட்டுச் சந்தை | | சொத்து முதலீடு | | ஏனையவை | | திரட்டியது | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 | 2024 ரூ. '000 | 2023 ரூ. '000 |
| **வருவாய்** | | | | | | | | | | |
| வட்டி வருமானம் | 24,065,621 | 32,773,592 | 40,146 | 103,956 | - | - | - | - | 24,105,767 | 32,877,548 |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 1,800,322 | 1,936,751 | 391,139 | 206,634 | 34,867 | 44,633 | 8,385 | 14,704 | 2,234,713 | 2,202,722 |
| வர்த்தகத்திலிருந்து நிகர ஆதாயம்/(இழப்பு) | 316,921 | 905,208 | - | - | - | - | - | - | 316,921 | 905,208 |
| நிதியியல் முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான நிகர இலாபம்/(நட்டம்) | 379,925 | 115,048 | 58,957 | 29,421 | - | - | - | - | 438,882 | 144,469 |
| நிதிச் சொத்துகளின் அங்கீகாரத் தவிர்ப்பு மூலமான நிகர இலாபம்/(நட்டம்) | 710,403 | 44,510 | - | - | - | - | - | - | 710,403 | 44,510 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | (1,198,835) | (2,241,019) | 12,631 | (20,118) | - | - | - | - | (1,186,204) | (2,261,137) |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான மொத்த வருவாய் | 26,074,357 | 33,534,090 | 502,873 | 319,892 | 34,867 | 44,518 | 8,385 | 14,704 | 26,620,482 | 33,913,205 |
| உள்ளக கூறுகளுக்கிடையிலான வருமானம் | - | - | 17,228 | 11,255 | 19,045 | 30,885 | - | - | 36,273 | 42,140 |
| மொத்த வருவாய் | 26,074,357 | 33,534,090 | 520,101 | 331,148 | 53,912 | 75,403 | 8,385 | 14,704 | 26,656,755 | 33,955,345 |
| பெறுமதி குறைப்பு/(புறமாற்றல்) கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களும் கூறுநிலை செலவினம் | (4,356,479) | (4,810,712) | - | - | - | (19,785) | - | - | (4,356,479) | (4,830,496) |
| மொத்த கூறுநிலை செலவினம் | (19,859,403) | (27,287,182) | (369,746) | (271,886) | (5,153) | (4,967) | (16,695) | (59,698) | (20,250,998) | (27,623,734) |
| கூறுநிலை விளைவுகள் | (24,215,882) | (32,097,894) | (369,746) | (271,886) | (5,153) | (24,752) | (16,695) | (59,698) | (24,607,477) | (32,454,231) |
| வரிவிதிப்பு | 1,858,475 | 1,436,196 | 150,354 | 59,261 | 48,759 | 50,651 | (8,309) | (44,994) | 2,049,278 | 1,501,113 |
| நிதிச் சேவைகள் மீதான பெ.சே.வ | - | - | - | - | - | - | - | - | 560,774 | 177,778 |
| வரிக்குப் பின் இலாபம் | - | - | - | - | - | - | - | - | 645,518 | 478,498 |
| **வரி விதிப்புக்குப் பிறகு லாபம்** | | | | | | | | | **842,986** | **844,837** |
| **ஏனைய தகவல்கள்** | | | | | | | | | | |
| கூறுநிலை சொத்துக்கள் | 757,314,998 | 781,845,141 | 3,547,303 | 3,111,649 | 3,619,481 | 3,345,212 | 97,549 | 145,800 | 764,579,331 | 788,447,801 |
| **ஒருங்கிணைக்கப்பட்ட மொத்தச் சொத்துகள்** | | | | | | | | | 764,579,331 | 788,447,801 |
| கூறுநிலை பொறுப்புக்கள் | 686,708,903 | 716,002,464 | 873,459 | 810,941 | 897,995 | 870,178 | 30,500 | 24,879 | 688,510,857 | 717,708,461 |
| **ஒருங்கிணைக்கப்பட்ட மொத்தப் பொறுப்புகள்** | | | | | | | | | 688,510,857 | 717,708,461 |
| **கூறுநிலை காசப்பாய்ச்சல்** | | | | | | | | | | |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசப் பாய்ச்சல் | (7,743,939) | 114,639 | 419,021 | 92,069 | (21,302) | 38,553 | (24,008) | 52,121 | (7,370,228) | 297,382 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் காசப் பாய்ச்சல் | (16,262,976) | (8,698,732) | (70,911) | (450,236) | (5,473) | (1,784) | - | - | (16,339,360) | (9,150,752) |
| நிதியிடல் நடவடிக்கைகளில் காசப் பாய்ச்சல் | (58,398) | (685,653) | - | - | - | - | - | - | (58,398) | (685,653) |

## காசு பாய்ச்சல் கூற்று

| மார்ச் 31 இல் முடிவடைந்த 3 மாதங்களுக்கானது | வங்கி 2024 ரூ. '000 | வங்கி 2023 ரூ. '000 | குழுமம் 2024 ரூ. '000 | குழுமம் 2023 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசு பாய்ச்சல்** | | | | |
| பெறப்பட்ட வட்டி | 30,658,712 | 27,977,896 | 30,702,304 | 28,083,901 |
| பெறப்பட்ட கட்டண மற்றும் தரகுப்பண வருமானம் | 1,869,741 | 1,940,445 | 2,320,985 | 2,202,591 |
| பெறப்பட்ட பங்கிலாபம் | - | - | 1,747 | 29,892 |
| பெறப்பட்ட ஏனைய வருமானம் | (957,119) | (1,382,872) | (925,191) | (1,347,692) |
| செலுத்தப்பட்ட வட்டி | (17,655,358) | (25,119,850) | (17,655,295) | (25,119,375) |
| செலுத்தப்பட்ட ஆளணிச் செலவுகள | (2,025,003) | (1,390,422) | (2,196,239) | (1,541,791) |
| பிற செலவுகள் செலுத்தப்பட்டன | (1,877,669) | (1,710,022) | (2,121,260) | (1,813,882) |
| **செயற்பாட்டு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மீதான மாற்றங்களின் முன் செயற்பாட்டு இலாபம்** | 10,013,304 | 315,175 | 10,127,051 | 493,644 |
| **செயற்பாட்டு சொத்துக்களின் (அதிகரிப்பு)/குறைவு** | | | | |
| ஒழுங்குபடுத்தல் அல்லது கண்காணிப்புக் கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் வைப்புகள் | (1,066,591) | 2,899,910 | (1,066,591) | 2,899,910 |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் - ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள | 5,307,250 | 47,253,494 | 5,307,250 | 47,019,041 |
| **ஏனைய சொத்துக்களின் நிகர அதிகரிப்பு/(குறைவு)** | 1,383,125 | 2,235,017 | 1,257,563 | 2,336,590 |
| **செயற்பாட்டு பொறுப்புக்களின் நிகர அதிகரிப்பு/(குறைவு)** | | | | |
| பணமதிப்பு நீக்கப்பட்ட செலவில் நிதிப் பொறுப்புகள் - வைப்பாளர்கள் காரணமாக | 1,293,194 | (43,588,957) | 1,438,898 | (43,292,657) |
| கடன் பத்திரங்கள் வைத்திருப்பவர்கள் காரணமாக - கடனீட்டுச் செலவில் நிதிப் பொறுப்புகள் | (12,848,990) | 5,172,725 | (12,848,990) | 5,172,725 |
| பிற கடன் வாங்குபவர்களின் காரணமாக - நிதிக் கடன்கள் | (9,155,418) | (12,816,969) | (9,155,418) | (12,816,969) |
| குத்தகை பொறுப்புகளின் முக்கிய பகுதியை திருப்பிச் செலுத்துதல் | (120,848) | (420,768) | (127,279) | (425,276) |
| மற்ற பொறுப்புகளில் நிகர அதிகரிப்பு.(குறைவு) | (1,395,468) | (568,457) | (1,076,566) | (678,643) |
| **வரிவிதிப்புக்கு முன் இயக்க நடவடிக்கைகளில் இருந்து நிகர பணம் உருவாக்கப்படுகிறது.(பயன்படுத்தப்படுகிறது)** | (6,590,442) | 481,170 | (6,144,082) | 708,365 |
| நிதிச் சேவைகளுக்காக செலுத்தப்பட்ட வரி | (537,690) | (318,868) | (537,690) | (318,868) |
| செலுத்தப்பட்ட வருமான வரிகள் | (615,807) | (47,663) | (688,456) | (92,115) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளால் வழங்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) நிகர காசு** | (7,743,939) | 114,639 | (7,370,228) | 297,382 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் ஊடான காசு பாய்ச்சல்** | | | | |
| நிதியியல் முதலீடுகளில் தேறிய மாற்றம் | (16,105,178) | (7,278,301) | (16,155,267) | (7,725,912) |
| அருவச் சொத்துகளின் கொள்வனவு | (104,799) | (828,626) | (112,607) | (828,626) |
| இணை நிறுவனங்களை கலைப்பதில் நிகர காசப்பாய்சல் | (56,073) | (593,550) | (74,560) | (597,959) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதான விற்பனையால் கிட்டிய வருவாய் | 3,074 | 1,745 | 3,074 | 1,745 |
| **முதலீட்டு நடவடிக்கைகளால் பயன்படுத்தப்பட்ட நிகர காசு** | (16,262,976) | (8,698,732) | (16,339,360) | (9,150,752) |
| **நிதி நடவடிக்கைகள் மூலம் காசு பாய்ச்சல்** | | | | |
| வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் மீது செலுத்தப்பட்ட வட்டி | - | (685,602) | - | (685,602) |
| வழங்கப்பட்ட பற்று பத்திரங்களுக்கு செலுத்தப்படும் வட்டி | (58,398) | - | (58,398) | - |
| தாய் நிறுவனத்தின் பங்குரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் | - | (51) | - | (51) |
| **நிதியிடல் நடவடிக்கைகளால் வழங்கப்பட்ட.(பயன்படுத்தப்பட்ட) நிகர காசு** | (58,398) | (685,653) | (58,398) | (685,653) |
| **Nகாசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் நிகர அதிகரிப்பு** | (24,065,313) | (9,269,746) | (23,767,986) | (9,539,023) |
| **குறித்த வருடத்தின் ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்** | 61,844,117 | 38,958,510 | 62,324,278 | 39,836,654 |
| **குறித்த காலப்பகுதியின் முடிவில் காசும் காசுக்குச் சமமானவையும்** | 37,778,804 | 29,688,764 | 38,556,292 | 30,297,631 |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை மீதான இணக்கப்பாடு** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள | 13,099,774 | 29,029,394 | 13,877,262 | 29,638,261 |
| வங்கிகளில் வைப்பிலிடப்பட்டவை | 24,680,629 | 655,698 | 24,680,629 | 655,698 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் (மொத்தம்)** | 37,780,403 | 29,685,092 | 38,557,891 | 30,293,959 |
| குறைப்பு: சீரிழப்பு அறவீடுகள் | (1,599) | 3,672 | (1,599) | 3,672 |
| **நிதி நிலைமை அறிக்கையின்படி காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் (நிகர)** | 37,778,804 | 29,688,764 | 38,556,292 | 30,297,631 |

## தகவலைப் பகிரவும்

**31.03.2024 ல் உள்ளவாறு நெஷனல் டிவலப்மன்ட் பாங்க் பி எல் சி இன் பதிவுசெய்யப்பட்ட 20 பிரதான பங்குதாரர்கள்**

| | பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | % |
|---|---|---|---|
| 1 | ஸ்டாண்டர்ட் சார்ட்டர்டு வங்கி மொரிஷியஸ் எஸ்/ஏ நார்.'.பண்ட் | 39,906,488 | 9.99 |
| 2 | ஊழியர் சேமலாப நிதியம் | 37,966,343 | 9.50 |
| 3 | இலங்கை வங்கி கணக்கு 01 | 31,749,539 | 7.95 |
| 4 | றிச்சட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்ட் கணக்கு இல.1 | 24,783,596 | 6.20 |
| 5 | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிட்டட் - பொது நிதியம் | 24,276,976 | 6.08 |
| 6 | இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் லிமிட்டட் - ஆயுள் நிதியம் | 20,183,453 | 5.05 |
| 7 | செப்ட்லொஜிக் ஆயுள் காப்புறுதி பிஎல்சி - கணக்கு இல. 03/ஆயுள் பங்குதரர்கள் நிதியம் | 19,373,387 | 4.85 |
| 8 | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை | 13,549,618 | 3.39 |
| 9 | BNYM RE-TERRA உலகளாவிய வாய்ப்பு நிதி, L.P | 12,800,000 | 3.20 |
| 10 | கலாநிதி எஸ். யத்தெஹிகே | 11,257,242 | 2.82 |
| 11 | ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி கணக்கு இல. 01 | 11,073,010 | 2.77 |
| 12 | பெர்பெட்சுயல் ட்ரெஷரீஸ் லிமிட்டட் | 9,772,734 | 2.45 |
| 13 | எஸ்பிஐ வென் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டட | 9,696,834 | 2.43 |
| 14 | கமர்ஷியல் பேங்க் ஆ.'.ப் சிலோன் பிஎல்சி.'.மெட்ரோகார்ப் (பிவிடி) லிமிடெட் | 8,369,676 | 2.10 |
| 15 | செப்ட்லொஜிக் ஆயுள் காப்புறுதி பிஎல்சி - கணக்கு இல. 05/(பங்கேற்காத நிதி) | 7,043,777 | 1.76 |
| 16 | ஆசிறி ஸேர்ஜிகல் ஹொஸ்பிட்டல் லிமிட்டட் | 5,663,666 | 1.42 |
| 17 | அக்பர் பிறதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கணக்கு இல.1 | 5,565,653 | 1.39 |
| 18 | ஆர்பிகோ இன்சூரன்ஸ் லிமிடெட் | 3,797,512 | 0.95 |
| 19 | DFCC வங்கி PLC A/C 1 | 3,628,595 | 0.91 |
| 20 | சொப்ட்லொஜிக் லை/ப் இன்சூரன்ஸ் PLC-A/C NO. 04 (பங்கேற்பு நிதி) | 3,394,757 | 0.85 |

| பொதுமக்கள் வைத்திருப்பவை | இல் உள்ளவாறு 31/03/2024 |
|---|---|
| மிதப்புச் சீராக்க முறையிலான சந்தை மூலதனத் திரட்டல், இலங்கை ரூபாயில | 22,122,017 |
| பொதுமக்கள் வைத்திருக்கும் பங்குகளின் சதவீதம் | 81.44% |
| பொது பங்குதாரர்களின் எண்ணிக்கை | 11,464 |
| குறைந்தபட்ச பொதுப் பங்குரிமை நிபந்தனைக்கு வங்கி பணிந்தொழுகும் விருப்பத்தேர்வு | Option 1 |

| பங்கொன்றின் விலை | | |
|---|---|---|
| **இல் உள்ளவாறு** | **31/03/2024** | **31/12/2023** |
| பங்குகளின் எண்ணிக்கை | 399,464,362 | 399,464,362 |
| இறுதி விற்பனை விலை (ரூபா) | 68.00 | 64.90 |
| **முடிவடைந்த காலாண்டுக்கானது** | **31/03/2024** | **31/12/2023** |
| பங்கொன்றின் அதிகூடிய விலை (ரூபா) | 68.70 | 71.00 |
| பங்கொன்றின் அதிகுறைந்த விலை (ரூபா) | 59.80 | 59.00 |

## 8. 2024 மார்ச் 31இல் இருந்தவாறு, கடன்கள் மற்றும் முற்பணங்கள், கடப்பாடுகள், எதிர்பாராத பொறுப்புகள் மற்றும் சீரிழப்புகளின் பகுப்பாய்வு

| 8.1 பொருள் ரீதியாக மொத்தக் கடன்களும் வருமதிகளும | வங்க 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | வங்க 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 |
|---|---|---|---|---|
| **பொருள் ரீதியாக – உள்நாட்டு நாணயத்தில்** | | | | |
| காலக் கடன்கள் | 105,017,445 | 117,506,893 | 105,017,445 | 117,506,893 |
| நடுத்தரக்கால மற்றும் குறுகியகாலக் கடன்கள் | 68,696,405 | 62,250,769 | 68,696,405 | 62,250,769 |
| மேலதிகப் பற்றுகள் | 60,232,094 | 57,558,487 | 60,232,094 | 57,558,487 |
| வர்த்தக நிதி | 17,123,297 | 19,343,575 | 17,123,297 | 19,343,575 |
| நுகர்வோர் கடன்கள் | 48,908,479 | 49,429,148 | 48,908,479 | 49,429,148 |
| வருமதியான குத்தகை வாடகைகள் | 21,828,889 | 22,021,922 | 21,828,889 | 22,021,922 |
| வீடமைப்புக் கடன்கள் | 17,187,773 | 17,746,008 | 17,187,773 | 17,746,008 |
| இஸ்லாமிய வங்கிச் சேவை வசதிகள் | 13,690,202 | 12,996,626 | 13,690,202 | 12,996,626 |
| கடன் அட்டைகள் | 8,371,621 | 8,636,477 | 8,371,621 | 8,636,477 |
| AF கடன்கள் | 8,142,094 | 8,860,732 | 8,142,094 | 8,860,732 |
| ஊழியருக்கான கடன்கள் | 2,594,169 | 2,644,898 | 2,594,169 | 2,644,898 |
| அடகு வைத்தல் | 2,780,943 | 2,556,618 | 2,870,013 | 2,636,085 |
| **உப தொகை** | 374,573,411 | 381,552,153 | 374,662,481 | 381,631,620 |
| **பொருள் ரீதியாக – வெளிநாட்டு நாணயத்தில்** | | | | |
| காலக் கடன்கள் | 26,690,293 | 18,943,251 | 26,690,293 | 18,943,251 |
| மேலதிகப் பற்றுகள் | 7,537,775 | 9,573,648 | 7,537,775 | 9,573,648 |
| நடுத்தரக்கால மற்றும் குறுகியகாலக் கடன்கள் | 28,387,127 | 41,827,198 | 28,387,127 | 41,827,198 |
| வர்த்தக நிதி | 41,902,697 | 37,917,217 | 41,902,697 | 37,917,217 |
| இஸ்லாமிய வங்கிச் சேவை வசதிகள் | 6,453,257 | 6,184,949 | 6,453,257 | 6,184,949 |
| வீடமைப்புக் கடன்கள் | 59,681 | 69,968 | 59,681 | 69,968 |
| **உப தொகை** | 111,030,831 | 114,516,231 | 111,030,831 | 114,516,231 |
| **மொத்தத் தொகை** | 485,604,242 | 496,068,384 | 485,693,312 | 496,147,851 |

| 8.2 சீரிழப்புக்காகக் கவனத்திற்கு எடுக்கப்படும் கடப்பாடுகள் மற்றும் எதேச்சைச் செலவுகள், திட்ட ரீதியாக வங்கி வசதி ரீதியாக □ உள்நாட்டு நாணயம் | வங்க 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | வங்க 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 |
|---|---|---|---|---|
| உத்தரவாதங்கள் | 28,341,077 | 33,719,455 | 28,241,077 | 33,607,343 |
| செயற்பாட்டு முறிகள் | 9,572,417 | 10,458,016 | 9,572,417 | 10,458,016 |
| ஆவணப்படுத்திய கடன்கள் | 427,561 | 389,683 | 426,910 | 388,981 |
| ஏற்றுக்கொள்ளல்கள் | 325,995 | 211,343 | 325,995 | 211,343 |
| பெறப்படாத கடப்பாட்டுத் தொகைகள | 135,759,443 | 161,390,908 | 135,209,526 | 161,665,349 |
| **உப தொகை** | 174,426,494 | 206,169,405 | 173,775,926 | 206,331,032 |
| **பொருள் ரீதியாக - வெளிநாட்டு நாணயத்தில்** | | | | |
| உத்தரவாதங்கள் | 12,475,683 | 9,243,575 | 12,475,683 | 9,243,575 |
| செயற்பாட்டு முறிகள் | 2,920,758 | 3,566,902 | 2,920,758 | 3,566,902 |
| ஆவணப்படுத்திய கடன்கள் | 9,435,608 | 8,893,734 | 9,435,608 | 8,893,734 |
| ஏற்றுக்கொள்ளல்கள் | 7,730,810 | 6,302,605 | 7,730,810 | 6,302,605 |
| பெறப்படாத கடப்பாட்டுத் தொகைகள் | 934,207 | 1,181,758 | 1,681,692 | 1,181,758 |
| **உப தொகை** | 33,497,065 | 29,188,574 | 34,244,550 | 29,188,574 |
| **மொத்தத் தொகை** | 207,923,559 | 235,357,979 | 208,020,476 | 235,519,606 |

| | வங்க 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | வங்க 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 |
|---|---|---|---|---|
| **மொத்த கடன்களும் வருமதிகளும், கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராத செலவுகள்** | 693,527,801 | 845,430,865 | 693,713,788 | 846,244,643 |
| (கழிக்குக): கட்டம் 1இன் கீழ் திரண்ட சீரிழப்பு | 5,045,939 | 4,812,665 | 5,045,939 | 4,812,665 |
| கட்டம் 2இன் கீழ் திரண்ட சீரிழப்பு | 5,565,908 | 5,542,129 | 5,565,908 | 5,542,129 |
| கட்டம் 3இன் கீழ் திரண்ட சீரிழப்பு | 36,781,837 | 24,702,027 | 36,781,837 | 24,702,027 |
| **கடன்கள் மற்றும் முற்பணங்கள், கடப்பாடுகள், எதிர்பாராத செலவுகள் என்பவற்றின் நிகர பெறுமதி** | 646,134,116 | 810,374,043 | 646,320,103 | 811,187,821 |

| 8.3 காலப்பகுதியில் சீரிழப்பின் நகர்வு | வங்கி 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | வங்கி 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 |
|---|---|---|---|---|
| **கட்டம் 1இன் கீழ்** | | | | |
| ஜனவரி 01இல் மீதி | 4,751,122 | 4,812,665 | 4,751,122 | 4,812,665 |
| இலாபம் அல்லது நட்டம் அறிக்கைக்கான சாட்டுதல்/(பின்னெழுத்து) | 294,818 | (61,544) | 294,818 | (61,544) |
| காலப்பகுதியிலான பதிவழிப்பு | - | - | - | - |
| **முடிவு மீதி** | 5,045,939 | 4,751,122 | 5,045,939 | 4,751,122 |
| **கட்டம் 2 இன் கீழ்** | | | | |
| ஜனவரி 01இல் மீதி | 6,307,902 | 5,542,129 | 6,307,902 | 5,542,129 |
| இலாபம் அல்லது நட்டம் அறிக்கைக்கான சாட்டுதல்/(பின்னெழுத்து) | (741,993) | 765,772 | (741,993) | 765,772 |
| காலப்பகுதியிலான பதிவழிப்பு | - | - | - | - |
| **முடிவு மீதி** | 5,565,908 | 6,307,902 | 5,565,908 | 6,307,902 |
| **கட்டம் 3 இன் கீழ்** | | | | |
| ஜனவரி 01இல் மீதி | 34,009,586 | 24,702,027 | 34,009,586 | 24,702,027 |
| இலாபம் அல்லது நட்டம் அறிக்கைக்கான சாட்டுதல்/(பின்னெழுத்து) | 3,554,059 | 15,255,244 | 3,554,059 | 15,255,244 |
| காலப்பகுதியிலான பதிவழிப்பு | (781,808) | (5,947,685) | (781,808) | (5,947,685) |
| ஏனைய அசைவுகள் | - | - | - | - |
| **முடிவு மீதி** | 36,781,837 | 34,009,586 | 36,781,837 | 34,009,586 |

| 9. ஏனைய வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை - பொருள் ரீதியாக | வங்கி 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | வங்கி 31/12/2023 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/03/2024 இல் உள்ளவாறு ரூ.'000 | குழுமம் 31/12/2023 இல உள்ளவாறு ரூ.'000 |
|---|---|---|---|---|
| **திட்ட ரீதியாக - உள்நாட்டு நாணயத்தில்** | | | | |
| கோரல் வைப்புகள் | 35,248,722 | 33,683,062 | 35,242,125 | 33,678,136 |
| சேமிப்பு வைப்புகள் | 73,040,416 | 67,889,640 | 72,956,878 | 67,771,214 |
| கால வைப்புகள் | 349,052,901 | 335,388,665 | 348,750,861 | 335,143,112 |
| ஏனைய வைப்புகள் | 639,963 | 1,905,967 | 639,963 | 1,905,967 |
| **உப தொகை** | 457,982,002 | 438,867,333 | 457,589,827 | 438,498,429 |
| **திட்ட ரீதியாக - வெளிநாட்டு நாணயத்தில்** | | | | |
| கோரல் வைப்புகள் | 9,083,716 | 8,391,635 | 9,083,716 | 8,391,635 |
| சேமிப்பு வைப்புகள் | 23,078,116 | 27,403,358 | 23,023,208 | 27,396,399 |
| கால வைப்புகள் | 123,962,374 | 140,519,125 | 123,954,475 | 140,483,459 |
| ஏனைய வைப்புகள் | 289,580 | 462,548 | 289,580 | 462,548 |
| **உப தொகை** | 156,413,786 | 176,776,665 | 156,350,979 | 176,734,041 |
| **மொத்தம்** | 614,395,787 | 615,643,999 | 613,940,806 | 615,232,470 |

### தரப்படுத்திய, பிணையற்ற, கீழ்நிலைப்படுத்திய, மீட்கக்கூடிய தொகுதிக்கடன்கள

## தொகுதிக்கடன் குறித்த தகவல்கள் - வங்கி

| தொகுதிக்கடன் வகை | கொழும்பு பங்கு சந்தை பட்டியல் | வழங்கப்படக்கூடிய வட்டி மீடிறன் | 31 மார்ச் 2024 இல் இருப்பு மில்லியன் ரூபாய் | சந்தை பெறுமதி: அதிகூடிய ரூ. | சந்தை பெறுமதி: மிகக்குறைந்த ரூ. | சந்தை பெறுமதி: காலாண்டு ரூ. | வட்டி வீதம்: கூப்பன் வீதம் % | வட்டி வீதம்: செயற்திறனுடைய வருடாந்த விளைவு% | ஒப்பீட்டு பிணை மீதான % | இறுதி வர்த்தகம் மீதான ஏனைய விகிதம்: வட்டி விளைவு % | இறுதி வர்த்தகம் மீதான ஏனைய விகிதம்: முதிர்விற்கான ஈட்டம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **நிலையான விகிதம் - தொகுதிக்கடன நவம்பர் 2023**<br>A- டிசெம்பர் 2023/டிசெம்பர 2028<br>B - டிசெம்பர 2023/டிசெம்பர 2028 | பட்டியலிடப்பட்டவை<br>பட்டியலிடப்பட்டவை | வருடாந்தம்<br>காலாண்டுக்கு | 3,471<br>1,674 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை<br>குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை | | | 15.00<br>14.22 | 14.05<br>14.05 | 14.52<br>14.52 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில<br>குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில | |
| **நிலையான விகிதம் - தொகுதிக்கடன செப்டம்பர் 2021**<br>A- நவம்பர் 2021/நவம்பர் 2026<br>B- நவம்பர் 2021/நவம்பர் 2028 | பட்டியலிடப்பட்டவை | அரையாண்டு<br>அரையாண்டு | 8,195<br>121 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை<br>குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை | | | 11.90<br>12.00 | 11.66<br>11.73 | 11.14<br>11.61 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில<br>குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில | |
| **நிலையான விகிதம் - தொகுதிக்கடன மார்ச் 2020**<br>செப்டெம்பர் 2020/ செப்டெம்பர் 2025 | பட்டியலிடப்பட்டவை | வருடாந்தம | 6,804 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை | | | 9.50 | 9.16 | 6.57 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில | |
| **நிலையான விகிதம் - தொகுதிக்கடன டிசம்பர 2019***<br>A - மார்ச் 2019/மார்ச் 2024<br>B - மார்ச் 2019/மார்ச் 2024 | பட்டியலிடப்பட்டவை<br>பட்டியலிடப்பட்டவை | அரையாண்டு<br>வருடாந்தம | 1,327<br>4,918 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை<br>குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை | | | 13.50<br>13.95 | 13.16<br>13.15 | 11.04<br>11.04 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில<br>குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில | |
| **நிலையான விகிதம் - தொகுதிக்கடன டிசம்பர 2013**<br>D - டிசெம்பர் 2013/டிசெம்பர் 2025 | பட்டியலிடப்பட்டவை | வருடாந்தம | 3,704 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படவில்லை | | | 14.00 | 13.26 | 12.09 | குறித்த காலப்பகுதியில் வர்த்தகத்தில் | |
| **மொத்த தொகுதிக்கடன்கள்** | | | 30,214 | | | | | | | | |

**நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பி.எல்.சி**

**40, நவம் மாவத்தை, கொழும்பு 02. இலங்கை. தொலைபேசி: (94 11) 2448448 பக்ஸ்: (94 11) 2440262**

A - (lka)

Fitch Ratings Lanka Limited

துணை மருத்துவ சேவை

# குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கு தம்மை உள்வாங்கக் கோரி மகஜர் கையளிப்பு

**வாச்சிக்குடா விசேட நிருபர்**

துணை மருத்துவ சேவை குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டு உள்வாங்கப்படாமல் பாதிக்கப்பட்டுள்ள 317 பேர் தம்மை சேவையில் இணைக்க கோரி மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்களிடமே இவர்கள் மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

கடந்த 2021.01.01ஆம் திகதியிடப்பட்ட 2,209 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி குடும்பநல உத்தியோகத்தர் பதவி ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சைக்கு பலர் தோற்றியிருந்தனர்.

இவர்களுள் 2,836 பேர் தகுதியுடையவர்களாக கருதி 2021.12.22ஆம் திகதி சுகாதார அமைச்சின் வலையமைப்பில் பெயர் பதிவேற்றப்பட்டது. அதன் பின்னர் 2022.02.09ஆம் திகதி வெட்டுப்புள்ளி மதிப்பெண் அடிப்படையில் தகுதியுடையவர் பெயர்ப்பட்டியல் பயிற்சியில் இணைப்பதாக சுகாதார அமைச்சின் வலையமைப்பில் பதிவேற்றப்பட்டது. 2022.09.05ஆம் திகதி முதல் குழுவிலிருந்து வெட்டுப்புள்ளி மதிப்பெண் முன்னுரிமை அடிப்படையில் பயிலுநர்கள் தெரிவுசெய்யப்பட்டு, பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டனர். மீதி பயிலுநர்கள் இரண்டாவது குழுவில் பயிற்சிக்கு உள்வாங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த 03 வருடங்கள் 1,317 பயிலுநர்கள் பயிற்சிக்கு காத்திருக்கையில் தற்போது கடந்த 08ஆம் திகதி சுகாதார அமைச்சின் வலையமைப்பில் குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சியின் இரண்டாம் பகுதி தெரிவுப்பட்டியலில் 1,000 பயிலுநர்கள் தெரிவாகியுள்ளனர்.

இவரைகாலமும் இப்பயிற்சிக்கான விதிமுறைகளை தவறாது பேணியும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டும் காத்திருந்த மீதி 317 பயிலுநர்கள் பெயர்ப்பட்டியலில் உள்வாங்கப்படாமை தமக்கு கவலையாக உள்ளது. ஆகவே இந்தத் தொழிலுக்கு தம்மையும் கவனத்தில் கொண்டு இரண்டாம் பகுதி பயிற்சி ஆரம்பமாகும் காலத்தில் உள்வாங்க பரிந்துரை செய்யுமாறு, அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## நகர்வலம்

கல்முனையில்

# 'தென்னம்படல் மறைப்பு' நூல் வெளியீடு



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

கவிஞர், ஜனரஞ்சக எழுத்தாளர், கல்முனை றிஸ்வியூ முஹம்மத் நபீல் எழுதிய 'தென்னம்படல் மறைப்பு' அழியாத நினைவின் தடங்களை சாணம் மெழுகிய திண்ணையின் நடுவில் அமர்ந்து கேட்க வாருங்கள் எனும் நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை ஆஸாத் பிளாசா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அத்துடன் நிகழ்வில் கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.

# சுகாதார மேம்பாட்டு பயிற்சிப்பட்டறை

**மட்டக்களப்புகுறூப்நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சுகாதார மேம்பாட்டு பாடசாலைகளை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது தொடர்பாக இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது.

சுகாதார மேம்பாட்டுப் பிரிவு மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி முரளிஸ்வரன் தலைமையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இப்பயிற்சி பட்டறை நடைபெற்றது.

இதில் சுகாதார வைத்திய அதிகாரிகள், சிகிச்சையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், ஆரம்பப்பிள்ளை பராமரிப்பு உத்தியோகத்தர்கள், பாலர் பாடசாலை பணியக உத்தியோகத்தர்களாகிய பலர் கலந்து கொண்டனர்.

# விளைச்சலை அதிகரித்தல்; விழிப்புணர்வு நிகழ்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



ஆரையம்பதி விவசாய போதனாசிரியர் பிரிவிலுள்ள சிகரம் கிராமத்தில் மாமரச் செய்கையில் கத்தரித்தல் எனும் நடைமுறைகளினூடாக விளைச்சலை அதிகரிப்பது தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வு விவசாய திணைக்களத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.

ஆரையம்பதி விவசாய போதனாசிரியர் முபீதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விவசாய திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட விவசாய விரிவாக்கல் பிரதிப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன் உட்பட விவசாய போதனாசிரியர்கள், விவசாய கமநல அமைப்புகளின் பிரதிநிதிகளாகிய பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாமரச் செய்கையில் விளைச்சலை அதிகரித்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக விவசாய போதனாசிரியர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது விவசாய திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட விவசாய விரிவாக்கல் பிரதிப் பணிப்பாளர் எம்.பரமேஸ்வரன், விவசாய கமநல அமைப்புகளினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# ஆளுமை வளர்ச்சி பயிற்சிப்பாசறை



**பாலமுனை தினகரன் நிருபர்**

கிழக்கு இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ஆளுமை வளர்ச்சி பயிற்சிப் பாசறையும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

றிஸ்லி முஸ்தபா எடியுகேசன் எயிட் இன் அனுசரணையில் கிழக்கு இளைஞர் அமைப்பின் தலைவர் தானிஷ் ரஹுமத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மயோன் நிறுவனத்தின் பணிப்பாளர் றிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்ட இப்பயிற்சிப் பாசறையில் தலைமைத்துவ செயற்பாடு, ஒழுக்க விழுமியங்கள், சகோதரத்துவ பண்பாடு, தனிநபர் ஆளுமைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. பயிற்சி நிறைவின் போது பிரதம அதிதியினால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# பாவனைக்கு உதவாத உணவுகள் PHI யினரால் கைப்பற்றப்பட்டு அழிப்பு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள், வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவு வகைகள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுகளை வைத்திருந்த உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ.காதர் தெரிவித்தார்.கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீனின் அறிவுறுத்தலுக்கமைய பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்தியர் ஏ.எஸ்.எம்.பௌசாத்தின் பங்களிப்போடு கடந்த சனிக்கிழமை சோதனை நடத்தப்பட்டது. இதன்போது நுகர்வோருக்கு அசௌகரியம் ஏற்படுத்தக்கூடிய இவ்வாறான செயல்களை இனிவரும் காலங்களில் செய்ய வேண்டாமென்று வர்த்தகர்கள் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு அறிவுரை வழங்கியதாகவும் அவர் கூறினார். இச்சோதனை நடவடிக்கையில் அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி இஸ்மாயில் உட்பட சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இன்னிசை மாலை நிகழ்வு















அக்ஷரா – வீனஸ் இனிய இசையில் 67ஆவது 'தேனும் பாலும் கலந்து வசந்த கானங்கள் இன்னிசை மாலை' கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு 07 இல் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

IDM Nation Campus International கல்வி நிறுவனத்தின் பிரதான அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில்; பிரதம அதிதியாக IDM Nation campus இன் தலைவர் கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தியும் விஷேட அதிதிகளாக வீரகேசரி பத்திரிகையின் பிரதம நிறைவேற்று அதிகாரி முருகேசு செந்தில்நாதனும் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும், சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரும் ஜனனம் அறக்கட்டளையின் பணிப்பாளருமாகிய அதி வணக்கத் திற்குரிய பிதா அருட் கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோவும் சிறப்பு அதிதிகளாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பாலும் கலந்து கொண்டனர். இந்திப் பாடகர் அனுபா குணசேகரவும் இதில் கலந்து கொண்டு இந்திப் பாடல்களைப் பாடி சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கலைஞர்களும், ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

# வெசாக் தானம் வழங்கும் கலாநிதி ஜனகன்..!













வெசாக் தினத்தை முன்னிட்டு வெள்ளவத்தைகுரே வீதி பிரதான முற்றத்தில் (24) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வெசாக் அன்னதானம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஐ டி எம் ன் சி (IDMNC) சர்வதேச கல்வி நிறுவனத்தின் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி.வி.ஜனகன் அங்கு வருகை தந்தோருக்கு அன்னதானங்களை பகிர்ந்தளித்து வழங்கி வைத்தார்.

# பா.ஜ.க பெரும்பான்மை பெறத் தவறினால் இந்திய பங்குச் சந்தைகள் பெருவீழ்ச்சி!



இந்தியாவில் அடுத்த 5 வருடம் ஆட்சி யாருடைய கையில் இருக்கப்போகிறது? பி.ஜே.பி கூட்டணியா? INDIA கூட்டணியா? மக்கள் யார் பக்கம்?

இப்படி பல கேள்விகள் கேட்கப்பட்டு வரும் வேளையில் பொதுத்தேர்தல் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. இதேவேளையில் பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கின்றனர், ஏனென்றால் வந்த செய்தி அப்படிப்பட்டது.

2024 பொதுத்தேர்தலில் 6ஆம் கட்ட தேர்தல் மே 25 ஆம் தேதி முடிந்த நிலையில், ஜூன் 1 ஆம் திகதி கடைசிக் கட்டம் அதாவது 7ஆம் கட்ட தேர்தல் நடக்க உள்ளது. இந்த 7ஆம் கட்ட தேர்தல் 8 மாநிலத்தில் சுமார் 56 தொகுதிகளில் நடக்கிறது.

இந்த 7ஆம் கட்டத் தேர்தலில் பஞ்சாப், உத்தர பிரதேசம் மாநிலத்தில் 13, 12 தொகுதிகளில் தேர்தல் நடக்க உள்ளது. கடைசி கட்டம் என்பதால் தேர்தல் பிரசாரங்கள் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளன. குறிப்பாகச் சமீபத்தில் மோடியின் பேச்சு இணையவாசிகள் மத்தியில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. பீகார் பிரசாரத்தில் காங்கிரஸ் ராகுல் காந்தி, பிரதமர் நரேந்திர மோடியை மட்டும் அல்லாமல் அம்பானி, அதானியும் அவருடன் சேர்த்து விமர்சனம் செய்துள்ளது மக்கள் மத்தியில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது.

இத்தகைய சூழ்நிலையில் பொதுத்தேர்தல் முடிவுகள் பங்குச்சந்தையையும், பங்குச்சந்தை முதலீட்டாளர்களையும் எப்படிப் பாதிக்கும் என்பது குறித்து பிரபல முதலீட்டாளர் பேசியது கூடுதல் பீதியை ஏற்படுத்தியுள்ளது. லோக்சபா தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி கூட்டணி 250 இடங்களுக்குக் குறைவாக வெற்றி பெற்றால், பங்குச்சந்தை தடாலடியாக வீழ்ச்சியைச் சந்திக்கும் என பிரபல முதலீட்டாளர் ருசிர் சர்மா தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க 250 இடங்களைப் பெறத் தவறினால், பங்குச்சந்தை 1020 சதவீதம் வீழ்ச்சியடையக்கூடும் என்று அவர் கூறியது பல பங்குச்சந்தை முதலீட்டாளர்களை தூக்கிவாரிப்போட்டு உள்ளது. இந்திய பங்குச்சந்தை தொடர்ந்து வேகமாக வளர்ச்சி அடைந்து வந்த வேளையில், சமீபத்தில் 4 டிரில்லியன் டொலர் என்ற மாபெரும் சந்தை மதிப்பீட்டைத் தொட்டது. இதன் மூலம் உலகின்மிக விலையுயர்ந்த" பங்குச் சந்தைகளில் ஒன்றாக இந்தியாவின் மும்பை பங்குச்சந்தை திகழ்கிறது.

இதேவேளையில் தேர்தல் முடிவுகள் பங்குச்சந்தையில் பெரும் மாற்றம் ஏற்படும் என கணிப்புகள் இருப்பதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கடந்த ஒரு வாரமாக ப்ளூ சிப் பங்குகள் மீது முதலீடு செய்யும் போக்கு நிலவுகிறது. இதேபோல் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஸ்மால்கேப், மிட்கேப் பங்குகளில் முதலீடு செய்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.




## மிசோரத்தில் மண்சரிவில் சிக்கி 10 பேர் மரணம்!

மிசோரத்தில் கனமழை கொட்டி தீர்த்து வருகிறது. இதனால் கல்குவாரியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி, 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பலர் காணாமல் போய் உள்ளனர். மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

மிசோரத்தில் உள்ள ஐஸ்வால் மாவட்டத்தில் இடைவிடாத மழை பெய்து வருகிறது. கனமழைக்கு மத்தியில், கல்குவாரியில் மண்சரிவு ஏற்பட்டது. இதில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் சிக்கி உள்ளனர். இதனால் உயிரிழப்பு அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. மீட்புப் படையினர் மண்சரிவில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால், போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் அவதி அடைந்தனர். மழை காரணமாக, அனைத்து பள்ளிகளும் மூடப்பட்டன. அவசர தேவைகளுக்கு மட்டும் வெளியே வர வேண்டும். தேவையில்லாமல் வீடுகளை விட்டு வெளியே வருவதை மக்கள் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## பிணை நீடிப்புக்காக முட்டி மோதும் கெஜ்ரிவால்!

### உச்சநீதிமன்றம் அனுமதி மறுப்பு



தமக்கு வழங்கப்பட்ட இடைக்கால பிணையை நீடிக்கக் கோரி டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுவை அவசரமாக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்து விட்டது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி உரிய நேரத்தில் முடிவெடுப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் டெல்லி துணை முதல்வராக இருந்த மணீஷ் சிசோடியா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தெலுங்கானா எம்.எல்.சி.யான கவிதா கைது செய்யப்பட்டார். மேலும் ஆம் ஆத்மி கட்சியின் பெயரும் கூட டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கின் துணைக் குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டது.

இதே வழக்கில் டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலும் கைது செய்யப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர் லோக்சபா தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள இடைக்கால பிணை கோரி அரவிந்த் கெஜ்ரிவால் உச்சநீதிமன்றத்தை நாடினார். உச்சநீதிமன்றமும் ஜூன் 1 ஆம் திகதி வரை அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால பிணை வழங்கியது. ஜூன் 1 ஆம் திகதிக்குப் பின்னர் கெஜ்ரிவால் சரணடைந்து சிறைக்குப் போக வேண்டும் என்பதும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவாகும்.

இந்த நிலையில் தமது இடைக்கால பிணைக் காலத்தை மேலும் 1 வாரம் நீடிக்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் கெஜ்ரிவால் புதிய மனுவைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை அவசரமாக விசாரிக்கவும் கெஜ்ரிவால் தரப்பில் கோரப்பட்டது.

ஆனால் உச்சநீதிமன்றம் இதனை நிராகரித்துவிட்டது. உச்சநீதிமன்றத்தில் கெஜ்ரிவால் தரப்பில் நீதிபதிகளிடம் அவசர வழக்காக விசாரிக்க கோரப்பட்டது. ஆனால் இதனை நீதிபதிகள் ஏற்க மறுத்தனர். மேலும் இந்த வழக்கை விசாரிப்பது தொடர்பாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிதான் முடிவெடுப்பார் எனவும் நீதிபதிகள் தெரிவித்துவிட்டனர். இதனால் கெஜ்ரிவாலின் இடைக்கால பிணைக் காலம் நீடிக்கப்படுமா? இல்லையா? என்பது புரியாத புதிராக இருந்து வருகிறது.

## எடியூரப்பா மீது பாலியல் புகார் அளித்த பெண் திடீர் மரணம்!



பா.ஜ.க மூத்த தலைவரான எடியூரப்பா, கர்நாடகா மாநிலத்தின், முதல்வராக மூன்று முறை பதவி வகித்துள்ளார். இவர் 17 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக இவர் மீது கடந்த மார்ச் 15ஆம் திகதி பெங்களூர் சதாசிவ நகர் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது.

அதன்படி, பாலியல் தொல்லைக்கு ஆளானதாக கூறப்படும் 17 வயது சிறுமியின் தாயார் காவல்நிலையத்தில் அளித்த புகாரில், 'கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி தனது மகளுடன், முன்னாள் முதல்வர் எடியூரப்பாவை கல்வி உதவித் தொகை தொடர்பாக சந்திக்க சென்றதாகவும், அப்போது தனது மகளை தனியாக அழைத்து சென்று எடியூரப்பா பாலியல் தொந்தரவு செய்ததாகவும் கூறப்பட்டது.

இந்தப் புகாரின் அடிப்படையில், பெங்களூர் சதாசிவ நகர் காவல்நிலையத்தில் எடியூரப்பா மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், எடியூரப்பா பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்பட்டு அவர் மீது போக்சோ வழக்கு தொடர்ந்த 17 வயது சிறுமியின் தாயாரான 54 வயது பெண் 26.05.2024 அன்று திடீரென்று உயிரிழந்தார். இது குறித்த விசாரணையில், 17 வயது சிறுமியின் தாயார், நுரையீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வந்துள்ளார். இதனால், கடந்த சில நாட்களுக்கு முன்பு அவருக்கு மூச்சுதிணறல் ஏற்பட்டதால் உளிமாவு அருகே உள்ள பன்னரகட்டா பகுதியில் ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில், அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார்.

## தமிழ்நாட்டில் கழுதைப்பால் விற்பனை களைகட்டுகிறது!



தமிழ்நாடு நிலக்கோட்டை பகுதியில் கழுதைப்பால் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. இதன்படி ஒரு லீட்டர் ரூ.14,000 இற்கு விற்பனை செய்யப்படுகிறது. நிலக்கோட்டை அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தினமும் காலை நேரத்தில் கழுதைப்பால் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது.

ஒரு காலத்தில் பொதி சுமப்பதற்காகவும், மலைப்பகுதிகளில் பாரம் எடுத்துச்செல்லவும் மட்டுமே உபயோகப்படுத்தப்பட்ட கழுதைகள் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளன. கழுதைப்பால் மருத்துவ குணம் கொண்ட பால் என கூறப்படுவதால், அதன் உரிமையாளர்கள் ஆடு, மாடுகள் போல் வளர்த்து வருகின்றனர்.

இவற்றின் பாலை விற்பனை செய்வதற்காகவே, அதிக எண்ணிக்கையில் வளர்த்து வருகின்றனர்.

இந்தக் கழுதைகளை கூட்டம் கூட்டமாக பல்வேறு பகுதிகளுக்கும் அழைத்து சென்று, அவற்றின் பாலை விற்று வருமானம் ஈட்டி வருகின்றனர்.

கழுதைப்பால் குடித்தால் சமிபாட்டுக் கோளாறுகள் நீங்கும், மஞ்சள் காமாலை, டெங்கு, நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிறந்த எதிர்ப்பு சக்தியை வழங்கும் என்பதுடன் இதில் அதிக ஊட்டச்சத்து உள்ளதாக கூறி கழுதைப்பால் விற்பனையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கழுதைப்பால் கேட்கும் பொதுமக்களுக்கு, உடனடியாக அந்த இடத்திலேயே பாலை கறந்து தருகிறார்கள். இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் ஆர்வமாக பாலை வாங்கி குழந்தைகளுக்குத் தருகின்றனர். இதன் மூலம் ஒரு லீட்டர் கழுதைப்பால் ரூ.14 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது.

பசும்பாலை விட கழுதைப்பால் விலை பல மடங்கு அதிகமாக இருந்தாலும், ஒரு நாளைக்கு 1 லீட்டர் வரை விற்பனையாவதாக கழுதை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன்படி மாதந்தோறும் இவர்கள் இலட்சகணக்கான ரூபாய் வருமானம் ஈட்டுகின்றனர்.

இதற்கிடையே கழுதைப்பாலில் நோய் எதிர்ப்புச் சக்தி இருப்பதாக, இதுவரை எந்த மருத்துவரும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## மறைந்த ஈரான் ஜனாதிபதிக்கு புத்தளத்தில் அனுதாபம் தெரிவிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



அண்மையில் மரணமான ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்காக புத்தளத்தில் வாழுகின்ற மக்களும் தமது அனுதாபங்களை தெரிவித்தனர்.

முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.ஐ. இல்யாஸின் தலைமையில் புத்தளம் கலாசார அமைப்பு ஏற்பாடு செய்த அனுதாப கையொப்பங்களை பெறும் செயற்திட்டமொன்று வெள்ளிக்கிழமை (25) புத்தளம் நுஹ்மான் மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், புத்தளம் நகர சபை முன்னாள் உறுப்பினர் ஜமீனா இல்யாஸ், ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளரும், உயர்பீட உறுப்பினருமான சப்வான் சல்மான், புத்தளம் தொகுதி அமைப்பாளர் எப்.எம்.றாபி உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், உலமாக்கள், கல்விமான்கள், ஊடகவியலாளர்கள், இளைஞர், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டு தமது அனுதாப குறிப்பினை பதிவு செய்து கையொப்பங்களை பதிவிட்டனர். இவ்வாறு பெறப்படுகின்ற இந்த கையொப்பங்களை இலங்கையில் உள்ள ஈரான் தூதுவர் ஆலயத்தின் ஊடாக ஈரான் நாட்டின் பதில் ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## நுவரெலியாவில் மரம் முறிந்து வீழ்ந்து வீடு தீப்பிடித்தது!



சீரற்ற காலநிலை காரணமாக கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய மோசமான காலநிலை ஏற்பட்டுள்ளது. நுவரெலியா பம்பரகலை பகுதியில் நேற்று காலை (28) வீடொன்றின் மீது மரம் முறிந்து விழுந்தமையால் அவ்வீட்டுக்கு செல்லும் மின்வயர் அறுந்து விழுந்து வீடு தீப்பிடித்துள்ளது.

இதனால் வீட்டின் உள் பகுதி முழுமையாக எரிந்துள்ளதுடன் இலத்திரனியல் பொருட்கள் உட்பட அதிகமான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

வீட்டில், வசிப்பவர்கள் வெளியில் சென்றிருந்த சமயம் வீட்டின் அருகாமையிலிருந்த மரமொன்று காற்றின் வேகத்தாலும் மழையின் தாக்கத்தாலும் வீட்டின்மேல் விழுந்தமையால் வீட்டிற்கு செல்லும் மின்வயர் அறுந்து விழுந்து ஏற்பட்ட மின்கசிவு காரணமாக திடீரென வீடு தீ பற்றி எரிந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தீப்பரவலுக்கு மின் ஒழுக்கே காரணம் என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

தீயினை அயலவர்களின் உதவியுடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர்.

## இலங்கை சமூக சக்தி அறிமுக விழா



இலங்கை சமூக சக்தி அறிமுக விழா நேற்றுமுன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷின் புதல்வன் ஷேன் பிரதிஸ் தலைமையில் பதுளை தபால் கந்தோர் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் கலந்து கொண்டதுடன் பெற்றோர் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந் நிகழ்வில் கலை கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

இதன்போது 360 பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் 16 விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## இரத்தினபுரி மாவட்டத்துக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



இரத்தினபு ரி மாவட்டத்தின் ப ல பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

களு கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதையடுத்தே, வெள்ள அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன்படி, இரத்தினபுரி, பெல்மதுல்ல, நிவித்திகல, எலபாத்த, குருவிட்ட மற்றும் கிரியெல்ல பிரதேச செயலக பிரிவுகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆறுகளை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்கள், தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்கள் மற்றும் ஏற்கனவே வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட பகுதிகளிலுள்ள மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

## கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் த. அரியரத்தினம் தலைமையில் இன்று 29ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "சமூக மேம்பாட்டில் ஆரோக்கியத்தின் வகிபாகம்'' எனும் தலைப்பில் விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி விக்னவேணி செல்வநாதன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## நாச்சியாதீவு பிரதேசத்தில் இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்ட நாச்சியாதீவு பிரதேசத்தில் குறிப்பாக இரவு நேரங்களில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் பலர் பாதிப்புக்கு உள்ளாகி வருவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக மாணவர்கள் உட்பட வியாபார நிலையங்களும் இதனால் பாதிப்புக்குள்ளாவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி இவ்வாறான நிலைமை இப்பிரதேசத்தில் ஏற்பட்டு வருவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது பற்றிய கூடிய அக்கறை கொண்டு சீரான மின் விநியோகத்துக்கு உதவுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இலங்கை இளையோர் அணி அடுத்த மாதம் இங்கிலாந்திற்கு சுற்றுப்பயணம்



இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு நான்கு நாள் போட்டிகளில் ஆடவுள்ளது.

நமீபியா மற்றும் சிம்பாப்வேயில் எதிர்வரும் 2026 இல் நடைபெறவுள்ள 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்திற்கான அணியை தயார்படுத்துவதன் ஓர் அங்கமாகவே இந்த சுற்றுப்பயணம் இடம்பெறவிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி அடுத்த மாத கடைசியில் இங்கிலாந்து செல்லும் இலங்கை இளையோர் அணி எதிர்வரும் ஜூன் 25 ஆம் திகதி 50 ஓவர் பயிற்சிப் போட்டி ஒன்றில் ஆடவுள்ளது. லொன்பிரோ பல்கலைக்கழக மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஜூன் 28 ஆம் திகதி முதலாவது ஒருநாள் போட்டி செல்ப்ஸ்போர்ட்டில் பகலிரவு போட்டியாக நடைபெறவுள்ளதோடு இரண்டு மற்றும் மூன்றாவது ஒருநாள் போட்டிகள் எதிர்வரும் ஜூலை 1 மற்றும் 3 ஆம் திகதிகளில் ஹோவில் நடைபெறவுள்ளது.

இலங்கை மற்றும் இங்கிலாந்து இளையோர் அணிகள் ஆடும் முதலாவது நான்கு நாள் போட்டி வோம்ஸ்லியில் ஜூலை 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இரண்டாவது போட்டி ஜூலை 16 முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த சுற்றுப்பயணத்திற்கான அணித் தேர்வு பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான பயிற்சிப் போட்டிகளை நடத்த வினோதன் ஜோன் தலைமையிலான தேசிய கனிஷ்ட தேர்வுக் குழு திட்டமிட்டுள்ளது.

# சீன மெய்வல்லுனர் போட்டியில் அருண தர்ஷனவுக்கு தங்கம்



சீனா வில் நடைபெறும் இரண்டாவது பெல்ட் அன்ட் ரோட் அழைப்பு மெய்வல்லுனர் சம்பியசிப் போட்டியில் இலங்கையின் ஓட்ட வீரர் அருண தர்ஷன 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் நேற்று (28) தங்கப்பதக்கம் வென்றார்.

இறுதிப் போட்டியில் அவர் 45.48 விநாடிகளில் போட்டித் தூரத்தை நிறைவு செய்து முதல் இடத்தை பிடித்தார். அவர் இந்தப் போட்டியில் ஆரம்பம் தொடக்கம் முன்னிலையில் இருந்து போட்டியில் வெற்றி பெற முடிந்தது.

நேற்று முன்தினம் இந்தப் போட்டியின் ஆண்களுக்கான 400 மீற்றர் ஆரம்ப சுற்றில் அருண 46.62 விநாடிகளில் நிறைவு செய்து வெற்றியீட்டினார். இந்தப் போட்டி உலக மெய்வல்லுனர் போட்டிகளில் சி பிரிவிலான போட்டியாகவே நடைபெற்றது.

இந்த ஆண்டில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிக்கு தகுதி பெறும் நோக்கில் அருண இந்தப் போட்டியில் பங்கேற்றபோதும் அவரால் தகுதி மட்டத்தை எட்ட முடியாமல்போனது. என்றாலும் அவர் போட்டியில் பெற்ற வெற்றியினால் பெற்ற புள்ளிகள் தகுதி பெறுவதற்கான தரப்படுத்தலில் முன்னேறுவதற்கு உதவியது.

அருண நேற்று 200 மீற்றர் ஆரம்ப சுற்றிலும் பங்கேற்றிருந்தார். இதில் அவர் போட்டியை 21.23 விநாடிகளில் நிறைவு செய்து வெற்றி பெற்றார். ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று (29) நடைபெறவுள்ளது.



## சர்வதேச செய்திகள்

# சர்வதேச கண்டனங்களுக்கு மத்தியிலும் ரபாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்

## ஆயிரக்கணக்கான மக்கள் தப்பி ஓட்டம்

ரபாவில் அடைக்கலம் பெற்றுள்ளவர்கள் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 45க்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் வெளியான நிலையிலும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகின்றன.

இந்த சம்பவம் ஒரு 'சோகமான விபத்து' என்று குறிப்பிட்டிருக்கும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'அனைத்து இலக்குகளும் எட்டப்படுவதற்கு முன்னர் போரை முடிவுக்குக் கொண்டுவர நான் எதிர்பார்க்கவில்லை' என்றார்.

காசா மக்கள் தொகையில் பெரும்பாலானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு நகரான ரபா மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தாக்குதலிலே பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. இதில் அதிகமானோர் தீக்காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை அல்ஜீரியாவின் கோரிக்கையின் பேரில் நேற்று அவசரக் கூட்டத்தை நடத்திய ஐ.நா செயலாளர் நாயகம் அட்டோனியோ குட்டரஸ் திங்கட்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், இந்தத் தாக்குதலால் 'கொடிய மோதலில் இருந்து அடைக்கலம் பெற்றிருந்த கணிசமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்' என்றார்.

'காசாவில் ஒரு பாதுகாப்பான இடம் கூட இல்லை. இந்தப் பயங்கரம் நிறுத்தப்பட வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், எகிப்து, துருக்கி, கட்டார் என பல நாடுகளும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் பேசிய நெதன்யாகு, 'ரபாவில் ஏற்கனவே போரிடாத ஒரு மில்லியன் பொதுமக்கள் அப்புறப்படுத்தப்பட்டிருப்பதோடு போரிடாதவர்களை காயப்படுத்தாமல் இருக்க நாம் கடுமையாக முயன்றாலும் துரதிருஷ்வசமாக ஏதோ தவறு நிகழ்ந்துள்ளது' என்றார்.

ஏற்கனவே ரபா மீதான தாக்குதலை நிறுத்தும்படி சர்வதேச நீதிமன்றம் இஸ்ரேலுக்கு உத்தரவு பிறப்பித்தபோதும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. ரபா நகரின் வடமேற்காக டால் அல் சுல்தான் பகுதியில் ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணி நிறுவனத்திற்கு அருகில் இடம்பெயர்ந்த மக்களுக்கான கூடாரங்களை இலக்கு வைத்து நேற்று நடத்திய செல் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

ரபா நகரில் மேற்கில் உள்ள குடியிருப்புக் கட்டடம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

ரபாவில் உள்ள சொரோப் சுற்றுவட்டப்பாதையைச் சூழ இஸ்ரேலிய டாங்கிகள் கடும் குண்டுமழை பொழிந்ததோடு சம காலத்தில் துப்பாக்கிச் சத்தங்கள் மற்றும் இஸ்ரேலிய ஆளில்லா விமானங்களின் தாக்குதல்களும் தீவிரம் அடைந்திருந்ததாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலிய டாங்கிகள் ரபா நகர மையத்தை அடைந்திருப்பதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் நேற்று தெரிவித்தது. மத்திய ரபா பகுதியில் அல் அவுதா பள்ளிவாசலுக்கு அருகில் டாங்கிகளை காண முடிவதாக பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு சுற்றுப்புறங்களை நோக்கி முன்னேறிய இஸ்ரேலிய டாங்கிகள் மேற்கு ரபாவின் சுருப் மலைப் பகுதியில் நிலைகொண்டு இரவு முழுவதும் தாக்குதல்களை நடத்தியதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். சுருப் பகுதியில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் ஹமாஸ் போராளிகள் கடும் மோதலில் ஈடுபட்டதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் எகிப்துடனான ரபா எல்லைக் கடவையை இஸ்ரேலிய இராணுவம் கைப்பற்றி





யது தொடக்கம் அதன் டாங்கிகள் ரபா விளிம்புகளில் நிலைகொண்டிருந்ததோடு கிழக்கு மாவட்டங்கள் சிலதில் முன்னேற்றம் கண்டுள்ளன. எனினும் அந்த நகரில் முழு அளவில் அந்தப் படை இன்னும் நுழையவில்லை என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வடக்கில் மோதல்

காசாவில் இஸ்ரேலிய படை நுழையாத ஒரே பிரதான நகராக இருக்கும் ரபாவில் தாக்குதல் உக்கிரமடைந்த நிலையில் அங்கிருக்கும் மக்கள் மீண்டும் ஒருமுறை வெளியேற ஆரம்பித்துள்ளனர். நேற்று சூரியோதயத்தை அடுத்து டால் அல் சுல்தான் பகுதியில் இருந்து மக்கள் கார்கள், ட்ரக்குகள் மற்றும் கழுதை மற்றும் குதிரை வண்டிகளை பயன்படுத்தி வடக்கை நோக்கி வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

மேற்கு ரபாவின் டால் அல் சுல்தான் பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளரான காலித் மஹ்மூம் தமது வேதனையை வெளியிட்டிருந்தார்.

'எமது கூடாங்களில் குண்டுகள் விழுந்து வருகின்றன. குழந்தைகள் அச்சத்தில் உள்ளார்கள். எனது சுகவீனமுற்ற தந்தையால் இரவில் தப்பிச் செல்ல முடியாது. இஸ்ரேல் கூறுவது போல் நாம் பாதுகாப்பு வலயத்திலேயே இருக்கிறோம். யாரும் எம்மை காப்பற்ற முன்வராவிட்டார் நாம் உயிர் ஆபத்தில் இருக்கிறோம்' என்றார்.

இந்நிலையில் ரபா மீது இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பித்த கடந்த மூன்று வாரங்களில் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தொட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் நிவாரண அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமிலும் கடும் மோதல் நீடிருத்து வருகிறது. இந்தப் பகுதியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாக போர் ஆரம்பித்த தொடக்கத்திலேயே இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டபோதும் அங்கு மீண்டும் படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஹமாஸின் மூன்று படைப்பிரிவுகள் ஜபலியா முகாமை காத்து வருவதாக போர் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதனை இஸ்ரேலிய இராணுவம் தற்போது புரிந்துகொண்டிருப்பதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட போர் ஆய்வுக்கான நிறுவனம் மற்றும் சீ.டீ.பி. அமைப்பு தெரிவித்துள்ளது.

வடக்கு காசா மற்றும் காச நகரில் இருந்து ஹமாஸின் 12 படைப் பிரிவுகளும் செயலிழக்கச் செய்யப்பட்டதாக இஸ்ரேலிய போர்க்கால அமைச்சரவை முன்னதாக தொடர்ந்து கூறி வந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு காசாவில் கமால் அத்வான் மருத்துவமனைக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் காசாவில் 46 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்மூலம் கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 36,096 ஆக உயர்ந்துள்ளது.

ரபா எல்லைக் கடவையை கைப்பற்றிய இஸ்ரேல் அங்கிருந்து உதவிகள் வருவதை முடக்கியுள்ளது. இந்நிலையில் கடந்த 12 நாட்களாக சுகாதார நிலையங்களுக்கு மருந்து விநியோகங்கள் கிடைக்கவில்லை என்றும் குறிப்பாக நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் மற்றும் வலிப்பு நோய் மருந்துகள் இன்றி சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா. இணைப்பகம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

'காசா மக்கள்தொகையில் ஐந்து வீதமானவர்கள் கொல்லப்பட்டு, காயமடைந்து அல்லது காணாமல்போயுள்ளனர். குறைந்தது 3,000 பெண்கள் விதவைகளாக்கப்பட்டு, 10,000 சிறுவர்கள் அனாதையாக்கப்பட்டு, 17,000 சிறுவர்கள் பாதுகாவலர் அற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமது வீடுகளை இழந்திருப்பதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.'

### பலஸ்தீன அங்கீகாரம்

இதேவேளை முன்னர் அறிவித்தது போன்று ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நோர்வே நாடுகள் நேற்று பலஸ்தீன நாட்டை உத்தியோகபூர்வமான அங்கீகரித்தன. தேசிய தொலைக் காட்சியில் தோன்றிய ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்சஸ், 'பலஸ்தீன அரசை அங்கீகரிப்பது என்பது வரலாற்று நீதிக்கான விடயம் மாத்திரமன்றி, நாம் அனைவரும் அமைதியை காண வேண்டுமானால் கட்டாயமான ஒன்றாகவும் உள்ளது' என்றார்.

'அமைதியான எதிர்காலத்தை அடைவதற்கான ஒரே சாத்தியமான வழி என நாம் அனைவரும் அங்கீகரிக்கும் தீர்வை நோக்கி நகர்வதற்கான ஒரே வழி இதுதான்: பலஸ்தீன அரசு இஸ்ரேல் அரசுடன் அமைதி மற்றும் பாதுகாப்புடன் அருகருகே இருக்க வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. அங்கத்துவ நாடுகளில் 140க்கும் அதிகமான நாடுகள் பலஸ்தீன நாட்டை அங்கீகரித்தபோதும் ஐரோப்பாவில் சொற்ப நாடுகளே அந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய படையுடனான மோதலில் எகிப்து வீரர் பலி



காசாவுடனான ரபா எல்லை பகுதியில் எகிப்து மற்றும் இஸ்ரேலிய துருப்புகளுக்கு இடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் எகிப்து வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் எகிப்து மற்றும் இஸ்ரேல் நிர்வாகங்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

துப்பாக்கிச் சண்டை தொடர்பில் இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டபோதும் அது தொடர்பில் மேலதிக விபரங்கள் வெளியாகவில்லை. இதில் இஸ்ரேலிய தரப்பில் பாதிப்பு ஏற்படவில்லை.

எகிப்துடனான ரபா எல்லைக் கடவையில் காசா பக்கத்தை இஸ்ரேல் மூன்று வாரங்களுக்கு முன்னர் கைப்பற்றியதைத் தொடர்ந்து எகிப்து மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பதற்ற சூழல் அதிகரித்துள்ளது. ரபாவில் உள்ள அகதிகள் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 45க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதற்கு எகிப்து வெளியுறவு அமைச்சு கண்டனத்தை வெளியிட்டிருந்த நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

1979 இல் எகிப்து மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் அமைதி உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானதோடு அது தொடக்கம் இரு தரப்புக்கும் இடையே பாதுகாப்பு விவகாரங்களில் ஒத்துழைப்பு நிலவி வருகிறது. குறிப்பாக எகிப்து மற்றும் காசா எல்லை தொடர்பில் இரு தரப்பும் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 29ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–05–29

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை **(e-GP)** முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு **011 -2635886/071-1525234** எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும். | | | | | | | |
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| **01** | நுவரெலியா விடுமுறை பங்களாவிற்கு முன்மொழியப்பட்ட வேலியை நிர்மாணித்தல் மற்றும் படலையைப் பொருத்துதல்<br>ஒப்பந்த இல: **C/P&D/WORK/CBF/NUWARAELIYA – CIRCUIT BUNGALOW/2024/02** | 12,500/- + VAT ** | ரூபா 60,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 13.9 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 12/06/2024 பி.ப. 2.00 |
